விலை ரூபா: 20.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபத்து நான்கு

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 15 வெள்ளிக்கிழமை (27.04.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி. 130

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பு!

## பாண் 100 ரூபாயாக உயரும்?

(கொழும்பு)

கோதுமை மா கிலோ கிராம் ஒன்றின் விலை ரூ.8.50 இனால் அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்றுமுதல் இவ்விலை அதிகரிப்பு அமுலுக்கு வந்துள்ளது. இதன்படி கோதுமை மாவின் புதிய விலை ரூ.79.50 ஆக இருக்கும். இதேவேளை, கோதுமை மாவின் விலை இவ்வாறு அதிகரிக்குமாயின் பாணின் விலை 100 ரூபாயாக உயரும் வாய்ப்பு உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (24ஆம் பக்கம் பார்க்க)

## டெண்டுல்கர் எம்.பியாக நியமனம்

(டில்லி)

இந்தியாவின் நாடாளுமன்ற மாநிலங்களவைக்கான (ராஜ்ய சபா) நியமன உறுப்பினராக இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.



நேற்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்த வேளையில் நாடாளுமன்ற ராஜ்ய சபா உறுப்பினர் பதவியை பிரதமர் வழங்கியதாகவும், அதை சச்சின் டெண்டுல்கர் ஏற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழம் குறித்துப் பேசும் தகுதி கருணாநிதிக்கு கிடையாது

### வைகோ குற்றச்சாட்டு



(தர்மபுரி)

தமிழீழம் குறித்து பேசுவதற்கு தி.மு.கவின் தலைவர் கருணாநிதிக்கு எவ்வித தகுதியும் இல்லை என ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வைகோ குற்றம் சுமத்தியுள்ளார்.

தமிழீழத்தை அமைப்பது தொடர்பில் தி.மு.கவின் தலைவர் கருணாநிதி அண்மையில் தொடர்ந்து கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார். (23ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு நடவடிக்கையிலிருந்து முப்படையினரும் வெளியேறுவர்

### பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இருந்து முப்படையினர் பகுதி பகுதியாக வெளியேற்றப்படுவதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையை சாதாரண நாடாக மாற்றுவதே எங்களுக்கு முக்கிய குறிக்கோளாக உள்ளது. பொது மக்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக முப்படையினரை வெளியேற்றுகின்றோம்.

வீதிப் பாதுகாப்புக்கள் அகற்றப்படுகின்றன, சுற்றி வளைப்பு நடவடிக்கைகள் குறைக்கப்படுகின்றன, அவசர காலச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாட்டின் சமாதானம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை நிலை நிறுத்த (23ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு கிலோ கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஒரு கிலோகிராம் கஞ்சாவினை தன் வசம் வைத்திருந்த நபரொருவரினை இளவாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இளவாலையில் 5 இலட்சத்துக்கும் அதிக பெறுமதியுடைய ஒரு கிலோகிராம் கஞ்சாவினை நபரொருவர் வைத்துள்ளார் என பொலிஸாருக்கு கிடைத்த ரகசியத் தகவலின் (24ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்ற விசாரணைக்கு ஆதாரங்கள் சிக்கியுள்ளன

### அசோசியேட்டர் பிரஸ் தெரிவிப்பு

(வன்னி)

வன்னியில் அரச படைகளால் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின் போது கொத்தணிக் குண்டுகள் பாவிக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அசோசியேட்டட் பிரஸ் நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா.கண்ணிவெடி அகற்றும் நிபுணர் குழு வட பகுதியில் வெடிக்காத நிலையில் இக் கொத்தணிக் குண்டுகளை கண்டுபிடித்துள்ளதாக இச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிலக் கண்ணிவெடி அகற்றும் நிபுணர் அலன் போஸ்டனை மேற்கோள்காட்டி இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொத்தணிக் குண்டுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் தொடர்ச்சியாக மறுத்து வந்த நிலையில் யுத்தத்தின் போது இக் குண்டுகள் பாவிக்கப்பட்டமையை ஐ.நா.நிபுணர் (02ஆம் பக்கம் பார்க்க)

### வழிபாட்டுத் தலங்கள் அழிப்பு

## வவுனியா வர்த்தகர்கள் இன்று கதவடைப்பு போராட்டம்

(பூந்தோட்டம்)

சிறுபான்மை இனமக்களின் வழிபாட்டுதலங்கள் மற்றும் முக்கிய இடங்களைதீய சக்திகள் சில அழிக்க முயற்சிப்பதை கண்டித்து வவுனியா வர்த்தகர்கள் இன்று வெள்ளிக்கிழமை முழு கடையடைப்பில் ஈடுபடுமாறு வவுனியா மாவட்ட வர்த்தகர்கள் சங்கம் அனைத்து வர்த்தகர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் வர்த்தகர் சங்கத்தினர் துண்டுப்பிரசுரம் ஒன்றினையும் வெளியிட்டுள்ளனர். அத்துண்டு பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

சிறுபான்மை இன மக்களின் வழி பாட்டுத் தலங்கள் மற்றும் (02ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் எம்.பிக்கு யாழில் கறுப்புக் கொடி

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் நினைவுரையாற்ற வந்த மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரைக்கு யாழ்ப்பாணத்தில் கறுப்புக் கொடி காட்டப்பட்டுள்ளது.

தந்தை செல்வாவின் 35 ஆவது நினைவு நாள் அஞ்சலியும், நினைவுரையும் நேற்று யாழ்ப்பாண தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழுத் தலைவர் அருட்கலாநிதி சு.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நினைவு நாள் நிகழ்வில் தந்தை செல்வாவின் நினைவுரையாற்ற மட்டக்களப்பு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராசதுரை அழைக்கப்பட்டிருந்தார்.

இதற்கு (24ஆம் பக்கம் பார்க்க)

## புலித்தேவனின் சகோதரன் உட்பட

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதான இருவருக்கு விடுதலை

கடற்புலிகளின் விசேட கொமாண்டோ பயிற்சியும், ஆயுதப் பயிற்சியும், அரசியல் நகர்வு தொடர்பான பயிற்சியும் பெற்றனர் என்ற இருவேறு குற்றச்சாட்டில் பயங்கர வாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இருவர் யாழ். மேல் நீதிமன்றத்தினால் குற்றமற்றவர்கள் என தீர்ப்பளித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்டவர்களில் ஒருவர் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான புலித்தேவனின் சகோதரரான புலிமாறன் என அழைக்கப்படும் சீவரத்தினம் பால தயாகரன் (வயது 41) என்பவராவார்.

கிளிநொச்சி தொண்டமான் நகரினைச் சேர்ந்த குறித்த நபர் 2009ஆம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி முள்ளிவாய்க்காலில் வைத்து பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

இவருக்கு எதிராக ஆயுதப் பயிற்சியும் அரசியல் நகர்வு தொடர்பான பயிற்சியும் விடுதலைப் புலிகளின் அமைப்பில் இருந்து பெற்றுக் கொண்டார் எனக் குற்றம் சாட்டப்பட்டு இவரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தினை சான்றாகக் கொண்டு யாழ்.மேல் நீதிமன்றில் 2011 ஆம் ஆண்டு 10-ம் மாதம் 12-ம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கு கடந்த மாதம் யாழ்.நீதிபதி ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குறித்த நபரினால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் இவரினால் சுய விருப்பத்தின் பேரில் வழங்கப்படவில்லை எனவும் கட்டாயப் படுத்தியே பெறப்பட்டது எனவும் கூறப்பட்டு- நிராகரிக்கப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காகவும் சட்டமா அதிபரின் ஆலோசனைக்காகவும் நேற்றுவரை வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்று இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த நபருக்கு எதிராக வேறு சான்றுப் பொருட்கள் காணப்படாமையினாலும் இவருக்கு எதிரான குற்றச்சாட்டு நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்கப்படாமையாலும் குறித்த நபர் விடுதலை செய்யப்பட்டார்.

இதேவேளை 1994 -97 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வடமராட்சி நாகர்கோவில் பகுதியில் கடற்புலிகளால் விசேட கொமாண்டோ பயிற்சி பெற்றவர் என பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் 2009ஆம் ஆண்டு தை மாதம் 21-ம் திகதி கொழும்பில் வைத்து வில்லியம் மங்களதாஸ் (வயது 34) என்பவர் கைது செய்யப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றில் இவருக்கு எதிராக 3 வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு , இதனால் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலம் கடந்த மாதம் 28ஆம் திகதி நிராகரிக்கப்பட்டு நேற்று அவர் குற்றம் அற்றவர் என விடுதலை செய்யப்பட்டார்.

இவ்விருவர் சார்பிலும் சட்டத்தரணி ரெமீடியஸ் மன்றில் ஆஜராகி வாதப்பிரதி வாதங்களை முன்வைத்தார். (எ-4)

## சிறுமியை அழைத்துச் சென்ற காதலன் கைதானார்

(யாழ்ப்பாணம்)

சிறுமி ஒருவரினை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரினை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்தனர்.

கடந்த 18 ஆம் திகதி 15 வயதுடைய சிறுமியொருவரினை காதலிப்பதாகக் கூறி தந்திரமாக வீட்டிலிருந்து அழைத்துச் சென்று துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

குறித்த சிறுமியை காணாது தேடிய பெற்றோர் எங்கும் கிடைக்காத நிலையில் கிளிநொச்சி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தனர்.

காதலால் வீட்டினை விட்டுச் சென்ற குறித்த சிறுமியினையும், இளைஞரையும் தேடி வந்த நிலையில் இருவரும் கிளிநொச்சியில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறுமி வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)

## முதுகல்விமாணி பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2010/2011 கல்வியாண்டின் முதுகல்விமாணி கற்கை நெறியின் முதலாவது அரையாண்டு பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளதாக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

பரீட்சை முடிவுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பார்வையிட முடியும். (ந)

## முதல் மனைவி முறைப்பாடு

# சிறுமியை திருமணம் செய்த நபர் ஒருவர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

ஆறு மாத குழந்தையின் தகப்பன் ஒருவர், வேறு ஒரு சிறுமியினை காதல் வலையில் வீழ்த்தி திருமணம் செய்த குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட முதல் மனைவி பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினை தொடர்ந்து குறித்த காதல் ஜோடி கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டது.

தாவடியினைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவர் நாவாந்துறையை சேர்ந்த 19 வயதுடைய பெண்ணை ஏற்கெனவே காதல் செய்து பதிவுத் திருமணம் செய்து கொண்டார்.

இவர்களுக்கு 6 மாதக் கைக் குழந்தை ஒன்றும் உள்ளது.

இந்நிலையில், நவாலி அரசடியினைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுமியொருவரினையும் ஏமாற்றி காதல் செய்து கொண்டு, இருவரும் தலை மறைவாகியுள்ளனர்.

தனது கணவனைக் காணாது தேடிய முதல் மனைவி யாழ்.பொலிஸ் நிலைய சிறுவர்,பெண்கள் பிரிவில் முறையிட்டுள்ளார்.

இதனையடுத்து கணவனும், அவருடன் சென்ற சிறுமியும் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கினை விசாரணை செய்த நீதவான் குறித்த நபரினை அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி சிறுவர் காப்பகம் ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)


### போட்டிப் பரீட்சை வகுப்புகள்

SLAS ,SLPS திறந்த பரீட்சை
புதிய பிரிவு சனி[28/4] காலை 10.00 மணிஒவ்வொருசனியும்காலை10மணி தொடக்கம் 3 மணிவரை நடைபெறும்.
SLPS மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைவகுப்புஒவ்வொருசனியும்மாலை 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை
முகாமைத்துவ உதவியாளர், வங்கிகளிற்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகள்
ஒவ்வொரு சனியும் 1.00 மணி தொடக்கம் 5.00 மணிவரை
கணக்காளர் பரீட்சை வகுப்பு
பிரிவு I சனி, ஞாயிறு 1.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை
பிரிவு II திங்கள் முதல் வெள்ளிவரை 5.00-7.00 மணிவரை
(8248)
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிக்கு அருகில்)
தொடர்பு:0754164564


## போர்க் குற்ற...

குழு தற்போது முதல் தடவையாக உறுதிப்படுத்தியுள்ளது. இது இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்களை மேலும் வலுப்படுத்தும் என்றே நம்பப்படுகின்றது.

சிறிய அளவிலான பல குண்டுகளை உள்ளடக்கிய இக் கொத்தணிக் குண்டுகள் பொது மக்கள் மீது பாரிய சேதத்தை ஏற்படுத்தக் கூடியது. இவ் வகையான குண்டுகள் 2010 ஆம் ஆண்டு சர்வதேச ரீதியில் தடை செய்யப்பட்டுள்ளபோதும் இன்னும் பல நாடுகள் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திடாது இருந்து வருவதுடன் இவ் வகையான குண்டுகளை தொடர்ந்தும் தயாரித்து வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பகுதியிலேயே வெடிக்காத நிலையில் உள்ள கொத்தணிக் குண்டுகள் மீட்கப்பட்டதாகவும் கடந்த மாதம் வெடிக்காத நிலையில் இருந்த குண்டினை பிரித்து எடுக்க முற்பட்ட சிறுவன் ஒருவன் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதாகவும் இச் சிறுவனின் சகோதரி காயமடைந்திருப்பதாகவும் ஐ.நா.நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

கொத்தணிக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பில் அரசாங்கத் தரப்போ அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்போ இது வரையில் எவ்வித கருத்தையும் வெளியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

## வவுனியா...

முக்கிய இடங்களை தீய சத்திகள் சில அழிப்பதற்கு முயற்சிப்பதை கண்டித்தும் இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாது இருப்பதை உறுதிப்படுத்தக்கோரியும் அமைதியான வழியில் அனைத்து வர்த்தகர்களும் தமது வர்த்தக ஸ்தாபனங்களை முழுநேரமும் மூடி எதிர்ப்பை வெளிப்படுத்தும் வண்ணம் கோருகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை வவுனியா தமிழர் வர்தகர்கள் இக் கதவடைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக தமது நிலைப்பாட்டை விளங்கி அறிக்கையொன்றை வெளி யிட்டுள்ளனர். (எ-9,266)


### உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்துள்ள எமது 04ஆவது கிளை நிறுவனமான One World Innovage Companyக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.
Distributor, Supervisor, Asst.Manager
குறைந்தபட்ச தகைமையாக க.பொ.த. [சா/த]
ஆறுமாத கால பயிற்சியின் போது 12 000-18 000 வரை பெற முடியும். பயிற்சிமுடிவும்பட்சத்தில் 35 000-45 000 வரைபெறமுடியும்.
உடன் தொடர்பு கொள்ளவும்:
0775566224, 0777787722, 0778543436
(8246)



### YAALH ENGLISH ACADEMY
(077 3212 711)
வழங்கும் இன்றைய தேவை
BASIC + INTERMEDIATE + ADVANCED
PRACTICAL ENGLISH COURSES
FOR ADULTS + SCHOOL STUDENTS
இலவசம் : முதலிரு வகுப்புகள்
பெயர் பதிவு : 077 3212 711 மூலம்
சனி 28.04.2012 பி.ப. 4.00-5.00
எமது கல்வி முறை பற்றிய இலவசக் கருத்தரங்கு
மாணவர் + பெற்றோர் + கல்வி ஆர்வலர்
ஆகியோரை அன்புடன் வரவேற்கிறோம்.
கற்க. கற்பவை கற்க. கற்பவை, கசடறக் கற்க.
(8169)
வகுப்பிட அனுசரணை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி : யாழ்நகர்


## கண்ணீர் அஞ்சலி



எமது அன்பு நண்பன் **ஆ. கிரிதரன்** (கணக்காளர், யாழ் கல்விவலயம்) அவர்களின் அன்புத் தந்தையார்

**முத்துக்குமாரு ஆறுமுகம்**

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


-நண்பர்கள்

(இ)

## ஐந்தாம் ஆண்டிலும் நீங்காத நினைவுடன்

### கா. பாலராசா

(பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன ஊழியர்)



மலர்வு 18 . 06 . 1955

உதிர்வு 27 . 04 . 2007

அன்பின் இருப்பிடமாக பண்பின் சிகரமாய்
எம் குடும்பத்தின் ஒளி விளக்காய்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மை விட்டு பிரிந்து ஐந்து வருடமாகியும்
உங்கள் நினைவோடு என்றும் வாழ்கிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

1-ம் ஒழுங்கை,
முல்லை வீதி, பரந்தன்.

(C4450)

# இன்று ஒரு தகவல்

## காலம் தவறாமை

சன நாட்டம் அதிகம் இல்லாத ஒரு வீதியில் காந்தி வேகமாக நடந்து போய்க்கொண்டிருந்தார்.

குஜராத் வித்தியா பீடத்தின் நிர்வாக சபைக் கூட்டம் இடம்பெறவுள்ளது. அதில் காந்தியும் கலந்து கொள்ள வேண்டியவராக இருந்தார். அவரை அழைத்து வருவதற்கு சரியான நேரத்திற்கு வாகனம் வரவில்லை.

வாகனம் வரவில்லையென்பது அவருக்குத் தெரிந்து விட்டது. கால்நடையாகவே தனது பயணத்தை ஆரம்பித்தார். ஆசிரமத்திலிருந்து வித்தியா பீடத்திற்கு அதிக தூரம். வீதியே வெறிச்சோடிப் போய் இருக்கும். அதனால் வழியாக வாகனம் கிடைப்பது கடினமான விடயம்.

சிறிது தூரம் சென்றிருப்பார். அப்போது ஒருவர் கதர் உடை அணிந்து சைக்கிளிலே போய்க் கொண்டிருந்தார்.

அவரிடம் காந்தி... ''நான் வித்தியா பீடத்திற்குப் போகவேண்டும். உங்களின் சைக்கிளைத் தரமுடியுமா?'' என்றார்.

அவர் உடனே சைக்கிளைக் கொடுத்தார்.

காந்தியடிகள் எப்போதோ தென்னாபிரிக்காவிலே இருந்த போது சைக்கிள் ஓடிப் பழக்கம்... இந்தியாவிலே அதற்குச் சந்தர்ப்பமே ஏற்பட்டதில்லை. இப்போது அந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

சைக்கிளிலே ஏறி குறித்த நேரத்திற்கு அந்தக் கூட்டத்திற்கு சமுகமளித்தார்.

முழத்துண்டு அணிந்து... திறந்த உடம்புடன் சைக்கிளிலே ஏறி... காலம் தாழ்த்தாது சரியான நேரத்துக்கு வந்து சேர்ந்த காந்தியடிகளைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

"காலம் தவறாமை" என்பது ஒரு சிறந்த பண்பு. அது எல்லோரிடமும் இலகுவாக வராது.

அமெரிக்க ஜனாதிபதி வாஷிங்டனுடைய செயலாளர் ஒருவர், ஒருநாள் காலதாமதமாக வந்தார். "ஏன் லேட்?" என்று கேட்டார்.

''என்னுடைய கைக்கடிகாரம் மெதுவாக ஓடியிருக்கிறது போல... அதுதான் காரணம்!'' என்றார்.

"இதற்குப் பரிகாரம் என்னவென்றால், ஒன்று நீங்கள் உங்கள் கைக்கடிகாரத்தை மாற்ற வேண்டும். அல்லது நான் எனது செயலாளரை மாற்ற வேண்டும்'' என்று வாஷிங்டன் கூறினார்.

கான் அப்துல்கபார்கான் என்ன சொல்கிறார் தெரியுமா?

''தான் எங்கே போனாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி நேரத்திற்கு முன்பே போவது என்பதை வழக்கமாக வைத்துள்ளார். அந்தப் பழக்கம்தான் என்னை மனிதனாக மாற்றியுள்ளது'' என்று கூறியுள்ளார்.

''மூன்று மணி நேரம் முன் கூட்டியே போகலாம். ஆனால், ஒரு நிமிடம் கூட பின் தங்கிவிடக் கூடாது'' என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார்.

இந்தியாவிற்கு விடுதலை கிடைத்த சமயத்திலே வைத்திய கலாநிதி இராதா கிருஷ்ணன் என்ன சொன்னார் தெரியுமா?

''இன்றைக்கு இரவு நமக்கு சுதந்திரம் கிடைக்கப் போகிறது. நாளையிலிருந்து நாம் செய்யும் தவறுகளுக்கு ஆங்கிலேயர்கள் மீது பழிபோட முடியாது" என்றார்.

எல்லாவற்றையும் சொல்லி என்ன பிரயோசனம்?

இப்போது "காலம்" தொடர்பாக யார் கவலைப்படுகிறார்கள் என்று ஒருவர் கூறினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# அங்கவீனர்களுக்கான வாழ்வாதார பயிற்சிகள்

(பூந்தோட்டம்)

அமெரிக்க யூத உலக சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட போரினால் கால், கை, கண் போன்ற அங்கங்களை இழந்த 10 பெண்களுக்கு வாழ்வாதார பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 5 தினங்கள் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் நடைபெற்ற வாழ்வாதார பயிற்சியில் பெண்களின் உரிமைகள் தொடர்பான பூரண விளக்கமளிக் கப்பட்டன.

அத்துடன் உளவியல் பிரச்சினைகளும் அவற்றிற்கான ஆலோசனைகளும் வழிகாட்டலும் வழங்கப்பட்டதுடன் அங்குள்ள பண்ணை ஒன்றிற்கு கூட்டிச் செல்லப்பட்டு தோட்டங்கள் அமைத்தல் தொடர்பான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்பட்டன. இப்பயிற்சியில் பங்கு பற்றிய 10 பேரில் 6 பேர் விதவைகள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-3-266)

## தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

வவுனியா தெற்கு வலய முறைசாரா கல்வி பிரிவின் ஏற்பாட்டில் க.பொ.த. சாத்தாரணதர பரீட்சைக்கு தோற்றி க.பொ.த. உயர்தரத்திற்கு தகுதி பெற முடியாத மாணவர்களுக்கான தொழில்வழிகாட்டல் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஐயாத்துரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் உயர்தரம் கற்க தகுதி இல்லாத மாணவர்களுக்கு பல்வேறு தொழில்கள் தொடர்பான பூரண விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

பல்வேறு தொழில்கள் தொடர்பான விளக்கங்களை வவுனியா தெற்கு வலய தொழில் வழிகாட்டல் அதிகாரி திருமதி கிரேனியர், முறைசார கல்விப்பிரிவின் உதவிக்கல்விப்பணிப்பாளர் க.சிவதாஸ், முறைசார கல்விப்பிரிவு ஆசிரிய ஆலோசகர் திருவருள்நேசன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றி உயர்தரம் கற்க தகுதி இல்லாத மாணவர்களை கலந்து பயன் பெறுமாறு வவுனியா தெற்கு வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.அன்ரன் சோமராஜா அறிவித்துள்ளார்.(அ-3-266)

## எம்.ஆர்.ரி.சி.ஆவணத் திரைப்பட விழா

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையம் ஒழுங்கு செய்துள்ள எம்.ஆர்.ரி.சி. ஆவணத் திரைப்பட விழா 03 நாளை சனிக்கிழமை காலை, மாலை என 2 அமர்வுகளாக நடைபெறவுள்ளதாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையப் பணிப்பாளர் தே.தேவானந்த் அறிவித்துள்ளார்.

இதற்கமைய காலை அமர்வு முற்பகல் 10 மணிக்கும் மாலையமர்வு பிற்பகல் 2 மணிக்கும் யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளி ஒழுங்கையில் அமைந்துள்ள ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

இத்திரைப்படக் காட்சியில் ஆர்.ஆர். ஸ்ரீனிவாசன் இயக்கத்தில் உருவான பூம்புகார் போற்றுதல், மைக்கல் மோர் தயாரிப்பில் உருவான Fahrenheit nine & Eleven என்ற இரண்டு திரைப்படங்களும் திரையிடப்படவுள்ளன. திரைப்பட ஆர்வலர்கள், ஊடகத்துறை மாணவர்கள் இந்த திரைப்பட விழாவில் பங்கு பற்ற முடியும். மேலதிக தகவல்களுக்கு 021 2229873 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். இந்த இரண்டு திரைப்படங்களும் சர்வதேச திரைப்பட விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 80-85 | 100 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 40 | 40 | 30 | 40 |
| தக்காளி | 70 | 80 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 | 30 |
| கோவா | 10-15 | 10 | 20 | 30 |
| கரட் | 40 | 40 | 30 | 60 |
| பூசணி | 20 | 20 | 20 | 30 |
| புடோல் | 35 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 20 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 40-90 | 70-80 | 50-70 |
| பெரிய வெங்காயம் | 85 | 100 | 85 | 80 |
| பாகற்காய் | 80-100 | 100 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | -- | 40 | 70 | 80 |
| பயற்றங்காய் | 70-80 | 100 | 60 | 40 |
| லீக்ஸ் | 80 | 90 | 70 | 90 |
| பீற்றூட் | 25 | 40 | 30 | 50 |
| கறிமிளகாய் | 25 | 30 | 40 | 40 |
| முருங்கைக்காய் | 300 | 250 | 350 | 400 |
| போஞ்சி | -- | 100 | 80 | -- |
| கத்தரிதம்புள்ள | -- | 40 | -- | -- |
| கீரை - 1 பிடி | 10-12 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 40-50 | 80 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 30 | 20-25 |

## இராசி பலன்

27.04.2012
(சித்திரை 15, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 10.35 மணிவரை
திருவாதிரை முற்பகல் 11.36 மணிவரை
இராகுகாலம் 10.28-11.58 மணிவரை
சுபநேரம் 5.58-7.28 மணிவரை
சஷ்டி விரதம்.

**மேடம்** தொழில் நன்மை கருதி புதியவர்களை இணைக்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைக்கும் நாள், உறவினர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**இடபம்** வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள், புதிய முயற்சியொன்றில் ஆர்வம் அதிகரிக்கும்,ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** நண்பர்கள் சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லும் எண்ணம் உருவாகும், கொடுத்த வாக்கை காப்பாற்ற கொள்கையை கொஞ்சம் தளர்த்த வேண்டி வரலாம், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** அன்றாட பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்யும் எண்ணம் உருவாகும், வெளியூர்த் தொடர்புகள் விரும்பும் விதத்தில் உருவாகும்.

**சிங்கம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள்,தொலைபேசி வழியில் சந்தோசம் தரும் செய்திகளைக் கேட்கலாம்,வருமானம் அதிகரிக்கும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**கன்னி** தன்னமிக்கை அதிகரிக்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழியமைத்துக் கொள்வீர்கள், பிறர் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆனந்தம் பெறுவீர்கள்.

**துலாம்** விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், நடைபெறாத காரியங்கள் இன்று துரிதமாக நடைபெறும், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்** எதையும் யோசித்து செய்ய வேண்டிய நாள்,வரவும் செலவும் சமமாகும், வீண் பழிகள் ஏற்படும் வாய்ப்புக்களுண்டு, கௌரவக்குறைவான நாள், வேலைச் சுமை அதிகரிக்கும்.

**தனுசு** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், தொலைபேசி மூலம் எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம், களஸ்திர நன்மையுண்டு, வழிபாட்டால் ஆனந்தம் காண்பீர்கள்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், தொழில் முன்னேற்றமுண்டு.

**கும்பம்** பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமை அடையும் நாள்,பிரிந்தவர்கள் இணையும் வாய்ப்புண்டு,தொழில் நன்மை கருதி அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள்.

**மீனம்** வளர்ச்சிப் பாதைக்கு ஒத்துழைத்தவர்களை சந்தித்து மகிழ்வீர்கள், தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், பயணங்களால் பலனுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

வளவன்

# இன, மத, மொழி வேறுபாட்டின்றி அபிவிருத்திக்காக உழையுங்கள்

## அமைச்சர் டளஸ் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**கடந்தகால கசப்பான அனுபவங்களினை களைந்து நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி பங்கெடுத்துக்கொள்ள வேண்டும் என இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி பிரதியமைச்சர் டளஸ் அழகப்பெரும இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.**

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சினால் நேற்று காலை யாழ். இந்துக்கல்லூரியில் புத்தாண்டு விழா-2012 கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

இந்நாட்டில் இருக்கின்ற 56 இலட்சம் இளைஞர் யுவதிகளிடம் நாம் கேட்டுக் கொள்வது இனப்பாகுபாடு இன்றி அனைவரினதும் கரங்களும் ஒன்றுசேர்ந்து இந்நாட்டின் அபிவிருத்திக்காக உழைக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இனப் பாகுபாட்டினை களைந்து அனைவருக்கும் ஒரே நாடு, ஒரே உரிமை என்ற ரீதியில் அரசாட்சிபுரிகின்றார்.

இனம், மதம், பூகோளம், தேசிய ரீதியாக இனப்பாகுபாடு இன்றி அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வதற்குரிய சந்தர்ப்பம் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பின்னர் கடந்த 30 வருட காலமாக சந்தேகத்தோடும் உண்மையற்றுமே வாழ்ந்து வந்துள்ளோம்.

இந்நாட்டில் சிறுபான்மையினம், பெரும்பான்மையினம் என்ற இனங்கள் இல்லை என்றும் அனைவரும் இலங்கையர்கள் தான் எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நான் இங்கு தமிழில் உரையாற்ற முடியவில்லை என வருத்தமடைகிறேன். ஆனால் நான் அதற்காக வெட்கப்படவில்லை. கடந்த கால பாராளுமன்ற உறுப்பினர்களாலேயே இந்நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

என்னால் தமிழ் பேச இயலவில்லை என நான் கூற மாட்டேன். இயலாமையாக ஆக்கப்பட்டுள்ளது.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு நாளையுடன் (இன்று) இரு வருடங்கள் பூர்த்தியடைகின்ற நிலையில் அதனை யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவது வடக்கு தெற்கிற்கான உறவினை மேலும் மேம்பாடடைய வைத்துள்ளது.

இந்நன்நாளில் அனைத்து இளைஞர் யுவதிகளும் நல்லதொரு சமுதாயத்தினை கட்டியெடுப்புவோம் என உறுதிகொள்வோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைப்பின் பணிப்பாளர் சட்டத்தரணி பி.எம். பெரேரா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். பாதுகாப்பு கட்டளைத்தளபதி ஹத்தருசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், மதப்பெரியார்கள், அதிபர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அ-4)

## எரிந்த நிலையில் சடலம் மீட்பு

(கரவெட்டி)

பருத்தித்துறையில் தனிமையில் இருந்த பெண் ஒருவர் எரிந்த நிலையில் நேற்றுக்காலை பருத்தித்துறைப் பொலிஸாரால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெரு பகுதியில் தனிமையில் வசித்து வந்த குறித்த பெண் அவரது வீட்டிற்குள் எரிந்த நிலையில் சடலமாக காணப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த பெண்ணின் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பதுமைமலர் (வயது 44) என்ற பெண்ணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-3-24)




## நீதிமன்றத்தால் அபராதம்

வடமராட்சி பிரதேசத்தில் தமது வீடுகளில் அதிகளவான கள் வைத்திருந்த நபர்களுக்கு எதிராக மதுவரித்திணைக்கள அதிகாரிகளால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி விஜயராணி முன்னிலையில் நேற்று வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதில் 6 நபர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளிகளாகக் கண்டு 6 பேருக்கும் தலா 2 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

மன்றில் ஆஜராகாத ஏனைய நபர்களை அடுத்த தவணைக்கு மன்றில் ஆஜர்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பதில் நீதவான் உத்தரவிட்டார். (அ-3-24)

## தவறிவீழ்ந்தவர் உயிரிழந்துள்ளார்

மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது கடலில் தவறி வீழ்ந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை சுண்டிக்குளம் கடற்பரப்பில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பொழுது சுகயீனம் காரணமாக கடலில் தவறி வீழ்ந்த நிலையில் நண்பர்களினால் குறித்த நபர் கடலிலிருந்து மீட்கப்பட்டு கிளி. ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு ஐந்து நாட்களாக சிகிச்சையளிக்கப்பட்டுக்கொண்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் சங்கத்தார் வயல் இயக்கச்சியினை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வி. ஆனந்தராசா வயது (42) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவர் ஆவார். (அ-4)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் I பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி (A.R.V) ஏற்றப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ. ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 30 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை குருநகர் ஐந்து மாடியிலும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை பெஸ்கி சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சென்றோக்ஸ் சனசமூக நிலையத்திலும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை றெக்கிளமேசன் சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

நூலக அபிவிருத்திக்கானகொள்கை உருவாக்கமும் பரிந்துரைகளும் தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் யாழ். பொது நூலகத்தில் நடைபெறவுள்ளது என இலங்கை நூலக சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை இணைப்பாளர் திருமதி க. சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

நூலகர்கள் மற்றும் நூலக நிர்வாகிகளுக்கான இச் செயலமர்வினை இலங்கை நூலகச்சங்கம் மற்றும் நூலக சங்கங்களுக்கான சர்வதேச சம்மேளனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதாலும் கட்டமைப்பு வேலைகள் செய்ய வேண்டியிருப்பதாலும் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## இருபாலாருக்குமான கிரிக்கெட்போட்டி

(கரவெட்டி)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டிகள் 29, 30 ஆம் திகதிகளில் நான்கு மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இதில் பெண்களுக்கான போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான போட்டிகள் மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழக மைதானத்திலும் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்திலும் நடைபெறவுள்ளது. (அ-3-24)





இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தியமைச்சின் புத்தாண்டு விழா-2012 கொண்டாட்டம் நேற்றுக்காலை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் மாலையணிவித்து அழைத்து வரப்படுவதையும் அமைச்சர் டளஸ் அழகப்பெரும உரையாற்றுவதையும் பாரம்பரிய விளையாட்டான தலையணை அடித்தல் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:உ.சாளீன்)

# கிராம அலுவலர் பணிமனைகளை அமைச்சர் டக்ளஸ் திறந்து வைத்தார்

(யாழ்ப்பாணம்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் தெல்லிப்பழை, தந்தை செல்வாபுரம் மற்றும் குரும்பசிட்டி பகுதிகளில் அமைக்கப்பட்ட கிராம அலுவலர் பணிமனைகளை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திறந்து வைத்துள்ளார்.

தந்தை செல்வாபுரம் மற்றும் குரும்பசிட்டி பகுதிகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் புதிதாக அமைக்கப்பட்ட கிராம சேவையாளர் அலுவலர் பணிமனைகள் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டன.

முன்பதாக தந்தை செல்வாபுரத்தில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தை அமைச்சர் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். குரும்பசிட்டி கிழக்குப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தை அமைச்சர் திறந்து வைத்தார்.

இப்புதிய கட்டடத் தொகுதியில் சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம சேவையாளர், விவசாயப் போதனாசிரியர், குடும்பநல உத்தியோகத்தர் ஆகியோருக்கான அலுவலகங்களும் களஞ்சியமும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 6 மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதிகள் அடையாளம் காண முடியாத அளவில் காணப்பட்டபோதிலும் இன்று அழகாகக் காட்சியளிக்கின்றன.

இங்கு முன்பிருந்த தடைகள் அகற்றப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான அபிவிருத்திகளைக் கொண்டு தொடர்ந்தும் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதே எமது நோக்கம் எனவும் சுட்டிக்காட்டினார். (அ-2-6)

# அதே கேள்வி- அதே பதில்

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களின் பங்களிப்பு வடக்கின் அபிவிருத்தியில் எவ்வாறு உள்ளதென யாழ். வந்த நோர்வேயின் இரண்டாம் நிலைச் செயலாளர் மார்ற்லியா ற்ஜொஸ்கின் யாழ்.அரச அதிபரிடம் கேட்டார்.

யாழ்.வந்த நோர்வேயின் இரண்டாம் நிலைச் செயலாளர் வலி.வடக்கு வசந்தபுரத்தில் 50 வீடுகளினை மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு கையளித்ததோடு பலநோக்கு பொதுமண்டபத்தினையும் முன்பள்ளியொன்றினையும் ஆரம்பித்த பின்னர் மாலை யாழ். அரச அதிபரினை சந்தித்தபோதே அவர்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்கள்.

யாழ்.வந்த, வருகின்ற ஏனைய நாட்டு குழுக்களினையும் போன்றே இவர்களும் வழமையான மீள்குடியேற்றம் எவ்வாறு உள்ளது, யாழ்ப்பாணத்திற்கு என்ன தேவையாகவுள்ளது, யாழின் அபிவிருத்திக்கு யார் யார் உதவி செய்கின்றனர் எனவும் கேட்டனர்.

மீள்குடியேற்றப்பட்ட இடங்களில் இராணுவத்தினரின் தலையீடுகள் உள்ளனவா என்றும் அவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்படுகின்றனவா எனவும் கேட்டனர்.

யாழ்ப்பாணத்தின் மேலதிக அபிவிருத்திக்கு எவ்வாறு நிதியுதவிகள் கிடைக்கின்றன என்றும் எதிர்வரும் காலங்களில் எவ்வாறு அவற்றினை பெற்றுக் கொள்ளப் போகிறீர்கள் எனவும் கேட்டதோடு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களில் உள்ள இளைஞர்களின் பங்களிப்பு அபிவிருத்தியில் எவ்வாறான பங்கினை கொண்டு உள்ளது எனவும் ஆராய்ந்தனர்.

இவற்றுக்கு வழமைபோல பதிலளித்த யாழ்.அரச அதிபர் மீள்குடியேற்றங்கள் மிக விரைவாக செய்யப்பட்டு வருவதாகவும் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு குறைக்கப்பட்டுள்ளது எனவும் பதிலளித்ததோடு இளைஞர், யுவதிகளுக்கான வேலையில்லாப் பிரச்சினையும் காணப்படுவதாக சுட்டிக் காட்டியிருந்தார். (அ-4)

# தாலிக்குளம் பாடசாலை வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா தாலிக்குளம் பாடசாலை வீதி நீண்ட காலமாக திருத்தம் செய்யப்படாமல் காணப்படுவதால் அப்பகுதியால் பயணிக்க முடியாமல் பல சிரமங்களை எதிர்கொள்வதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா சாளம்பைக்குளத்திலிருந்து பாடசாலை செல்லும் வீதி திருத்தம் செய்யப்படாமல் காணப்படுவதாகவும் இவ்வீதியின் சுமார் 500 மீற்றர் வரையிலான தூரமே திருத்தம் செய்யப்படவேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையினரிடமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் பல தடவைகள் தெரிவித்தும் பலனளிப்பதாக இல்லை எனவும் தாம் அதிகம் பயன்படுத்தாத வீதிகளை திருத்தம் செய்துவிட்டு தமக்கு பயனுள்ள வீதியை திருத்தம் செய்யவில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர். (அ-9-266)

# அரசியல்வாதிகளின் சொத்து குவிப்பு தொடர்பில் விசாரணை

(கொழும்பு)

நாட்டின் சில பிரபல அரசியல்வாதிகளின் சொத்து குவிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டி, இரத்தினபுரி, களுத்துறை மற்றும் அம்பாறை போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த அரசியல்வாதிகள் தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிகவும் குறுகிய காலத்தில் குறித்த அரசியல்வாதிகள் கோடீஸ்வர வர்த்தகர்களாக மாற்றமடைந்துள்ளனர். இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

காணி, கட்டடம், வாகனங்கள் மற்றும் பல்வேறு சொத்துக்கள் எவ்வாறு கிடைக்கப்பெற்றன என்பது குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

குறித்த பிரபல அரசியல்வாதிகளுடன் தொடர்புகளைப் பேணுவோர் மற்றும் பாதாள உலகத் தொடர்பு, சட்டவிரோத ஆயுத பயன்பாடு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளன. (அ-2)

# சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான புனராவர்த்தன 33 குண்டபக்ஷ மஹா கும்பாபிஷேக பெருவிழா


## சிறப்பு மலர்- 27.04.2012

### சுன்னை நகர் கதிரமலையம்பதியானை போற்றிடுவோம்



சுன்னை நகரின் மையப் பிரதேசத்தில் வானுயர்ந்த கோபுரங்களுடன் அழகுற அமைக்கப்பட்ட திரிதள, துவிதள தூபிகளுடன் மிகவும் அழகுற புதுப்பொலிவுடன் காணப்படுவதே சுன்னை நகர கதிரமலைச் சிவன் கோவில். புராதன வரலாறும் கர்ணபரம்பரைக் கதைகளுடன் "உக்கிரராஜசிங்க மன்னனால்" ஸ்தாபிக்கப்பட்டு வழிபட்ட தலமே இதுவாகும். கதிரமலை எனும் இராசதானியாகவும் இப் பிரதேசம் காணப்பட்டதாக வரலாறுகள் கூறுகின்றன. உயர்ந்த மேட்டு நிலப்பரப்பில் சுவர்ணாம்பிகை உடனுறை பொன்னம்பலவாணராக வேண்டுவர்க்கு வேண்டும் வரங் களை எல்லாம் வழங்கிவருகிறார். நேரந்தவறாத 4காலப்பூசைகளுடன் சிறப்பான பூசை வழிபாடும் உடையது ஆகும். 1998 ஆம் ஆண்டு இடம்பெற்ற 33 குண்டயாக கும்பாபிசேகத்திற்கு பின் மீண்டும் 2012.04.27 இன்று 33 குண்டயாகங்கள் அமைத்து மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் பாலித்துள்ளார். கலாநிதி சிவஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்களின் தலைமையில் அவருடைய தம்பியும் ஆலய பிரதம சிவாச் சாரியாரும் இவ்வருடம் மணி விழாக் காணும் முத்தமிழ் குருமணி சிவ ஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் பிரதமகுருவாக இருந்து இவ்வாலயத்தில் தனது 4 ஆவது மஹா கும்பாபிஷேகத்தை நடாத்துவது எமது கிராமத்திற்கு மிகவும் சிறப்பாக அமைகிறது. எல்லோரும் வாரிவழங்கிய இலட்சோப இலட்ச நிதி கொண்டு புனரமைக்கப்பட்ட "கதிர மலையானின்" குடமுழுக்கு விழாவைப் பார்ப்பதற்கு நாம் செய்த புண்ணியமே எனப் பிரார்த்தித்து சகலவிதமான உதவிகளையும் வழங்கிய அனைத்து அடியார்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு.செல்வஸ்தான் (அதிபர்),
பொருளாளர் திருப்பணிச்சபை.



### கதிரமலைச் சிவனின் அருள்பெறுவோமாக



கதிரமலையின் புராதன நகரில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் கதிரமலை சிவனின் 33 யாககுண்ட யாக மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு அனைவரும் ஆனந்தம் கொள்வோமாக. இன்றைய கும்பாபிஷேகப் பெருஞ் சாந்தி விழா நடைபெற அனைத்து நல்ல உள் ளங்களும் தங்கள் பாரிய பங்களிப்பை வழங்கியும் தொண்டர் சபையின் அயராத முயற்சியும் குறுகிய காலத்தில் திருப்பணிகள் நிறைவுற ஒத்துழை ப்பை வழங்கிய சிற்பாசாரியார்கள், ஓவியர்கள் மற்றும் அனைத்து தொழிலாளருக்கும் எல்லாம் வல்ல பொன்னம்பலவாணேசப் பெருமானின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சிவ ஸ்ரீ.ச.ஸ்ரீகாந்தக்குரு (தேவஸ்தான இளவரசு)
தலைவர்- திருப்பணிச்சபை.

### குடமுழுக்கு காண விரைந்தோடி வாரீர்!



சுன்னாகம் கதிரமலையில் கண்கொள்ளாக் காட்சியாக மஹா கும்பாபிஷேகப் பெருவிழா 27.04.2012 வெள்ளியன்று நிகழவிருக்கின்றது. கந்தரோடையை இராஜதானியாகக்கொண்டு தமிழ் மன்னனாகிய உக்கிரராஜசிங்கன் அரசாட்சி புரிந்த காலத்தில் அவனது மனத்திற்குகந்த வழிபாட்டுத் தலமாகத் திகழ்ந்த சிவஸ்தலம் சுன்னாகம் கதிரமலை சிவன்தேவஸ்தானமென யாழ்ப்பாண வைபவமாலை வரலாறுகளிலிருந்து அறியவருகிறது. சிவாலயங்களிலே கருவறையில் பிரதிஷ்டை செய்யப்படும் சிவலிங்கங்களில் பாணலிங்கம், கிரியாலிங்கம் என இருவகைலிகங்களே காணப்படுகின்றன. அவற்றுள் பாணலிங்கங்கள் ஸ்தாபிக்கப்பெற்ற திருத்தலங்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவையாகும். சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஈழத்தின் சிவஸ்தலங்களுக்குள் பெரிய அளவு கொண்டதும் உத்தமலட்சணரேகைகளும் சூரிய சந்திர அக்கினியெனப்படும் முக்கண்களின் குறியீடுகளையும் தாங்கி விளங்கும் சிறப்புப் படைத்த லிங்கமாகும். ஒவ்வொருகும்பாபிஷேக காலத்திலும் பக்தர்கள் தமது கரங்களால் எண்ணெய்க்காப்பு சாத்தும்போது சிவனின் முக்கண்களையும் கண்ணாரக்கண்டு களிக்கின்றனர். உக்கிர ராஜசிங்கன் மாவிட்டபுரத்திற்கு வந்து வழிபட்டுத் தனது குதிரைமுகம் நீங்கப்பெற்று பேரழகியாக விளங்கிய இளவரசி மாருதபுரவீகவல்லியைக் காதலித்து ஸ்ரீ கதிர மலைச் சிவனை வணங்கியதினால் கடிமணம் புரிந்து மகிழ்வும் திருவருளும் பெற்ற வரலாறும் உண்டு. இங்குள்ள பொற்சபையில் ஆடல் அழகனாகிய ஸ்ரீ நடராஜப்பெருமானின் ஆனந்த தாண்டவக்கோலத்தை அறுபத்துமூன்று நாயன்மார்களும் அனுதினமும் தரிசித்தவண்ணம் இவ்வாலயத்தில் காட்சிதருகின்றனர்.

ஜேர்மனி ஹம்ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயஸ்தாபகர் ஸ்ரீ வீரசைவ ஆதீன ரேவணசித்த சிவஸ்ரீ ஆறுமுகப்பாஸ்கர வீரசைவ சிவாச்சார்யர் அவர்களும் இன்னும் பல ஆதீனங்கள் தேவஸ்தானங்கள் தமது வாழ்த்துகளை அடியார்களுக்கு வழங்க வருகைதரவுள்ள மஹா கும்பாபிஷேகத்தை அனைவரும்வந்து தரிசித்து ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணசுவாமியின் திருவருளால் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு பெறுவீர்களாக.

**கிரியாகலாபமணி** சிவ ஸ்ரீ நா. சோமஸ்கந்தக் குருக்கள்.
**முத்தமிழ்குருமணி** சிவ ஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

மலரமைப்பு:-
சீ.ஞானேஸ்வரன்
புன்னாலைக்கட்டுவன்

# உறுதியான இலட்சியம் இருந்தால் எதையும் சாதித்துவிட முடியும்

## ஜனாதிபதி கூறுகிறார்

**தென்கொரியா உலகில் வளர்ச்சியடைந்த நாடாகியுள்ளமைக்கு இலங்கை பயங்கரவாதத்தைத் தோற்கடித்து அபிவிருத்தியில் கட்டியெழுப்பப்பட்ட மைக்கும் உறுதியான இலட்சியமே காரணமாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.**

தென்கொரியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் அந் நாட்டில் வாழும் இலங்கையர்களைச் சந்தி த்துக் கலந்துன்ரயாடியுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் சியோல் நகரிலுள்ள ஹயட் ஹோட்டலில் இச்சந்திப்பு நடைபெற்றதுடன் தென்கொரியாவில் தொழில் புரியும் இலங்கையர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் உட்பட பெருமளவிலா னோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இங்கு இலங்கையர்கள் மத்தியில் தொட ர்ந்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், நான் தென்கொரிய ஜனாதிப தியைச் சந்தித்தபோது தென்கொரியாவில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையர்களின் நேர்மை மற்றும் உழைப்புப் பற்றி அவர் பாரா ட்டுத் தெரிவித்தார். இது என்னையும் இலங்கை மக்களையும் மகிழ்ச்சிப்படுத்திய விடயமாகும்.

90 களில் எனது தலையீட்டின்மூலம் தென்கொரியாவுக்கு தொழில் செய்யச்செல் வோர் எதிர்கொண்ட சவால்களுக்குத் தீர்வு காணமுடிந்தது. அதன் பயனாகத் தற்போது 23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர் கள் இங்கு தொழில் செய்கின்றனர்.

இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக் கும் பங்களிப்புச் செய்யப்படுகிறது. இந்த இளைஞர்கள் மீண்டும் நாட்டுக்குத் திரும்பு கையில் அங்கு அபிவிருத்தியின் பிரதி பல ன்களை அனுபவிக்கக்கூடியதாகவிருக்கும்.

அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக வெளி நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் தமது பங்களிப்பினை வழங்கியுள்ளனர். அதற்காக நான் அவர்களுக்கு பாராட்டுக்க ளைத் தெரிவித்துக்கொள்கிறேன் எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய கொரியாவுக்கான இலங்கைத் தூதுவர் திஸ்ஸ விஜேரத்ன, ஜனாதிபதியின் தலையீட்டினாலேயே இலங் கையர்களுக்குத் தென்கொரிய தொழில்வாய்ப் புக்கள் கிட்டியுள்ளன. அதற்கு கௌரவமளி க்கும் வகையிலேயே பெருமளவிலானோர் இந்நிகழ்வில் திரண்டிருப்பதாகவும் தெரிவித் தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குண வர்த்தன, நாமல் ராஜபக்ஷ, நிஷாந்த முத்து ஹெட்டிகம ஆகியோரும் கலந்து கொண் டனர். (அ-2)

## முஸ்லிம் நிறுவனங்களின் காரியாலயம் தீக்கிரை




மட்டக்களப்பு, காத்தான்குடி பள்ளிவாச ல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மே ளன காரியாலயக் கட்டடம் இனந்தெரியா தோரினால் நேற்று அதிகாலை தீக்கிரை யாக்கப்பட்டுள்ளது.

சம்மேளன அலுவலக கட்டடத்தின் முன் கதவு தீயினால் கருகியதுடன் ஜன்னல் கதவுகள் உடைத்து சேதமாக்கப்பட்டுள் ளன.

பொதுமக்களும் இராணுவத்தினரும் தீயை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து ள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் காத்தான் குடிப் பொலிஸார் விசாரணை மேற்கொ ண்டு வருகின்றனர். (அ-2)

## ஜனாதிபதியின் தென்கொரியா விஜயம் இலங்கைக்கு நன்மை- ஜீ.எல்.பீரிஸ்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தென் கொரிய விஜயம் இலங்கைக்கு பல்வேறு நன் மைகளை பெற்றுத் தருவதாக அமைந்துள் ளது என வெளிவிவகார அமைச்சர் பேரா சிரியர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிடுகின்றார்.

தென்கொரிய விஜயம் தொடர்பில் தெளி வூட்டும் சந்தர்ப்பத்திலேயே வெளிவிவகார அமைச்சர் இந்தக் கருத்தினைக் கூறியுள் ளார்.

தென்கொரியாவின் பாரிய நிறுவனங்க ளிடம் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து எடுத்துக்கூறப்பட்டுள்ளதுடன் அது தொடர்பில் அவர்கள் திருப்தி வெளியிட்ட தாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்நாட்டு தொழிலதிபர்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்துவ தற்கு எண்ணியுள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் 23 ஆயிரம் இலங்கையர்கள் கொரியாவில் பணிபுரிவதாகவும் குறிப் பிட்டார்.

இந்த எண்ணிக்கையை வருடாந்தம் அதி கரிப்பதற்கு கொரிய அரசாங்கம் தீர்மானித் துள்ளதுடன் இலங்கையில் கொரிய மொழியை கற்பிப்பதற்கான ஒத்துழைப்பை அந்தநாட்டு அரசாங்கம் வழங்கவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ-2)

## காணாமல்போனதாக கூறப்பட்டுள்ள முறைப்பாடுகள் குறித்து விசாரணை

கடந்த 2006 ஆம்ஆண்டு காலப் பகுதி களில் காணாமற்போனதாகக் கூறப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பில் அவர்களது மேல திக தகவல்களை அறிந்து கொள்ளும் பொரு ட்டு இரண்டாம் கட்ட விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்துள் ளார்.

2006,2007,2008 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல்போனவர்கள் தொடர்பில் அந்தக் காலப் பகுதிகளில் காணா மற்போனவர்களது உறவினர்களால் முறை ப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இதில் 2007, 2008, 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமல் போனவர்கள் தொடர்பில் எம்மிடம் பதிவு செய்யப்பட்ட முறை ப்பாடுகள் குறித்து இவர்களின் உறவினர் களை அழைத்து இரண்டாம் கட்ட விசார ணைகளை மேற்கொண்டிருந்தோம்.

2006 ஆம் ஆண்டு காணாமல் போன வர்கள் தொடர்பில் தற்போதுதான் அடுத்தகட்ட விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றோம். முறைப்பாடுகளில் காணப்படுகின்ற ஆவணக் குறைபாடுகளைச் சீர்செய்வதுடன் பொலிஸ் முறைப்பாடு தொடர்பிலும் ஆவணங்களைப் பெற்று வருகின்றோம்.

இந்த விசாரணைகள் ஒருவார காலத்து க்கு எமது அலுவலகத்தில் நடத்தப்படவுள் ளன. இதன் பின்னர் கொழும்பிலிருந்து எமது தலைமையகத்தால் மேலதிக விசார ணைகள் மேற்கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)




பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் கம்பனியினால் வாகன முழு இழப்பீட்டுக் காப்பு றுதிக்கான காசோலையை பீப்பிள்ஸ் லீசிங் கம்பனியின் யாழ்.மாவட்ட முகா மையாளர் ரீ.கே.ஆனந்தராஜா வாடிக்கையாளர் பகீரதனுக்கு வழங்குவதையும் அருகில் பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் பொறுப்பதிகாரி சுபான்கன், இக்கம்பனியின் நிறைவேற்று அதிகாரியான காண்டீபன் மற்றும் கமல் நிற்பதனையும் படத்தில் காணலாம்.

## முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் நினைவு தின கட்டுரைப்போட்டி

(கொழும்பு)

அகில இலங்கை இந்து மாமன்றம் முத் தமிழ் வித்தகர் விபுலானந்தரின் நினைவு தினத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர் கள் மத்தியில் கட்டுரை போட்டிகளை நடத்தத் தீர்மானித்துள்ளதாக பொதுச் செயலாளர் நீலகண்டன் அறிவித்துள்ளார்.

இதில் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற் பிரிவு என்று மூன்று பிரிவுகளாக போட்டிகள் நடைபெறும். 5 ஆம் ஆண்டு முதல் 8 ஆம் ஆண்டு வரை கீழ்ப்பிரிவு எனவும் 9 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் ஆண்டு வரை மத்திய பிரிவு எனவும் 12 ஆம் ஆண்டு முதல் 13 ஆம் ஆண்டு வரை மேற்பிரிவு என்றும் போட்டி யாளர்கள் பிரிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்ப்பிரிவு மாணவர்கள் **முத்தமிழ் வித் தகர் விபுலானந்தர்** எனும் தலைப்பில் 150 சொற்களுக்கு குறையாமலும் மத்தியபிரிவு மாணவர்கள் **விபுலானந்த அடிகளாரின் இசைத் தமிழ் வளர்ச்சிப் பணிகள்** எனும் தலைப்பில் 250 சொற்களுக்கு குறையாமலும் மேற் பிரிவினர் **விபுலானந்த அடிகள் காட்டிய ஆன் மீகநெறி** எனும் தலைப்பில் 350 சொற்க ளுக்குகுறையாமலும்கட்டுரைஎழுதிஅனுப்பலாம்.

போட்டியாளர்கள் தனது சொந்த ஆக்க த்தை மட்டுமே அனுப்புதல் வேண்டும். கட்டு ரைகள் பாடசாலை அதிபரின் அலுவல முத் திரை பதித்து அத்தாட்சிப்படுத்துவதுடன் ஆக்கங்கள் ஏற்கனவே பிரசுரமாகாதவையா கவும் பரிசு பெறாதவையாகவும் இருத்தல் வேண்டும். ஆக்கங்கள் அனுப்பும் கடித உறை யின் இடது பக்க மேல்மூலையில் கட்டுரை யின் தலைப்பினைக் குறிப்பிடல் வேண்டும்.

நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது. மூன்று பிரிவிலும் முதற் பரிசாக மூவாயிரம் ரூபாவும் இரண்டாம் பரிசாக இரண்டாயிரம் ரூபாவும் மூன்றாம் புரிசாக ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

கட்டுரைகளை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம், இலக்கம் 91/5, சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர், மாவத்தை கொழும்பு-02 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலதிக தகவல்களை 2434990 என்னும் இலக்கத்தில் பெற முடியும். (அ)

## தந்தை செல்வா நினைவு தினம்

(ஒட்டுசுட்டான்)

மூதறிஞர் தந்தை செல்வாவின் 35 ஆவது சிரார்த்த தின நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மாலை கிளிநொச்சி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் மூத்த அரசியல்வாதி வீ.ஆனந்தசங்கரி தலைமையில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட தந்தை செல்வா நற்பணி மன்றம் அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன்,செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் சித்தாத்தன் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர். இந்நிகழ்வில் தமிழ் மக்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்த தலைவர்களாகிய அமரர்களான தந்தை செல்வநாயகம், சட்டமா மேதை ஜீ.ஜீ.பொன்னம்பலம், தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோருக்கு மலரஞ்சலிக்காக மூவரின் திருவுருவப்படங்களும் வைக்கப்படவுள்ளன. (அ-84-258)

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 13.04.2012 - 13.05.2012




மூலம்,பூராடம், உத்திராடம், 1ஆம் பாதம்

## பொருளாதார நிலை உயரும் புதிய திருப்பங்கள் உருவாகும்

**சவால்களைச் சமாளிக்க வேண்டிய நேரம்!**

**சாமர்த்தியமாகப் பேசி காரியங்களைச் சாதித்துக்கொள்ளும் தனுசு இராசி நேயர்களே!**

நீங்கள் மற்றவர்களின் மனம் புண்படக்கூடாது என நினைப்பீர்கள். உற்றார் , உறவினர்கள் மீது அளவு கடந்த பாசம் வைத்திருப்பீர்கள். உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதம் பார்க்க மாட்டீர்கள். மற்றவர்கள் கட்டாயப்படுத்தாமல் அன்பாக எடுத்துரைத்தால் அதை முடித்துக் கொடுப்பீர்கள். கூட்டாளிகளைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்கும் சாமர்த்தியம் உங்களுக்கு உண்டு.

உங்களுக்கு இந்த சித்திரை மாதக்கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இராசிநாதன் குரு தங்கள் இராசியைப் பார்க்கிறார். விராயாதிபதியாகவும், பஞ் சமாதிபதியாகவும் விளங்கும் செவ்வாயையும் அதே குருபார்க்கிறார். எனவே பொருளாதாரநிலை உயரும் புதிய திருப்பங்கள் உருவாகும். பெருமைக்குரிய சம்பவங்களை சந்திக்க நேரிடும். சிக்கலில் இருந்து விடுபடுவீர்கள். வழக்குகள் தள்ளுபடியாகும். வருங்கால நலன் கருத் புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள். சனி வக்ர இயக்கத்தில் இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். சனி உங்கள் இராசிக்கு 2,3 க்கு அதிபதியாக விளங்ககிறார். மூன்றுக்கு அததிபதி வக்ரம் பெறும் போது முன்னேற்றத்தில் இருந்த முட்டுக்கட்டைகள் அகலும். விலகிச் சென்ற சகோதரர்கள் வந்து சேருவர். இரண்டிற்கு அதிபதி வக்ரம் பெறுவதால் குடும்ப முன்னேற்றம் கருதி ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

வீடுகட்டும் முயற்சி அல்லது கட்டிய வீட்டை பழுது பார்க்கும் முயற்சியில் கால தாமதம் ஏற்படுகிறதே என்று வருந்தியவர்கள் இனி கவலைப்பட தேவையில்லை. காசு, பண புழக்கம் ஏற்படுவதால் துரித கதியில் அவைகள் நடைபெறத் தொடங்கும். அரசுவழிச் சலுகைகள் எதிர்பார்த் தபடி வந்து சேரும். ஒன்பதுக்கு அதிபதி சூரியன் 5-ல் உச்சம் பெறு வதால், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறும். கல்யாண வாய்ப்புகள் முதல் கடல் தாண்டும் யோகம் வரை நீங்கள் என்ன செய்ய விரும்பினீர்களோ அதைச் செய்து மகிழ்ச்சியடைவீர்கள். செவ் வாய் பெயர்ச்சிக்கு பின் திடீர் மாற்றங்கள் வந்து சேரும். அதற்குள்ளாக சில சிக்கல்களை முடித்துக் கொள்வது நல்லது. உங்கள் இராசிக்கு 7, 10 க்கு அதிபதியான புதன் 5ஆம் இடத்தில் ஏப்ரல் 29 ஆம்திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறார். 10க்கு அதிபதி 5-ல் சஞ்சரிக்கும்போது, உத்தியோக நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் முதல் ஆடம்பரப்பொருட்கள் வரை வாங்கும் வாய்ப்பு கைகூடி வரும். பிரிந்தவர்கள் வந்து இணை வார்கள். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழும் வாய்ப்பு கிடைக்கும்.

உங்கள் இராசிக்கு 6, 11 க்கு அதிபதியான சுக்ரன் 7ஆம் இடத்தில் சஞ்சரிக்கப்போகிறார். இக்காலம் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய காலமாகும். உங்கள் இராசிநாதன் குருவிற்கு சுக்ரன் பகைக்கிரகமாகும். எனவே பகைவனின் பார்வை பதியும் இந்த நேரத்தில் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட்டால்தான் விரயங்களிலிருந்து தப்பிக்க இயலும். குறிப்பாக தொழிலில் எதிரிகள் அலைமோதுவர். உத்தியோகத்தில் உடன்இருப்பவர்களால் மனக் கசப்பு ஏற்படும். இரவு பகலாக பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கவில்லையே என்று நினைப்பீர்கள். குலதெய்வ வழிபட்டில் ஆர்வம் காட்டினால், குழப்பங்களில்இருந்து விடுபட இயலும். இம்மாதம் விஷ்ணு வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். மாருதி வழிபாடும் மகிழ்ச்சியை உண்டாக்கும்.

இம்மாதம் குருபார்க்க மாதத் தொடக்கம் அமைவதால் மகிழ்ச்சி அதிகரிக்கும். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பிள்ளைகள வழியில் நடை பெற இருந்த திருமண்ம் நல்ல முடிவுக்கு வரும் விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கீணவன் மனைவிக்குள் உறவு மேம்படும். வீட்டுத்தொல்லைகள் நல்ல முடி வுக்கு வரும். மாதத்தின் மையப்பகுதி யில் மறக்கமுடியாத சம்பவங்கள் நடைபெறப் போகிறது. சுய ஜாதகத் தில் செவ்வாய் திசை நடப்பவர்கள் சிறப்பு பரிகாரங்களை மேற்கொள் வ்து நல்லது. குருவழிபாடு குதூகலம் வழங்கும்.

**ஜோதிடக் கலைமாமணி சிவல்புரி சிங்காரம்**




உத்தராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்

## ஆரோக்கியம் சீராகி அனந்தப்படுத்தும்

**வக்ர சனிக்கு வழிபாடு தேவை !**

**முன்னேற வேண்டும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் மகர இராசி நேயர்களே!**

நன்மை தீமை இரண்டையும் சீர்தூக்கிப்பார்க்கும் சிறந்த குணம் உங்களுக்கு உண்டு. நீங்கள் வெளிப்படையாகப் பேசுவதால் எதிர்ப்புகள் வந்துசேரும். ஒரு காரியத்தில் ஈடபடுவதற்கு முன்னால் பலமுறை யோசிப்பீர்கள். பிறகு மற்றவர்களின் யோசனகளக் கேட்பீர்கள். அதன் பிறகு தாங்களாகவே ஒரு முடிவு எடுப்பீர்கள். ஏமாற்றம் வந்தால் எல்லாம் நம் நேரம்தான் என்று ஒத்துக்கொள்வீர்கள். ஏற்றம் வந்தால் தாங்கள் எடுத்த முடிவு சரியானது என்று எல்லோரிடமும் சொல்வீர்கள்.

உங்களுக்கு இந்த சித்திரை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் போது மாதத்தொடக்கத்தில் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடிக்கடி மனமாற்றம் ஏற்பட்டநிலை இனி சீராகும். மருத்துவச் செலவு குறையும். தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றிக் கொடுக்க நண்பர்கள் ஒத்துழைப்புச் செய்வார்கள். என்ன இருந்தாலும். இராசிநாதன் சனி வக்ரம் பெறுவதால் எதையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது. வாங்கல் கொடுக்கல்களிலும் வாகனத்தில் செல்லும் போதும் கவனம் தேவை. செவ்வாய் பெயர்ச்சிவரை சற்று பொறுமையைக் கடைப்படிப்பது நல்லது. பொதுவாக எந்த வலிமை யான கிரகமும் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் போதோ அல்லது 4ல் சஞ்சரிக்கும் போதோ தொட்ட கரியங்கள் வெற்றி பெற இறை வழிபாட்டில் அதிக நேரத்தைச் செலுத்த வேண்டும். இஷ்ட தெய்வம், குல தெய்வம் போன்றவைகளைக் கும்பிடும்போது இடர்பாடுகளிலிருந்து விடுபடலாம்.

குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 10ஆம் இடத்தில் பதிவதால், தொழில் வளர்ச்சி எதிர்பார்த்ததைப் போலவே சீராக இருக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் ஏற்பட்ட சிக்கல்கள் அகலும். மாதக் கடைசியில் பெண்குழந்தைகள் வழியே ஏற்பட்ட தொல்லைகள் மற்றும் தொழில் பங்குதாரர்களால் ஏற்பட்ட சச்சரவுகள் அகலும். குடும்பாதிபதி வக்ரம் பெறுவதால் அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

ஏப்ரல் 29 ஆம்திகதி மேட இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 6,9 க்கு அதிபதி 4-ல் சஞ்சரிக்கும்போது வாங்கல் கொடுக்கல்களை ஒழுங்கு செய்துகொள்வீர்கள். சொத்து விற்பனையால் இலாபம் கிடைக்கும் தந்தை வழியில் எதிர்பார்த்த ஒத்துழைப்பும் தானாகவே வந்துசேரும். இக்காலத்தில் மற்றவர்களுக்கு ஜாமீன் சொல்வதை தவிர்ப்பது நல்லது.

உங்கள் இராசிக்கு 5,10 க்கு அதிபதியான சுக்ரன் 6ஆம் இடத்தில் மே 2ஆம்திகதி முதல் சஞ்சரிக்கப் போகிறர். தொழிலை பெரிதாக்க தொகை வேண்டும் என்று எதிர்பார்த் திருப்பீர்கள், அதற்கு அரசுவழி ஒத்துழைப்பும் அருகில் இருப்பவர்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். பிறரை நம்பி பொறுப்பை ஒப்படைக்காமல் உங்கள் நேரடிக்கவனத்திலேயே இருருந்தால் எந்தப் பிரச்சினைகளையும் நீங்கள் எதிர்கொள்ளாமல் இருக்கலாம்.

பழைய தங்கம், வெள்ளி ஆபரணங்களைக் கொடுத்தது புதியவை வாங்கும் சூழ்நிலை உருவாகும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். உத்தியோக உயர்வும் மேலதிகாரிகளின் அனுகூலமும் கிடைக்கும் நரம்இது. இம்மாதம் செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கையை வழிபட்டு வருவதோடு ஆறுபடை வீடுகளில் அருகில் இருக்கும் படை வீட்டிற்கு சென்று வரலாம்.

அஷ்டமத்து செவ்வாயின் ஆதிக்கம் வலுவாக இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உடன் பிறந்தவர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள் வார்களா என்பது சந்தேகம் தான். சில சொத்துக்களை பராமரிக்க முடியாமல் விற்க நினைப்பீர்கள். நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட நோய் வந்து அகலும். சனியின் வக்ர இயக்கம் முடியும் வரை சற்று பொறுமையாக இருப்பது நல்லது. துலாத்தில் சனிவந்த பிறகு நீங்கள் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துங்கள். அருகில்இருக்கும் குடும்பப் பெரியவர்களை ஆலோசித்து முடிவு எடுப்பது நல்லது. ஆஞ்சநேயர் வழிபாடுய ஒற்றுமையைப் பலப்படுத்தும்.


(தொடரும்)

# தமிழீழத்திற்கான பலத்தை உருவாக்கியபின் இந்த உலகத்திலிருந்து விடைபெற விரும்புகிறேன்

## தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்கிறார் கலைஞர்

**(சென்னை)**

**தமிழ் ஈழத்திற்கான உரத்தை அதற்கான பலத்தை அதற்கான எழுச்சியை உருவாக்கி விட்டுத்தான் உங்களிடமிருந்தல்ல இந்த உலகத்திலேயிருந்து கூட நான் விடைபெற விரும்புகின்றேன். அத்தகைய எழுச்சி உருவாக, தமிழ் ஈழம் உருவாக சாத்தீக முறையில், அமைதியான முறையில், அறவழியில், அண்ணா வழியில், அண்ணல் காந்தியடிகள் வழியில் நாம் போராட்டத்தை நடத்த வேண்டும். அந்த அறப்போராட்டம் தமிழ் ஈழத்தை நமக்கு தருகின்ற போராட்டமாக அமைதி போராட்டமாக அமையும் என தி.மு.க. தலைவர் கருணாநிதி பேசியுள்ளார்.**



சட்டமன்றத்தில் ஜனநாயகம் படும்பாடு என்ற தலைப்பில் தி.மு.க. கண்டனப் பொதுக் கூட்டம் சென்னை பெரவள்ளூர் சதுக்கத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நான் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு செய்தியாளர்களிடத்திலே பேசும்போது உங்களுடைய நிறைவேறாத கனவு என்ன வென்று கேட்டார்கள். நான் சொன்னேன் இதுவரையிலே நிறைவேறாமல் இருக்கிற கனவு தமிழ் ஈழம்தான் என்று சொன்னேன். அது நிறைவேறாமல் போனதற்கு பல காரணங்கள் உண்டு. உயிரையே துச்சமாக மதித்த விடுதலைப்பேரர் வீரர்கள் ஆயிரம் ஆயிரமாய் உயிரிழந்தும் கூட அது நிறைவேறாமல் போய் விட்டது. அதற்கான காரணங்களை ஆராய்ந்து புதிய குழப்பங்களை உருவாக்க விரும்பவில்லை. அந்தக் காரணங்கள் அப்படியே இருக்கட்டும். ஆனால், தமிழன் தலைநிமிர்ந்து வாழ வேண்டும். அதற்கு பழைய நிலைமைகளையெல்லாம் மறந்து புதிய நிலைமைகளை உருவாக்குவோம். அந்த நம்பிக்கையிலேதான் தமிழ் ஈழம் வேண்டும் என்ற அந்த கனவு நிறைவேற வேண்டும் என்று நான் தொடர்ந்து எழுதிக் கொண்டிருக்கிறேன்.

தமிழ் ஈழத்திற்கு இன்றையதினம் புதிய எழுச்சி, புதிய உருவம் ஏற்படுத்துகின்ற ஒரு காலகட்டத்தில் நாம்இருக்கிறோம் என்று கருதுகின்றேன்.

50,60 ஆண்டுகளுக்கு முன்பு தந்தை செல்வா அவர்களுடைய தலைமையில் உருவான கீதம்,தமிழ் ஈழம் என்பது அந்த காலத்திலே இருந்து அவர்களோடு இணைந்து தி.மு.கவும் பெரியாரும் அண்ணாவும் நானும் நம்முடைய நண்பர்களும் தந்தை செல்வா எந்த குறிக்கோளுக்காக அன்றைக்கு கொடியேற்றினாரோ அந்த கொடிகளிலே நின்று தமிழ் ஈழம் பெற, தனித் தமிழ் ஈழம் பெற நாம் பாடுபட வேண்டும்.


இது இலங்கையிலே இருக்கின்ற ஜனாதிபதியின் காதிலே விழுந்து அவர்கள் இதற்கு மறுப்புரைக்காலம். ஆதிக்கக்காரர்கள் ஆதிக்கத்தை அவ்வளவு சுலபத்திலே விட்டு விட மாட்டார்கள். ஆனால் நாம் அந்த ஆதிக்கத்தில் இருந்து விடுபட்டு நம்முடைய தமிழன் தமிழனாக தமிழ் மொழிக்கு உரியவனாக வாழுகின்ற அந்த விடுதலை அவர்களுக்க கிடைக்கின்ற வரையில் நாம் போராடுவோம்.

உங்களுக்க ஞாபகம் இருக்கும். ஏற்கனவே டெசோ என்ற ஒரு இயக்கத்தை நாம் நடத்தினோம். டெசோ என்றால் தமிழ் ஈழம் சப்போர்ட்டர்ஸ் ஆர்கனிகேஷன்ஸ் அந்த டெசோவை மீண்டும் தொடங்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை. அதற்கு நீங்களெல்லாம் உங்களுடைய ஆதரவை தர வேண்டும்.

இன்றைக்கு இந்த கூட்டத்திலே எனக்கு இரண்டும் இலட்சியங்கள். ஒன்று தமிழக சட்டமன்றத்திலே ஜனநாயகம் ஓங்க வேண்டும் என்பது. அது எப்போது என்று கேட்டால் அது இப்போதா? அல்லது மறுபடியும் நாம் ஆட்சிக்கு வரும்போதா.

அதற்கு விடைக் காண வேண்டியது நீங்கள் இரண்டாவது தமிழ் ஈழம் பெறுவதற்கு இலங்கையிலே உள்ளவர்கள் தங்களுடைய ஒப்புதலை தரு வதற்கு ஏற்றவகையில் நாம் அதற்கு நம்முடைய சக்தியை திரட்ட வேண்டும். அதற்கு நம்முடைய மத்திய பேரரசும் நமக்கு ஆதரவை வழங்க வேண்டும் என்ற அந்த கோரிக்கையை இந்த மாபெரும் மக்கள் சமுத்திரத்திலே வைக்கின்றேன் என பேசியுள்ளார். (அ-2)

# தனிஈழம் குறித்த கேள்விக்கு மௌனம் காத்த டி.ஆர்.பாலு



மெனிக்பாம் முகாம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்காண மக்கள் முள் வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். தங்குவதற்கு இடமில்லாமல் கொட்டிலில் வாழ்கின்றனர். கோயில், மசூதி, தேவாலயம் என்பவற்றில் இராணுவத்தின் பிரசன்னம் உண்டு. ஆயினும் இந்தியா சென்று வந்த குழு மத்திய அரசிடம் அறிக்கை அளித்ததா இல்லையா என்பது பற்றி தெரியவில்லை என தி.மு.க. எம்.பியான டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

லோக்சபாவில் கடந்த 24 ஆம் திகதி பூச்சிய நேரத்தின் போது உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எதிர்க் கட்சி தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் இலங்கைக்கு சமீபத்தில் எம்.பி.க்கள் குழு சென்று வந்துள்ளது. அந்தக் குழு வந்தவுடன் மத்திய அரசிடம் அறிக்கை அளித்ததா, இல்லையா என்பது பற்றி தெரியவில்லை. எம்.பிக்கள் குழு நேரில் என்ன கண்டு வந்தது என்பது பற்றி யாருக்கும் இதுவரை அதிகாரபூர்வமாக தெரியவில்லை.

இருப்பினும், குழுவில் சென்றிருந்த சில எம்.பிக்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் மிகவும் கவலைக்குரியதாக உள்ளன. போர் முடிந்து மூன்று ஆண்டுகளாகியும் கூட அங்கு இன்னும் நிலைமை மாறவே இல்லை.

மெனிக்பாம் போன்ற இடங்களில் ஆயிரக்கணக்காண மக்கள் முள்வேலி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். தங்குவதற்கு இடமில்லாமல் கொட்டடியில் அடைத்து வைக்கப்பட்டு அங்கு, பல குழந்தைகள் அநாதைகளாக உள்ளனர். அவர்களுக்கு போதிய கல்வி வசதி செய்து தரவில்லை. இலங்கை இராணுவத்தினர் எந்நேரமும் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். கோயில், மசூதி, தேவாலயம் என எல்லாவற்றிலும் இராணுவத்தினர் உள்ளனர். மக்களை துன்புறுத்தியும் வருகின்றனர். இடம்பெயர்ந்த மக்கள் பலரும் இன்னலுக்குள்ளாகி வருகின்றனர்.

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளாக இனப்பிரச்சினை தீவிரமாக உள்ளது. இன்னும் தமிழ் மக்கள் மீது வன்முறை தொடர்கிறது. 1987 ஆம் ஆண்டு போடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தையும் மதிக்கவில்லை. அதன் பேரில் எந்த முடிவும் எடுக்கப்படவும் இல்லை. 13 ஆவது சட்டத் திருத்தத்தையும் பல ஆண்டுகளாக நிறைவேற்ற இலங்கை அரசு மறுக்கிறது. எனவே, தமிழர்கள் பகுதியில் ஒரு வாக்கெடுப்பை நடத்த வேண்டும். உலகின் பல்வேறு இடங்களில் தனிநாடுகள் உருவாகி வருகின்றன. சமீபத்தில் கூட கொசாவோ, கிழக்கு தைமூர் மற்றும் தெற்கு சூடான் போன்றவை தனிநாடுகளாக உருவெடுத்துள்ளன.

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு தனி ஈழமாகவே இருக்க முடியும். இதற்கு மத்திய அரசும், சர்வதேச சமூகமும் முன் முயற்சிகள் எடுக்க வேண்டும். இது தவிர தமிழர்கள் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இந்தியா குரல் கொடுக்க வேண்டும்.

தமிழர் பகுதிகளில் அமைதியும், நல்லிணக்கமும் நிலவிட வேண்டுமெனில் அதற்கு இந்தியா எடுக்கும் முயற்சிகள் தான் முக்கியமானதாக இருக்கும். அதற்கு ஒரேவழி தனிஈழம். அதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என் றார்.

அவர் பேசியதும் அ.தி.மு.க. எம்.பியான தம்பித்துரை எழுந்து, தனிஈழம் அமைக்க இந்தியா முன்முயற்சிகள் எடுக்கவில்லை எனில் மத்திய அரசில் இருந்து தி.மு.க. வெளியேறுமா? என்று கேட்டார். அதற்கு டி.ஆர்.பாலு பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக அமர்ந்து விட்டார். (அ-2)

## அலங்கார உற்சவம்

(கிளிநொச்சி)

ஜெயபுரம் வடக்கு அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பித்து தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் மே மாதம் 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ-9)

## செயலமர்வு

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சைவ சமயம், கிறிஸ்தவ சமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பாடசாலை மட்ட கணிப்பீட்டுச் செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப 4.30 மணிவரை மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

கடந்த 20 ஆம்திகதி வெள்ளிக்கிழமைமேற்படி பாடங்களுக்காக நடைபெற்ற செயலமர்வில் பங்கு பற்றாத ஆசிரியர்கள் மட்டும் இச் செயலமர்வில் பங்கு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 113




சோவியத்தின் சிறார்கள் மீதான ஜேர்மனியின் கொடுமைகளைச் சித்தரிக்கும் சுவரொட்டி

திடீரெனத் தாக்குலைத் தொடுத்தது, முதல் அடியின் பெரும் பிளவுச் சக்தி, தாக்குதலின் உயர்வான வேகங்கள், மொபைல் சாதனங் களைகப் பரவலாகப் பயன்படுத் தயது, முப்படைகள் மற்றும் படை வகைகளின் பரஸ்பர இணக்கத்தை திட்டவட்டமாக ஒழுங்கமைத்தது. ஆகியன யாஸ்ஸி-கிஷினேவ் நடவடிக்கையின் சிறப்பு அம்சங்களாகும். இது சோவியத் போர்க் கலையின் வரலாற்றில் எதிரியை விரைவாகச் சற்றிவளைத்து அதே அள்வு விரைவாக முறியடித்ததற்கான மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக இடம்பெற்றது.

பாசிச ஜேர்மனிய தெற்கு உக்ரேன் படைத்தொகுதி சோவியத் இராணுவத்தால் முறியடிக்கப் பட்டதானது, ருமேனியாவில் அண்டனேஸ்கு பாசிச ஆட்சி தூக்கியெறியப்படுவதற்கும் ஹிட்லர் ஜேர்மனிக்கு ஆதரவான யுத்தத்திலிருந்து நாட்டைவெளியேற்றவும் அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. அகஸ்டு 23 ஆம்திகதி மீஹாய் அரசனின் கட்டளைக்கேற்ப இ.அண்டனேஸ்குவும் இவனுடைய உதவியாளனாகிய ம.அண்டனேஸ்குவும் கைது செய்யப்பட்டனர். விரைவிலேயே இன்னும் சில அமைச்சர்களும் கைது செய்யப்பட்டனர்.

அண்டனேஸ்கு அரசாங்கத்தை தூக்கியெறிவதில் மீஹாய் அரசனும் அரசவையினரும் பங்கேற்றது கட்டாயப்படுத்தப்பட்டதொரு நடவடிக்கையாக இருந்தது. யாஸ்ஸி மற்றும் கிஷினேவ் பாசிச ஜேர்மனியத் துருப்புகள் முறியடிக்கப்படுவ தைப் பார்த்ததும் செஞ்சேனையின் விடுதலைப்பணிக்கு மக்களின் ஆத ரவைக் கண்டதும்தான் இவர்கள் சர்வாதிகாரியைக் கைதுசெய்ய ஒப்புக் கொண்டனர். அதே நாளன்று மக்கள் எழுச்சி வெடித்தது. தேசபக்த சக்திகளின் தாக்குதலை தாங்க முடியாது ருமேனியாவில் பாசிச ஆட்சி தகர்ந்து வீழ்ந்தது.



உக்ரேன் வீரர்களை நினைவுகூறும் நினைவாலயம்

"1944 ஆம்ஆண்டு ஆகஸ்ட் 23 ஆம் திகதி வெற்றி நடைபோட்ட சேவியத்இராணுவம் ருமேனியாவை விடுவித்தது. ருமேனியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தேச பக்த சக்திகள் அண்டனேஸ்குவின் சர்வாதிகாரத்தை தூக்கியெறிந்த இந்த நாள் ருமேனிய மக்களின் மாபெரும் தேசிய விழா நாளாக ஆனது. சோவியத் இராணுவம் எங்கள் நாட்டை விடுவித்ததால் ஜனநாயக சுதந்திர ருமேனியாவைக் கட்டுவதற்கான பாதை உழைப்பாளிகளின்முன் திறந்துவிடப் பட்டது" என்று ருமனியக் கம்யூனிசக் கட்சியின் பொதுச்செயலாளர் குயோர் குயூக்-தேஷ் எழுதினார்.

ஆகஸ்டு 23 ஆம்திகதி இரவு 11.30இற்கு புகாரேஷ்டில் அண்டனேஸ்கு அரசாங்கம் கவிழ்க்கப் பட்டதைக் குறித்தும் தேசிய ஐக்கிய நாடுகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவது பற்றியும் சமரச நிபந்தனைகளை ருமேனியா ஏற்றுக்கொள்வதைப்பற்றியும் வானொலியில்அறிவிக்கப்பட்டது. அடுத்த நாளன்று ஜேர்மனிக்கு எதிராக ருமேனியா யுத்தத்தை அறிவித்தது.

## தீர்மானகரமான வெற்றிகளின் ஆண்டு




உக்ரேன் சமரின் தியாகிகளை நினைவு கூறும் நினைவாலயம்

ஆகஸ்ட் 25 ஆம் திகதி இரவில் சோவியத்யூனியனின் அயல் விவகாரத் துறை மக்கள் கமிசாரகத்தின் அறிக்கை வானொலி மூலம் ஒலிபரப் பப்பட்டது. "ருமேனியப்பிரதேசத்தின் ஏதாவதொரு பகுதியை கைப்பற்றும் நோக்கமோ அல்லது ருமேனியாவில் நிலவும்சமூக அமைப்பை மாற்றும் எண்ணமோ அல்லது ருமேனியாவின் சுதந்திரத்திற்கு ஏதாவது ஒருவகையில் பங்கம் ஏற்படுத்தும் விருப்பமோ தனக்குக் கிடையாது என்று, இந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் தான் விடுத்த அறிக்கையை இன்னுமொருமுறை ஊர்ஜிதப்படுத்துவது தகும் என்று ருமேனிய சம்பவங்களின் தொடர்பாக சோவியத் அரசாங்கம் கருதுகிறது. ருமேனியர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து பாசிச ஜேர்மனியக் கொடுமையலிருந்து ருமேனியாவை விடுவித்து சுந்திரத்தைப் புனரமைப்பது அவசியம் என சோவியத் அரசாங்கம் கருதுகிறது."

"ருமேனியத்துருப்புகள் செஞ்சேனைக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, ஜேர்மனியர்களுக்கெதிராக ருமேனிய சுதந்திரத்திற்காகவும் அல்லது ஹங்கேரியர்களுக்கெதிராக டிரான்சில்வானியாவின் விடுதலைக்காகவும் செஞ்சேனையோடு கரம்கோர்த்து போரிடுவதாக உறுதிமொழி தந்தால், செஞ்சேனை ருமேனியத் துருப்புகளைப் படைக்கலைப்பிற்கு உள்ளாக்காது. எல்லா ஆயுதங்களையும் இவற்றிடமே விட்டுவைக்கும், இந்த கௌரவக் கடமையை நிறைவேற்ற சகல விதங்களிலும் உதவி செய்யும் என்று சோவியத் உயர்மட்டப் படைத்தலைமை கருதுகிறது.

ஆனால், ருமேனிய மக்களை ஒடுக்கி, அடிமைப்படுத்தும் சாதனமாக உள்ள ஜேர்மனியத்துருப்புகள் ருமேனியாவில் ஒழித்துக்கட்டப்பட்ட பிஞ்னர்தான் செஞ்சேனை ருமேனியப்பரப்பில் தன் இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தும். ஜேர்மனியத் துருப்புகளை ஒழித்துக்கட்டுவதில் செஞ்சேனைக்கு ருமேனியத் துருப்புகள் உதவுவதுதான் ருமேனியாவில் இராணுவ நடவடிக்கைகளை விரைவாக நிறுத்தவும் நேச நாடுகளின் கூட்டணியுடன் ருமேனியா சமரசம் செய்துகொள்ளவும் உள்ள ஒரே சாதனமாக்கும்."

சோவியத் அரசாங்கத்தின் புதிய அறிக்கையை ருமேனிய மக்கள் மிகவும் திருப்தியுடன் எதிர் கொண்டனர்.

வெகு ஜனங்களின் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய ருமேனியக் கம்யூனிஸ்ட் கட்சி, எழுச்சிக்கு வெகுஜன ஸ்தாபன அமைப்புத் தன்மையை அளித்து அதன் வெற்றிக்கு வழிகோலியது.

உக்ரேன் சமரின் வீரர்களை நினைவு கூறும் நினைவாலயம்



(தொடரும்)

# போர்க்குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வி எழுப்புங்கள்!

## தென்கொரிய ஜனாதிபதிக்கு பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடிதம்



(கொழும்பு)

**தென்கொரியாவுக்கு இலங்கை ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டுள்ள நிலையில் தமிழர்கள் மீதான போர் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் இலங்கை அரசுத் தலைவரிடம் கேள்வியெழுப்புங்கள் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தென்கொரிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**

நான்கு நாட்கள் பயணமாக இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் தென்கொரியாவுக்கு சென்றுள்ள நிலையில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் தென்கொரிய ஜனாதிபதி லீ மையூங் பா இற்கு கடிதமொன்றினை அனுப்பியுள்ளார்.

போரின் இறுதி ஐந்து மாதங்களில் மட்டும் 40 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதனை ஐ.நாவின் புள்ளி விபரங்களில் சுட்டிக்காட்டியுள்ளதை தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ள பிரதமர் வி.உருத்திரகுமாரன் இலங்கை அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் கட்டளையின் கீழ் உள்ள இராணுவத்தினரே இப்படுகொலைகளை மேற்கொண்டுள்ளதோடு பெண்கள் மீதான பாலியல் வன்புணர்களிலும் ஈடுபட்டுள்ளனர் எனவும் அவர் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

1958 ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் மீது இத்தகைய பாரிய படுகொலைகள் இடம்பெற்று வருகின்றமையினை சுட்டிக்காட்டியுள்ள அவர் 2009 ஆண்டின் போரின் போது பாதுகாப்பு வலயங்கள் என இலங்கையினால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் திட்டமிட்ட முறையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறித்தும் அவர் எடுத்துரைத்துள்ளார். (அ-2)

# பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு தொழிற்பயிற்சி

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு கல்வி வலய முறைசாராக்கல்விப் பிரிவின்னூடாக பாடசாலைகளை விட்டு விலகிய 210 மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக முறைசாராக்கல்வி பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் க.சிவதாஸ் தெரிவித்தார்.

இம் முறைசாராக்கல்விப்பிரிவின் ஊடாக 72 மாணவர்கள் தையல்பயிற்சியும் 22 மாணவர்கள் தோல் பொருட்கள் உற்பத்தி பயிற்சியும் 26 மாணவர்கள் மணப்பெண் அலங்கார பயிற்சியும் 20 மாணவர்கள் கேக் ஐசிங்கும் 20 மாணவர்கள் உணவு பதனிடல் பாதுகாப்பு பயிற்சியும் 50 மாணவர்களுக்கு அடிப்படை ஆங்கிலப் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார். மேலும் குளிரூட்டி திருத்துதல், ஒட்டுவேலை, மணப்பெண் அலங்காரம், கணனி, கேக்ஐசிங், வீட்டுமின் இணைப்பு, அலுமினியம் பொருத்துதல் ஆகிய பாட நெறிகளும் மே மாதம் 02 ஆம் திகதி புதன்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-9-266)

# தபால்மூலம் போதைப்பொருள் கடத்தல்; பிரிட்டன் பிரஜை கைது

(கொழும்பு)

கொழும்பு மத்திய தபாலகத்திற்கு தபால் மூலம் போதைப் பொருள் வந்தபோது அதனை பெறச் சென்றவேளை அதிகாரிகள் பிடியில் இருந்து தப்பியோடிய வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் குறித்த வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.


தாய்லாந்தின்- பெங்கோக் நோக்கிச் செல்லவிருந்த குறித்த பிரித்தானிய பிரஜை குறித்து பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இலங்கையின் பிரபலமான நடிகையின் பெயர் முகவரிக்கு வெளிநாட்டில் இருந்து கொழும்பு மத்திய தபாலகத்திற்கு ஹசீஸ் எனப்படும் போதைப் பொருள் சஞ்சிகையில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் வந்தது.

இதனைப் பெறுவதற்கு பிரித்தானிய நாட்டுப் பிரஜைகள் சென்றிருந்தபோது ஒருவர் கையும் களவுமாக பிடிபடவே மற்றையவர் தப்பிச் சென்றிருந்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டுள்ளார். (அ-2)

# பிரி.இலங்கை உயர்ஸ்தானிகருக்கு முதல்முறையாக சிறப்பு விருது



பிரித்தானியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகரும் மருத்துவருமான கிறிஸ் நோனிஸ் இந்த வருடத்தின் சிறந்த ஆசிய வலயத்தின் இராஜதந்திரிக்கான விருதை பெற்றுக் கொண்டுள்ளார்.

இங்கிலாந்தின் லண்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராஜதந்திரிகளுக்கான விருது வழங்கல் நிகழ்வில் இவருக்கான கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

லண்டன் நகரில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரி காரியாலயங்கள் 164 இல் இருந்து இராஜதந்திரிகள் இந்த விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டிருந்தனர்.

இதன்படி இறுதியாக ஆசிய வலயத்திற்கான சிறந்த இராஜதந்திரியாக கிரிஸ் நோனிஸ் தெரிவானார். இலங்கையில் பதவி வகித்த இராஜதந்திரிகளில் வரலாற்றில் முதன் முறையாக இவருக்கு கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் தமது நாட்டுக்காக மேற்கொண்ட சேவைகள், கல்வி, பொதுநலவாய நாடுகள் அமர்வுகள் பலவற்றில் தலைமை பொறுப்புகளை வகித்தமை மற்றும் சர்வதேச உறவுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டமைக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. (அ-2)

# குடு விநியோக மத்திய நிலையம் முற்றுகை

## பணியில் ஈடுபட்ட ஐவர் கைது

இலங்கையில் குடு எனப்படும் போதைப் பொருள் விநியோகிக்கும் பிரதான மத்திய நிலையமொன்று ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பகுதியில் முற்றுகையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலைக்கு அருகில் உள்ள 2 ஆயிரம் பிளாஸா என்ற அதிசொகுசு அடுக்குமாடி வீட்டுத்திட்டத்தில் 10 ஆவது மாடியில் உள்ள வீடொன்றை சோதனை செய்தபோது அங்கு குடு விநியோக நடவடிக்கை இடம்பெறுவது கண்டறியப்பட்டுள்ளது.

வெளிநாட்டிற்குச் சென்று மறைந்து வாழும் சுதா எனப்படும் நபரினால் குறித்த குடு விநியோக நிலையம் நடத்திச் செல்லப்பட்டு வந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

வீட்டை முற்றுகையிட்ட போது அங்கு குடு பொதி செய்து கொண்டிருந்த 30,32,34 வயதுடைய மூன்று பெண்களும் 26, 32 வயதுடைய இரு ஆண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் குடு விநியோகிக்க பயன்படுத்தப்பட்ட விசேட லொறியும் 500 கிராம் குடுவும் 76 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பணத்துடனும் சாரதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களிடம் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# புத்தாண்டு நிகழ்வுகள்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையமும் மீண்டும் இணைந்து நடாத்தும் தமிழ் சிங்கள புத்தாண்டு நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பாரம்பரிய விளையாட் டுக்களும் கலை நிகழ்வுகளும் தமிழ் சிங்கள கலைஞர்களின் ஒரே மேடை யிலான இசைச் சங்கமும் நடைபெற வுள்ளன. (அ-9)

# (சா/த) பரீட்சையில் சித்தியடைவோரின் எண்ணிக்கையை உயர்த்த நடவடிக்கை

## கல்வி அமைச்சர் பந்துல தெரிவிப்பு

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைவோரின் எண்ணிக்கையை 80 வீதம் வரை உயர்த்துவதற்கு உத்தேசித்துள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

பரீட்சைகள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வொன்றின் அடிப்படையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அதிக சித்தி மட்டத்தை அடைந்த 56 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# எங்களின் பிள்ளைகள் இருக்கிறார்களா? செத்தார்களா?

ஈழத் தமிழர் நிலையை அறிய இந்தியா அனுப்பிய இரண்டாவது எம்.பிக்கள் குழு பொதுவாக எந்தக் குழுவும் போய்விட்டு வந்த பின்னர்தான் சர்ச்சையும் விவாதங்களும் வரும். ஆனால், இந்தக் குழுவை அமைத்தது முதலே சர்ச்சைகள்தான்.



சுஷ்மா ஸ்வராஜ் குழுவினருடன் பசில் ராஜபக்ஷே

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தமிழகத்தில் ஓங்கிக் குரல் கொடுக்கும் ம.தி.மு.க., இந்தியக் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் ஆரம்பத்திலேயே இந்தக் குழுவில் இல்லை. அடுத்து அ.தி.மு.க. விலகிக் கொள்ள தி.மு.கவும் பின்னர் வெளியேறியது. அதைத் தொடர்ந்து திரிணாமுல் காங்கிரஸ் மற்றும் சமாஸ்வாடி கட்சியும் விலகிக் கொண்டன. இந்த நிலையில் பி.ஜே.பியின் அகில இந்தியத் தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜ் தலைமையில் 12 உறுப்பினர்களைக் கொண்ட குழு மட்டும் கடந்த 16 ஆம் திகதி கொழும்பு சென்றடைந்தது!

## இந்தியக் குழுவிடம் ஈழக்குரல்!

### திசை மாற்றிய பசில் ராஜபக்ஷ

சுற்றுப் பயணத்தின் முதல் நாள் காலை இலங்கையின் பொருளாதார அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பசில் ராஜபக்ஷவை கொழும்பில் சந்தித்தது இந்தியக்குழு. இலங்கையில் அரை நூற்றாண்டுக்கு மேல் தொடர்ந்து வரும் இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும். புனரமைப்புக்கான வளர்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க வேண்டும். அரசு சார்பில் அமைக்கப்பட்ட ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும் என்று இந்தியக் குழு அவரிடம் வலியுறுத்தி உள்ளது. அப்போது புனரமைப்புக்கான வளர்ச்சித்திட்டப் பணிகள் குறித்தே பசில் ராஜபக்ஷ பேசி இருக்கிறார். தமிழ் மக்களுக்கான பிரச்சினையை எப்படி இலங்கை அரசு கையாள்கிறது என்பதைப் பற்றி எதுவும் பேசவில்லையாம்.

ஜூனியர் விகடன்

### பதில் இல்லாத கேள்வி!

இலங்கை நாடாளுமன்றத்துக்குச் சென்ற இந்தியக் குழு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் இலங்கை அரசுத் தரப்புடன் ஒரு சந்திப்பு நடத்தியது. இதில் இலங்கை அரசு சார்பில் பேசிய சபை முதல்வர் நிமால் சிறீபால டி சில்வா இனப் பிரச்சினையைத் தீர்த்திட் அரசு சார்பில் நாடாளுமன்றத் தேர்வுக் குழுவை அமைத்து உள்ளோம். ஆனால், இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்புத் தரவில்லை என்று சொன்னதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இடைமறித்துப் பேசியுள்ளார்.

இலங்கை அரசுடன் 2011 முதல் பேச்சுவார்த்தை நடத்துகிறோம். இன்னும் புலிகளைப் பற்றியே அரசு பேசுகிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்ட வரைவை அரசிடம் கொடுத்துள்ளோம். ஆனால், அரசு தங்கள் நிலைப்பாட்டை தெரிவிக்கவே இல்லை என்று இரா.சம்பந்தன் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

ஒன்றுபட்ட இலங்கைக்குள் பேச்சுவார்த்தையின் வாயிலாகவே தீர்வுகாண தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கோருகிறது. இதை ஏன் அரசு மறுக்கிறது? என்று இந்தியக் குழுவினர் கேள்வி எழுப்பினர். ஆனால், இதற்குச் சரியான பதிலை அமைச்சரால் சொல்ல முடியவில்லை!

### எங்க அரிசியைப் பாருங்கள்!

இரண்டாம் நாள் வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணப் பகுதிகளை பார்வையிட்டனர். அதன் பின்னர் செட்டிக்குளம், புளியங்குளம், மாங்குளம், முள்ளிவாய்க்கால் போன்ற பகுதிகளுக்கும் சென்றனர். செட்டிக்குளத்தில் உள்ள ஆனந்த குமாரசாமி முகாமுக்குச் சென்ற இந்தியக குழு அங்கே இருந்த அதிகாரிகளிடம் மீள்குடியேற்றம் தொடர்பாக கேள்வி எழுப்பியது. மூன்று இலட்சம் மக்கள் 2009 ஆம் ஆண்டு நடந்த போரில் இடம்பெயர்ந்து வந்தார்கள். அவர்களில் 98 சதவிகிதம் பேர் மீள்குடியேற்றம் . செய்யப்பட்டு விட்டனர். மீதம் உள்ள இரண்டு சதவிகித மக்களையும் ஜூன் 30 ஆம் திகதிக்குள் மீள்குடியேற்றம் செய்து விடுவோம் என்று அரசு தரப்பு கூறியது. அதன் பின்னர் மக்களைச் சந்தித்தனர். இவர்களைப் பார்த்ததும் ஒரு பெண் புழுத்துப்போன அரிசியைக் கொண்டு வந்து காட்டினார்.



மக்களுடன் சந்திப்பு...

எங்களுக்குக் கொடுக்கப்படும் அரிசியைப் பாருங்கள்... இதை எப்படிச் சாப்பிடுவோம்? என்று மக்கள் கண்ணீருடன் கேள்வி கேட்டார்கள். அப்போதும் தரமான பொருட்களைத் தான் தருகிறோம் என்று அரசு தரப்பு மனசாட்சி இல்லாமல் சொன்னதாம்.

### எங்கே எங்க பிள்ளைங்க?


மெனிக்பாம் முகாமுக்கு இந்தியக் குழு சென்றபோது அவர்களுடன் ஊடகவியலாளர்களும் அனுமதிக்கப்பட்டனர். ஒரு இலட்சம் பேர் இருந்த இடத்தில் இப்போது 6 ஆயிரம் பேர் மட்டுமே உள்ளனர்.

அது கிட்டத்தட்ட திறந்த வெளிச் சிறைச்சாலையாகவே காட்சி அளித்துள்ளது. தகர வீடுகளில் இருந்த ஆண்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். பெரும்பான்மையாக இருந்த பெண்கள் விசாரணை என்று அழைத்துச் செல்லப்பட்ட எங்கள் பிள்ளைகளை எல்லாம் காணோம். அவர்கள் உயிரோடு இருக்கிறாங்களா, இல்லையான்னே தெரியலை. எங்க பிள்ளைகளை மீட்டுத் தாங்க ஐயா என்று கதறி இருக்கிறார்கள். பதில் சொல்லத்தான் யாருக்கும் துணிவு இல்லை.

மகா.தமிழ் பிரபாகரன்


இந்தக் குழுவின் பயணத்தால் ஈழத் தமிழர்களுக்கு என்ன பயன் கிடைத்தது என்பதை சுஷ்மாதான் நேர்மையாக அறிவிக்க வேண்டும்.





தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இளைஞர் பரிமாற்று வேலைத்திட்டம் அண்மையில் வவுனியாவில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூந்தோட்டச் செய்தியாளர்)

# இளைஞர்களும் ஆன்மீகமும்



ஆன்மீகம் 39

*கேள்வி: வெற்றியின் அடையாளம் பதவியா? அல்லது தான் என்ற உணர்வா? (அகங்காரமா?)*

இல்லை, கள்ளமற்ற உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் புன்னகை, வாழ்வில் நீ உணரும் சுதந்திரம் இவை வெற்றியின் அடையாளம்.

*நீ என்ன சொல்கிறாய்?*
*நீ சுதந்திரமாய் இருக்கிறாயா?*
*அப்படியானால் நீ வெற்றி பெற்றவன்!*
*நீ நிகழ் கணத்தில் இருக்கிறாயா?*
*அப்படியானால் நீ வெற்றி பெற்றவன்!*
*உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு பயன்படுபவராக இருக்கிறாயா?*
*அப்படியானால் உன் வாழ்க்கை வெற்றிகரமானது!*
*உன்னைச் சுற்றியுள்ள எல்லோரிடமும் அன்பை உணருகிறாயா?*
*அப்படியானால் அதுதான் வர்ழ்க்கையின் வெற்றியின் அடையாளம்!*

நீ வெற்றி, வெற்றி என்று அதிக ஆர்வம் காட்டும்போது அது உன்னுள் உள்ள நம்பிக்கைக் குறைவைக் காட்டுகிறது. நீ 100 % முயற்சி எடுத்துச் செய்துவிட்டு வெற்றியை இலட்சியம் செய்யாமல் இருத்தல் நம்பிக்கையியின் அடையாளம் - அது உன் தனித்திறனை வலுப்படுத்துகிறது. உண்மையான வெற்றி-வெற்றியை இலட்சியம் செய்யாமல் இருத்தல்.

இளமையின் அடையாளம் தடைகளிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக இருத்தல். நீ எல்லாவற்றிலும் குறை கண்டுபிடித்துக்கொண்டு கடவுளிடம் நம்பிக்கை கொள்ளாமல் எதிலும் ஆர்வமற்று இருந்தால் நீ உன் இளமையை இழந்துவிடுவாய். யாரயும் நிந்தனை செய்யாமல், கேலிபேசாமல் திறந்த மனத்துடன், உற்சாகமுடன் இருப்பது உன்னை இளமை உணர்வுகளுடன் இருக்கச் செய்யும். சோர்வாக நீண்ட முகத்துடன் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டு உட்காராமல் எந்தச் சவாலையும் சந்திக்கத்தயாராக இருக்க வேண்டும். எதையாவது புதியதாகச் செய்ய துடிப்புடன் இருக்க வேண்டும். இளமை என்றால் சுறுசுறுப்பு- சுடர்விடும் பிரகாசம்.

இளைஞர்களால் சலிப்படைய முடியாது. யாரையும் சலிப்படையச் செய்யவும் முடியாது. பல செல்வச் செழிப்புள்ள வீடுகளில் குழந்தைகள் எதிலும் உற்சாகமில்லாமல் எதிலும் ஆர்வமில்லாமல் காணப்படுகிறார்கள்.



ஒரு இளைஞன், எதையும் தெரிந்து கொள்ள- கற்றுக்கொள்ள திறந்த மனத்துடன் இருக்கவேண்டும். யாரையும் எதற்காகவாவது எப்போதும் கேலி செய்து கொண்டிருப்பதும் முட்டாள் தனத்தின் அடையாளமே. நீ உன்னைத் தவிர மற்ற எல்லோருமே முட்டாள்கள்-தவறானவர்கள் என நினைக்கிறாய். நாம் மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகிறது. அவர்களைச் சேற்றில் தள்ளிவிடாமல், அவர்களைக் கைதூக்கி மேலே விடவேண்டும். இரண்டு நாள் சுதர்சனக் கிரியா பயிற்சி- உனக்குள் பொங்கும் உற்சாகத்தைக் கொண்டுவரும். நிறைய சிரி. சில நிமிட நகைச்சுவை பல பிரச்சினைகளைத் தீர்க்கும்.

இந்த பிரபஞ்சத்தின் விதை உன்னுள் ஆழத்தில் உள்ளது. உன் ஆன்மாவில், இந்த மனித உடம்பிலேயே, அதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியும்-அறிந்து கொள்ள முடியும். அது சிரமமே அல்ல. இந்த வாழ்க்கை காலத்திலேயே அது முடியும். எதிர்வரும் வாழ்க்கை காலத்திற்காக காத்திருக்கத் தேவையில்லை. உன் அன்பைப் பக்தியாக மாறவிடு. உனக்குள் இருக்கும் கள்ளங்கபடமற்ற தன்மையை எழுப்பிவிடு.

உன்னால் செய்ய முடிந்தவற்றை செய்ய மட்டுமே உனக்குத் தேவை ஏற்படுகிறது. இதை நீ அறிந்து கொள்ளும் போது உனக்குள் பலம் வருகிறது.

உன் செயல்களைக் காட்டிலும், உன் வாழ்க்கை என்பது மிகப் பெரியது என்பதை அறிந்துகொள். வாழ்க்கை என்பது மற்றவரிடம் பெறப்படுபவை பற்றியது மட்டும் அல்ல. அது நாம் மற்றவருக்கு எவ்வளவு பயன்உள்ளவராய் உள்ளோம் என்பதைப் பொறுத்தது. இந்த உலகத்திற்கு, உன்னைச்சுற்றியுள்ளவர்களுக்கு நீ என்ன செய்திருக்கிறாய்? இந்தக் கேள்விகள் உன் வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கொண்டு வருகிறது, அவை உன்னை முழுமையாக்குகிறது.

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**


(தொடரும்)


# உங்கள் கைரேகை பலன்கள்

39

## இருதய இரேகை அமைப்பும் பலாபலன்களும்

இருதய இரேகை சந்திர மேட்டில் உற்பத்தியாகி மேல்நோக்கி குரு மேட்டை நாடியிருந்தால் மிக்க பொறாமைக் குணத்தைக் குறிக்கும். விஸ்வாசமற்றவராயும் இருப்பர்.





இருதய இரேகையின் மாறுபாடுகளை விபரிக்கவேண்டியதில்லை. ஆனால், அதனாலேற்படும் வாழ்வின் சீர்கேடுகளை இதர கிரக இரேகைகளைக் கொண்டு சீர்தூக்கிப்பார்த்தது நிர்ணயிப்பதே முக்கியமாகும். சீர்கேடான இருதய இரேகைப் படங்களையும் அதிகமாய் வெளியிடவில்லை. இதை அனுபவத்தில் கண்டு தெளிவதே நலமாகும். அங்கனம் பார்த்துப் பழக்கத்தல் சிந்தித்து தேர்ச்சி ஏற்பட்டுவிடில் நூலாராய்ச்சி தேவையில்லை.

இருதய இரேகையில் இயற்கையான குண விஷேடங்களை முக்கியமாக ஆராய்ந்தறிய வேண்டும். இருதய இரேகை பரிபூரணமாக இருக்க வேண்டுமாயின் நன்கு பதிந்து துண்டுபடாமல் தீவின்றி வேறு எவ்விதக் குற்றமும் இன்றி ஒழுங்கான நீளத்தில் அமைந்திருத்தலே சிறப்புடையதாகும். இவ்விதம் அமையப்பெறின் திடமான தேகாரோக்கியம், நல்ல இரத்தோட்டம், ஆழ்ந்த அன்பு, நிதானப்பழக்கம் முதலியவற்றை குறிக்கும். படபடப்பும் அவசரமும் இராது. தன்டக்கம், தைரியம், பொறுமை முதலியன அமைந்திருக்கும். இத்தகையோர் எக்காரணம் பற்றியும் எவ்வித ஆடம்பரமும் ஆர்ப்பாட்டமும் இன்றி வாழ்வர். சிலசமயம் எவ்வித பற்று மற்றவர் போல காணப்படுவர். ஆனால், இது தவறு. சாமானிய விடயங்களைக் கண்டும் காணாதவர் போல் பெரு நோக்கிலிருப்பர். எல்லோரையும் நேசிப்பவராதலால் அற்பக் குற்றங்களை பொருட்படுத்தமாட்டார். அன்பு வைத்த விடத்தில் பூரண நம்பிக்கையுண்டு. தம்மிடமுள்ள அன்பைப் பலர் அறிய நடந்து கொள்ள மாட்டார். இவர்களிடம் இருதய சக்தி சுமுகமாயிருக்கும்.

இருதய இரேகை இதர முக்கிய இரேகைகளைவிட மிகமெல்லியதாயிருந்தால் குறுகின புத்தி, பொறாமை, வஞ்சகம், இரக்கமற்ற தன்மை இவைகளைக் குறிக்கும். தன்னலங் கருதியே அன்பும் ஆதரவும் உண்டு என்பதைக் காட்டும்.

குரு, சுக்ர ஆதிக்கமுள்ளோருக்கு எப்பொழுதும் இருதய இரேகை சிறந்து விளங்கும். செவ்வாய் ஆதிக்கருக்கு இருதய இரேகை நன்கு அமைந்திருக்குமாயின் விஷேட புஜபலத்தைக் குறிக்கும்.

இருதய இரேகை அகன்றும் பதிந்துமிருக்குமாயின் பலவீனத்தைக் குறிக்கும். அன்பு செலுத்தும் வகையில் வித்தியாசப்படுவர். எதுவும் ஓரளவுடன் நிற்கும். காரியம் ஆகும் வரை நெருங்கியிருப்பர். இவர்களுக்கு விஷேட பற்றிராது. கிரக ஆதிக்கத்துக்குகேற்றவாறு பலனை அறிய வேண்டும்.

**சக்தி**

(தொடரும்)

# ரேகைகளும் கிரகங்களும்

# முன்னாள் விமானப்படை தளபதியின் ஹோட்டல் பறிமுதல் செய்யப்படும்

## அமைச்சர் அனுரபிரியதர்சன யாப்பா

முன்னாள் விமானப்படைத் தளபதி றொசான் குணதிலக்கவின் ஹோட்டலை அரசு பறிமுதல் செய்யும் என அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

உலக உரிமைகளில் ஒன்றாக பட்டியல்படுத்தப்பட்டுள்ள நக்ல்ஸ் வனப் பகுதியில் குறித்த ஹோட்டல் அமைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் இந்த ஹோட்டலை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

குறித்த ஹோட்டல் அமைந்துள்ள காணிப் பகுதியின் ஆரம்ப உரிமையாளரான ரோய் டி சில்வா மோசடியான முறையில் காணிகளை விமானப்படைத் தளபதிக்கு விற்பனை செய்துள்ளார்.

ஹோட்டல் அமைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்த காணியின் ஆரம்ப உரிமையாளருக்கு அழைப்பு விடுத்த போதிலும் அந்த அழைப்பினை குறித்த நபர் ஏற்றுக் கொள்ளவில்லை என அமைச்சர் யாப்பா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அரசாங்கத்தின் தீர்மானங்களை எதிர்க்க முடியாது என முன்னாள் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் ஏதேனும் ஓர் தீர்மானம் எடுத்து அதனை நடைமுறைப்படுத்தினால் அதனை எதிர்க்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அது தொடர்பில் கருத்து வெளியிட முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மேர்வின் சில்வாவின் குண்டர் குழுவால் கொலை அச்சுறுத்தல்

## களனி பிரதேசசபை தலைவர் ரணவீர

(கொழும்பு)

மக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா தனக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பதாக களனி பிரதேச சபையின் தலைவர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

அமைச்சரும் பொலிஸாரும் இணைந்து போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தி என்னைக் கைது செய்ய முயற்சிக்கின்றனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். களனி பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு மேர்வினும் கிரிபத்கொட பொலிஸாரும் அச்சுறுத்தல் விடுத்து வருகின்றனர். குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் உண்மையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குண்டர்களின் சூழ்ச்சித் திட்டங்களுக்கு களனி மக்கள் அஞ்சக் கூடாது என பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

கிரிபத்கொட பொலிஸாரும் மேர்வின் சில்வாவின் குண்டர்களும் இணைந்து தான் உள்ளிட்ட தனது குழுவினருக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# கிழக்கில் 327 பட்டதாரி டிப்ளோமா ஆசிரியர்களுக்கு நியமனம்

ஆசிரியர் நியமனம் வழங்கும் வைபவம் நேற்று 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திருகோணமலையில் இடம்பெற்றது.

மேற்படி வைபவமானது கல்வி அமைச்சின் பதில் செயலாளர் எம்.ரி.ஏ. நிஸாம் தலைமையில் திருகோணமலை உவர்மலை விவேகானந்தா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் காலை 11 மணி அளவில் இடம்பெற்றது.

மொத்தமாக 327 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதில் தமிழ்மொழி மூலமான ஆசிரியர்கள் 256 பேருக்கும் சிங் கள மொழி மூலமான ஆசிரியர்கள் 71 பேருக்கும் வழங்கப்பட்டது.

தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களில் கணிதப் பாடத்திற்கு 97 ஆசிரியர்களும் விஞ்ஞான பாடத்திற்கு 40 ஆசிரியர்களும் மற்றும் ஆங்கிலப் பாடத்திற்கு 119 ஆசிரியர்களும் நியமனம் பெற்றார்கள்.

குறித்த ஆசிரியர்கள் அனைவரும் கிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களிலே அதிகளவான ஆசிரியர் பற்றாக்குறைகளை எதிர்கொள்கின்ற பாடசாலைகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் பதில் செயலாளர் எம்.ரி.ஏ. நிஸாம் குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல் வீர திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் பிரதம அதிதியாகவும் மாகாண அமைச்சர்களான எம்.எஸ். உதுமாலெவ்வே, எம்.எஸ். சுபைர் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.04 27

★ 1124-முதலாம் டேவிட் ஸ்கொட்லாந்து மன்னனானான்.

★ 1296- இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னன் டன்பார் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் ஸ்கொட்லாந்தரை தோற்கடித்தான்.

★ 1521-நாடுகாண் பயணி பேர்டினண்ட் மகலன் பிலிப்பைன்சில் பழங்குடியினரால் கொல்லப்பட்டார்.

★ 1522- மிலான் நகரைக் கைப்பற்ற இடம்பெற்ற போரில் பிரெஞ்சு மற்றும் சுவிட்சர்லாந்துப் படையினரை ஸ்பானியப் படையினர் தோற்கடித்தனர்.

★ 1565-பிலிப்பைன்சின் முதலாவது ஸ்பானியக் குடியேற்ற நாடு சேபு (Cebu) அமைக்கப்பட்டது.

★ 1667- குருடரான ஜோன் மில்ட்டன் தான் எழுதிய பரடைஸ் லொஸ்ட் என்ற காவியத்தின் காப்புரிமையை £10 இற்கு விற்றார்.

★ 1813- 1812 போர்: ஐக்கிய அமெரிக்கப் படைகள் ஒண்டாரியோவின் தலைநகர் யோர்க்கை கைப்பற்றின.

★ 1840- லண்டனில் புதிய வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் அடிக்கல் நாட்டப்பட்டது.

★ 1865- 2 ஆயிரத்து 400 பேரை ஏற்றிச் சென்ற ஐக்கிய அமெரிக்காவின் சுல்டானா என்ற நீராவிக்கப்பல் டென்னசிக் கருகில் வெடித்து மூழ்கியதில் ஆயிரத்து 700 பேர் உயிரிழந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் அமெரிக்க உள்நாட்டுப் போரில் சிறைபிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட கூட்டணிப் படையினராவார்.

★ 1904-அவுஸ்திரேலியாவின் முதலாவது தேசிய அரசை அவுஸ்திரேலியத் தொழிற் கட்சி அமைத்தது.

★ 1909- துருக்கியின் சுல்த்தான் இரண்டாம் அப்துல் ஹமீட் பதவியில் இருந்து அகற்றப்பட்டு அவனது சகோதரன் ஐந்தாம் மெஹ்மெட் ஆட்சிக்கு வந்தான்.

★ 1941- இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியப் படைகள் கிரேக்கத் தலைநகர் ஏத்தென்ஸ் நகரை அடைந்தன.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: கடைசி நாசி ஜேர்மன் படைகள் பின்லாந்தில் இருந்து வெளியேறின.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: நாசிக் கட்சியின் அதிகாரபூர்வ பத்திரிகையான வோல்கிஷெர் பியோபாக்டர் நிறுத்தப்பட்டது.

★ 1959- மக்கள் சீனக் குடியரசில் இருந்து கடைசி கனேடிய மதபரப்புனர் வெளியேறினர்.

★ 1960- பிரெஞ்சு நிர்வாகத்தின் கீழ் ஐ.நாவின் நேரடி ஆட்சியின் கீழிருந்த டோகோ விடுதலை அடைந்தது.

★ 1961- சியேரா லியோனி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்றது.

★ 1967- கனடாவின் மொன்ட்ரியால் நகரில் எக்ஸோ 67 கண்காட்சி ஆரம்பமானது.

★ 1974-அமெரிக்கா ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கெதிராக வோஷிங்டனில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் சென்றனர்.

★ 1981-Xerox PARC முதன் முறையாக கணனி mouse ஐ அறிமுகப்படுத்தியது.

★ 1992- சேர்பியா மற்றும் மொண்டெனேகிரோவை உள்ளடக்கிய யூகொஸ்லாவிய கூட்டுக் குடியரசு அமைக்கப்பட்டது.

★ 1993- காபோனில் இடம்பெற்ற விமான விபத்தில் காம்பியாவின் தேசிய காற்பந்தாட்ட அணியினர் அனைவரும் உயிரிழந்தனர்.

★ 1994-தென்னாபிரிக்காவில் முதற்தடவையாக கறுப்பினத்தவரும் வாக்களித்த மக்களாட்சி முறையிலான தேர்தல் இடம்பெற்றது.

★ 2001-தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை (ஹீனிகல) விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது. 600 இற்கும் மேற்பட்ட படையினர் உயிரிழந்தனர்.

★ 2002- நாசாவின் பயனியர் 10 விண்கலத்துடன் கடைசித் தடவையாக தொடர்புகள் கிடைத்தது.

★ 2007-எஸ்தோனியாவின் தலைநகர் தாலின் நகரில் இருந்த சோவியத்தின் செம்படையின் நினைவுச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

### பிறப்புக்கள்

★ 1723-பிலிப்பு தெ மெல்லோ, கொழும்பில் பிறந்த கிறிஸ்தவத் தமிழ் அறிஞர் (இ.1790)

★ 1902-கந்தமுருகேசனார், ஈழத்துப் பெரியார், மூதறிஞர் (இ.1965)

### இறப்பு

★ 1521-பெர்டினென்ட் மகலன், போர்த்துக்கேய மாலுமி (பி.1480)





### சிறப்பு நாட்கள்

★ சியேரா லியோனி சுதந்திர தினம் (1961)

★ டோகோ சுதந்திர தினம் (1960)




★ 1942-ரஷ்ய விண்வெளி வீரரான வலேரி பொலியாக் கொவ் - பிறந்த தினம்

தந்தை செல்வாவின் 35 ஆவது நிறைவு நாள் அஞ்சலியும் நினைவுரையும் நேற்று முற்பகல் 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா சதுக்க நினைவிடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழுத்தலைவர் அருட்கலாநதி சு. ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், கலந்து கொண்டோர் தந்தை செல்வாவின் சமாதிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்துவதையும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச்செய்தியாளர்)

# அமெரிக்காவின் கோரிக்கைக்கு பணிந்தது

# இலங்கை; எண்ணெய் இறக்குமதியில் சிக்கல்

(கொழும்பு)

**அமெரிக்காவின் அழுத்தத்துக்கு அடி பணிந்து ஈரானுடன் செய்து கொண்ட உடன்பாட்டை இலங்கை அரசாங்கம் முறித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அமெரிக்கா செல்லவுள்ள நிலையிலேயே இம்முடிபு கொண்டு வரப்பட்டுள்ளது.**

ஈரான் மீது எண்ணெய் ஏற்றுமதித் தடையை விதித்துள்ள அமெரிக்கா, இலங்கை உள்ளிட்ட நாடுகளை ஈரானிடம் இருந்து அடுத்த ஆறு மாதங்களுக்குள் எண்ணெய் இறக்குமதியை நிறுத்துமாறு கேட்டிருந்தது.

இல்லையேல் அமெரிக்காவின் தடைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் எச்சரிக்கப்பட்டது. ஈரானுடன் நெருக்கமான உறவைப் பேணிவரும் இலங்கை அரசாங்கம் அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை முன்னதாக நிராகரித்திருந்தது.

ஆனால் தற்போது அந்த முடிபை மாற்றிக் கொண்டு அமெரிக்க அழுத்தங்களுக்கு அடி பணிந்து ஈரானின் எண்ணெய் இறக்குமதியை நிறுத்தத் தீர்மானித்துள்ளது.

ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மற்றும் அடுத்த மாதம் அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஹிலாரி கிளின்டனை சந்திக்க வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வோசிங்டன் செல்லவுள்ளமை ஆகிய காரணங்களினாலேயே இலங்கை இந்த முடிபுக்கு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈரானின் தேசிய எண்ணெய் நிறுவனத்துடன் இல்ங்கை அரசு செய்து கொண்டுள்ள உடன்பாடு எதிர்வரும் செப்டெம்பரில் முடிவடையவுள்ள நிலையில் இந்த உடன்பாட்டுக்கமைய இறக்குமதி செய்ய வேண்டிய 3 கப்பல் எண்ணெயை நிறுத்திவிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தக் கப்பல்கள் ஒவ்வொன்றினதும் கொள்ளளவு ஒரு இலட்சதது 35 ஆயிரம் மெற்றிக்தொன் ஆகும். சபுகஸ்கந்தவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்கு ஆண்டு தோறும் 14 கப்பல்களில் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது.

இவற்றில் 13 கப்பல்கள் ஈரானிடம் இருந்தும் ஒன்று சவுதி அரேபியாவில் இருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

இந்த ஆண்டு ஏற்கனவே ஈரானிடம் இருந்த 6 கப்பல்களில் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில் எஞ்சியுள்ள 6 கப்பல்களில் மூன்றின் இறக்குமதியை இலங்கை நிறுத்தவுள்ளது.

அமெரிக்க தடைகளை அடுத்தே இலங்கை அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக பெற்றோலியத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். (அ-2)

# பள்ளிவாசல் இடிக்கப்பட்டால் பதவிவிலக நேரிடும்

## அலவி மௌலானா

(கொழும்பு)

தம்புள்ள பள்ளிவாசல் இடிக்கப்பட்டால் பதவிவிலக நேரிடும் என மேல் மாகாண ஆளுநர் அலவிமௌலானா தெரிவித்துள்ளார்.

அதிகாரிகள் பள்ளிவாசலை இடிக்கும் திட்டத்தை முன்னெடுத்தால் தமது ஆளுநர் பதவியைத் துறக்கத்தயார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு நிலையிலும் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பள்ளிவாசல் இடம் நகர்த்தப்படுகின்றமை ஆரோக்கியமானதாக அமையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

1960ஆம் ஆண்டு முதல் குறித்த பள்ளிவாசல் இயங்கி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# மகாவலி ஆற்றில் மூழ்கி இளைஞர் உயிரிழப்பு

வட்டவளை தியகல மவுன்ஜின் தோட்டப் பகுதியில் மகாவலி ஆற்றில் மூழ்கி இளைஞர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

இனந்தெரியாத ஒருவர் ஆற்றில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அவரைத்தேடி இந்த இளைஞர் ஆற்றில் இறங்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

இதன்போது ஆற்றிலிருந்து ஆழமான குழியொன்றுக்குள் அவர் வீழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஆற்றில் மூழ்கிய நபரின் உடலைத் தேடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறுகின்றனர். (அ-2)

# குடும்பத்துடன் வந்த இந்தியக்குழு தெளிந்த நிலையில் சென்றது

## பாதுகாப்பு செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய பாராளுமன்ற குழுவினர் இலங்கையின் வட பகுதிக்கு செல்லும் போது அங்கு மெனிக்பாம் முகாமில் 3 இலட்சம் அகதிகளை அரசாங்கம் அடைத்து வைத்திருப்பதாக நினைத்திருப்பார்கள் என பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர்கள் நேரில் சென்று நிலைமைகளை பார்த்த பின்னரும் எஞ்சியிருந்த சிலரைப் பார்த்து அவ்வாறே நினைத்திருப்பர்.

எனினும் அகதிகள் தொடர்பில் அவர்கள் கொண்டிருந்த தவறான எண்ணத்தை மெனிக்பாமுக்குள் நுழைந்த போது மாற்றிக் கொண்டுள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் சிங்களம் , தமிழ், முஸ்லிம் மக்கள் நாடெங்கிலும் ஐக்கியமாக வாழ்கின்றனர்.

குறிப்பாக தமிழ் மக்கள் கொழும்பு உட்பட நாட்டின் சகல இடங்களிலும் தமது அன்றாட நடவடிக்கைகளை சிரமமின்றி மேற்கொள்கின்றனர். இந்திய பாராளுமன்றக்குழு எதிர் பார்த்தது போன்ற நிலை இலங்கையில் இல்லை.

அவர்கள் வடக்கிற்குச் சென்ற போது இதனை உறுதிப்படுத்திக்கொண்டனர்.

இந்தியப் பாராளுமன்றக்குழுவினர் மெனிக்பாமுக்குச் சென்ற போது அங்குள்ள மக்கள் தாம் தற்போது சுதந்திரமாக உள்ளதாகவும் மரண அச்சுறுத்தல் எதுவுமில்லை எனவும் அடிப்படை வசதிகள் உள்ளதெனவும் தெரிவித்துள்ளனர்.


தமக்கான அரிசி, பருப்பு போன்றவை முறையாகக் கிடைப்பதையும் அவர்கள் குறிப்பிட்டனர். கொழும்புக்குச் செல்வதற்கான சுதந்திரம் உங்களுக்கு உள்ளதா? என அக் குழுவினர் கேட்ட போது,

இதற்கான சுதந்திரம் எமக்குள்ளது. எனினும் கையில் பணம் தான் இல்லை என பதிலளித்துள்ளனர் என்றார்.

நாட்டில் இராணுவம் இருப்பது நாட்டிற்குள்ளும் வெளியிலிருந்தும் வரும் அச்சுறுத்தல்களிலிருந்து நாட்டை பாதுகாப்பதற்காகத் தான். அதற்கிணங்க எமது இராணுவத்தினர் நாட்டில் வைத்திருக்க வேண்டிய இடங்களிலேயே வைக்கப்பட்டுள்ளனர்.

அப்பிரதேசங்களில் அவர்களை வைத்திருப்பதானது நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்புக்காகவே எனவும் பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். (அ)

# பௌத்த நிலையம் மீது பெற்றோல் குண்டு வீச்சு



லண்டனில் அமைந்துள்ள கிங்ஸ்பெரி ஸ்ரீ சத்தாதிஸ்ஸ சர்வதேச பௌத்த நிலையத்தின் மீது பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம்கடந்த 24 ஆம் திகதி இரவு இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பெற்றோல் குண்டு வீச்சுத் தாக்குதலில் எவருக்கும் உயிர்ச்சேதமோ சொத்துச்சேதமோ ஏற்படவில்லை என குறிப்பிடப்படுகின்றது. (அ-2)

# 107 ஆவது ஜெயந்தி விழா

(யாழ்ப்பாணம்)

மௌனகுரு- சிவ ஸ்ரீ முருகுப்பிள்ளை கடவுள் சுவாமிகளின் 107 ஆவது ஜெயந்தி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பூசைகள், பஜனை கள், ஆராதனைகள், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறவுள்ளன. (அ-9)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# ஓசோன் படலமும் அதனை பாதுகாத்தலின் முக்கியத்துவமும்


கோள் மண்டலத்தில் உள்ள கோள்களில் பூமியில் உயிர்கள் வாழக்கூடிய வளிமண்டலம் காணப்படுவதால் பூமிக்கு விசேட இடம் கிடைக்கின்றது.

எனவே பூமி அண்டவெளியில் உள்ள ஏனைய கோள்களை விட முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. இந்த வளி மண்டலம் பலதரப்பட்ட விசேட வாயு வகைகளின் ஒன்றிணைப்பின் மூலம் உருவாகியுள்ளது.

| வாயு | சூத்திரம் | உள்ளடக்க விகிதம்(%) |
|---|---|---|
| நைதரசன் | $N_2$ | 78.08 |
| ஒட்சிசன் | $O_2$ | 20.95 |
| ஆகன் | Ar | 0.93 |
| காபனீரொட்சைட்டு | $CO_2$ | 0.03 |
| நியோன் | Ne | 0.0018 |
| ஐதரசன் | $H_2$ | 0.0005 |
| ஓசோன் | $O_3$ | 0.00007 |

மேற்குறிப்பிட்ட அனைத்து வாயுக்களும் அவசியமாவதோடு இவற்றுள் உயிர் வாழ்வதற்கு உகந்த வாயுக்கள் மிக சிலவே உள்ளன. வளிமண்டலத்தில் ஒட்சிசன் 20.95 வீதமே உள்ளது.

இதில் ஒட்சிசன் மிக முக்கிய இடம் பெறுகின்றது. அதேபோல் அனைத்து பிரமாணங்களிலும் 0.00007 வீதம் உள்ள ஓசோன் வாயுவை பூமியில் உயிர்கள் வாழ வழிவகுக்கும் முக்கிய வாயுவாக குறிப்பிட முடியும்.




மேலும் ஆழமாக ஆராய்ந்து பார்ப்பின் உயிரினங்கள் உயிர் வாழ்வதற்காக ஓசோன் வாயு ஒட்சிசனை விட முக்கியமானதாக அமைகின்றது. அண்டவெளியில் உள்ள ஒட்சிசன் ஒரு வாயுவாக தயாரிக்கப்பட்டு சூரியனில் இருந்து வெளியேறும் விரும்பத்தகாத ஒளிக்கதிர்களை இழுத்தெடுத்து பூமியில் உள்ள உயிர்களை பாதுகாத்துக்கொள்ளும் கேடயமாகவும் ஓசோன் வாயு படலம் செயற்படுகின்றது.

எமது பூமியின் வளிமண்டலத்தின் வெப்பமிடல் மட்டத்திலிருந்து மேல் நோக்கி செல்லும் போது முறையாக சிற்சில மாற்றங்களுக்கு உட்படுகின்றது.

இதன் காரணமாக வெப்பத்தில் ஏற்படும் மாறுதல்களை கவனத்தில் கொண்டு விஞ்ஞானிகள் அவற்றை முக் கியமாக ஐந்து பிரிவுகளில் உள்ளடக்கி யுள்ளனர்.

1.மாற்றமுறும் மண்டலம் (Tropo sphere) கடல் மட்டத்தில் இருந்து 10 Km தூரம் வரை

2. நிலையான மண்டலம் (Stoato to sphere) கடல் மட்டத்தில் இருந்து 10-50 Km வரை

3.மத்திய மண்டலம் (meso sphere) கடல் மட்டத்தில் இருந்து 50-80 Km வரை

4. வெப்பமண்டலம் (Thermo sphere) கடல் மட்டத்தில் இருந்து 80-200 Km வரை

5.அயன்மண்டலம் (Iono sphere) கடல் மட்டத்தில் இருந்து 200 Km இற்குமேல்

ஒட்சிசன், ஓசோன் ஆகிய இரண்டுவித வாயுக்களும் ஒட்சிசன் மூலமே உருவாகியுள்ளன.


இந்த இரு வகை வாயுக்களினதும் அடிப்படை மாற்றம் ஒட்சிசன். ஒட்சிசன் வாயு இரு அணுக்கள் மூலம் உருவாகியுள்ளதோடு ஓசோன் வாயு ஒட்சிசன் அணுக்கள் மூன்றின் மூலம் உருவாகியுள்ளது.மேலும் இன்னுமோர் விதத்தில் குறிப்பிட்டால் ஓசோன் எனப்படுவது ஒட்சிசனின் இன்னுமோர் மாற்றமுற்ற தன்மையாகும். ஓசோன் வாயு விளைத்தாக்கத்துக்கு உள்ளாக்கி வளிமண்டல கொள்கலம் ஒன்றில் அடைக்கும் போது அது இளநீல நிறத்தில் தென்படும்.

**ஓசோன் படலம்**

வளிமண்டலத்தில் ஓசோன் படலத்தின் நிலையான மண்டல பிரதேசத்தில் காணலாம். கீழ் வளிமண்டலத்தில் இந்த வாயு அணுக்கள் மிகக் குறைந்தளவே காணப்படுகின்றன.பூமியில் உயிர்கள் உயிர்வாழ்வதற்கு சூரிய ஒளி மிக அத்தியாவசியமானதென நாம் அனைவரும் அறிந்த விடயமாகும். அது போல் பூமியின் அடிப்படை சக்தியின் முதல்வனாக திகழ்வதும் சூரியனாகும்.

சூரியனில் ஏற்படும் இயற்கை மாறுதல்களின் தாக்கங்கள் ஒளிக்கதிர் களாக பூமியினை நோக்கி வரும். அந்த ஒளிக் கீற்றுக்களுக்கு உரியதோர் சக்தி உள்ளதோடு அதற்கிணங்க சூரியன் மூலம் வெளிப்படும் ஒளிக்கதிர்களை முக்கிய சிறு பிரிவுகளாகப் பிரிக்கலாம். உதாரணமாக அதிகளவு சக்தி வாய்ந்த $x$ கதிர்கள் $\gamma$ கதிர்கள் என்பவற்றை குறிப்பிடலாம்.

இந்த செயற்பாடுகள் சீராக செயற்படுவதால் எமது கண்களுக்கு உரிய வர்ணக்காட்சிகள் தென்படுகின்றன.



ஒளிப் பார்வைகளுக்காக மிகக்குறுகிய அலைவரிசைகளின் ஒன்றிணைப்பு வழி (Ultra violet) ஓசோன் படலத்துடன் மிகக்கிட்டிய தொடர்பினைக்காட்டும். இந்த வகை (Ultra) ஒளிக்கதிர்களை மேலும் 3 உப பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன,

UV-A,UV-B, UV-C ஆகும். இம் மூன்று பிரிவுகளில் UV-C மிக உயரிய சக்தியுடன் செயற்படுகின்றது.

இந்த வாயுக்கள் வளிமண்டலத்தி லுள்ள ஒட்சிசன் வாயுவிற்கு ஏற்றவிதத்தில் மேல் மண்டலத்தில் ஓசோன் வாயுவினை உற்பத்தி செய்யும்.


இங்ஙனமாக உற்பத்தி செய்யப்படும் ஓசோன் படலமாகப் பரவி தாக்கம் ஏற்படுத்தும் கதிர்கள் பூமிக்கு வருவதைத் தடைசெய்து பூமியில் உள்ள உயிரினங்களைப் பாதுகாக்கும்.

**ஓசோன்படலத்தின் சமமான தன்மை**

மேல் வளிமண்டலப்பிரதேசத்தில் உள்ள ஓசோன் அணுக்கள் UV-C உடன் செயற்பட்டு அதனை அதிக சக்திவாய்ந்த ஒட்சிசன் அணுவாக மாற்றியமைக்கும். இங்ஙனமாக தயாரிக்கப்பட்ட ஒட்சிசன் அணுவானது மற்றுமொரு ஒட்சிசன் அணுவுடன் ஒன்றிணைந்து மூன்றுவித ஒட்சிசன் அணுக்களின் கூட்டமைப்பி னை உருவாக்கும். அதேபோன்று இங்ங னமாக உருவாக்கப்பட்ட ஓசோன் மேலும் UV-B உடன் இணைந்து செயற்படுவ தன்மூலம் ஒட்சிசன் அணுவினை உரு வாக்கும். இவ்வாறாக ஓசோன் உற்பத்தியாவதற்கும் வீழ்ச்சியடைவதற்கும் UV கதிர்கள் உபயோகப்படும். இங்ஙனமாக உற்பத்தியாக்கப்படும் ஓசோன் UV கதிர்களை உறிஞ்சியெடுப்பதால் இந்தத் தேவையற்ற கதிர்கள் மேல் வளிமண்ட லத்தின் கீழ் வருவதனை தடை செய்யும். இயற்கையாக மேல் வளிமண்டலத்தில் ஓசோன் உற்பத்தி தடைப்படுதல் என்பன ஒரே வேகத்தில் நடைபெறும். இதனால் மேல் வளிமண்டலத்தில் ஓசோன் சமச் சீரான தன்மை (Dynamic stability) படலமாகச் சமமாகக் காணப்படும். சூரிய ஒளி நேரடியாக வருவதனால் நாள்பூராகவும் அதிகளவான நேரம் மேல் வளிமண்டலத்துக்கு அதிகளவான சூரியனின் சக்தி கிடைக்கப்படுவதால் அந்தப்பகுதிகளில் அதிக ஓசோன் உற்பத்தியாகும். இருப்பினும் உலகமய வளிமண்டலத்தின் கலப்பின் காரணமாக இவை உற்பத்தியாகும் பிரதேசங்களுக்கு இழுத்துச் செல்லப்படும். எனவே இயற்கையாக ஓசோன்படலம் மிகவும் தடிப்பானதாக்கப்படும்.

**து.பிரதீபன்**
இரசாயனவியல் ஆசிரியர்,
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(பதிப்பாசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்)


(தொடரும்)




**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A இன் 62 ஆவது புதிருக்கான விடைகளும் வெற்றிபெற்றோரின் பெயர் விபரமும் 63 ஆவது புதிருக்கான வினாவுடன் வெளிவருமென வாசகர்களுக்கு அறியத்தருகின்றோம்.**

# அனைத்துலக நகர்வுகள்... ஈழத்தமிழருக்கு சொல்லும் செய்தி

## அடுத்த பத்தாண்டுக்கான அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டம்



இனிவரும் காலத்தில் சீனாவை பலவீனமாக்கும் நடவடிக்கைகள் ஆசிய பிராந்தியத்தில் கூர்மையடையப் போகின்றன. ஆதலால் அசியாவிலுள்ள முக்கியமான சிக்கல்கள், இனக்குழும போராட்டங்கள், அயுதக்கிளர்ச்சிகள் எல்லாம் வல்லாதிக்க சக்திகளின் நலன்களுக்காக கருவியாக்கப்படக் கூடிய சாதத்தியப்பாடுகள் அதிகரித்துள்ளன.

அமெரிக்காவின் உபாய திட்டத்தில் பிரதான இலக்கு சீனா. சீனாவின் முத்துமாலை் உபாயம் கட்டுரையில் கருப் பொருளாகிறது. தேவையேற்படும் தருணங்களில் இந்தியாவின் வகிபாக மும் சுட்டிக் காட்டப்படும். ஏனெனில், இந்தியா தனித்து இலங்கைத் தீவில் செல்வாக்கு செலுத்தக்கூடிய நாடு மட்டுமல்ல. மாறாக , அமெரிக்காவின் ஆசிய பங்காளிகளில் முக்கியமான ஒரு நாடு. இருந்தபோதும், ஒவ்வொரு நாடும் தமது தேசிய நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செயற்படுகின்றன. ஆதலால் கூட்டாளி களின் உறவில் மாற்றமடையலாம். இதனால், குறித்த நாடுகளின் வெளி யுறவுக் கொள்கையிலும் தாக்கம் உண்டாகும். ஆனால், தேசிய நலன் என்ற விடயத்தில உறுதிப்பாடு பேணிப் பாதுகாக்கப்படுவதற்கான அனைத்து முயற்சிகளையும் சக்தி மிக்க நாடுகள் மேற்கொள்ளும்.

**தமிழர் தேசத்தின் நகர்வுகளுக்கான அடிப்படை**

இத்கைய சூழலில் தமிழ்மக்கள் கவனத்திற்கொள்ள வேண்டிய விடயம் யாதெனில், அனைத்துலக சமூகத்திற்கு என்று ஒரு தனிநிகழ்ச்சி நிரல் இருக்கிறது. ஒவ்வொரு நாட்டினையும் நோக்கிய வெளிவிவகாரக் கொள்கைகள் அதன் அடிப்படையிலேயே அவர்கள் திட்டமிடுவார்கள். அந்தக் கொள்கைக்கு சவாலாக ஏதாவது காரணிகள் மேற்கிளம்புமாயின் அதனை முறியடிப்பதற்கு தேவையான நகர்வகளை மிக சாதுர்யமாக மேற்கொள்வார்கள். அதன் ஒரு அங்கமாக இராஜதந்திர உறவுகளில் தலைகீழான

**நியூஸ் போர்ட்**

மாற்றங்கள் எற்படலாம்.இந்த மாற்றங்களை நிலையான மாற்றங்களாக கருதிவிட முடியாது. ஆனால், கரையேறுவதற்கு வழிகோலும் ஒரு துரும்பாகப் பிடித்துக்கொள்ளலாம்.

1980 களில் இலங்கை அரசாங்கத்தை தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டுவருவதற்காக தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு ஆதரவினை வழங்கியது இந்தியா. அதே இந்தியா அதற்கு நேர்மாறான கொள்கைகளை பின்னர் எடுத்திருந்தது இதற்கு உதாரணம். இலங்கைத் தீவைப் பொறுத்தவரையில் இலங்கை அரசாங்கமோ அல்லது தமிழர் தரப்போ தீட்டிய திட்டத்தில் விடயங்கள் நகர்த்தப்பட்டு வருவதிலும்பார்க்க, அனைத்துலக சக்திகளே, தமது நிகழ்ச்சிநிரலுக்கு ஏற்ப காய்களை நகர்த்துகின்றன.

அதனை மேலும் குறிப்பிடுவதானால், அனைத்துலக சமூகம் இயக்கும் நாடகத்தில் தமிழர் தரப்புக்கு ஒரு ஒரு வகிபாகமும் சில சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன. கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ்த்தேசத்திற்கான பணியை சரிவரச்செய்ய வேண்டியது தமிழ்தரப்புகளின் பொறுப்பு. இலங்கைத்தீவு தொடர்பாக அனைத்துலக சமூகம் எடுத்துள்ள அணுகுமுறைகளும், வகுத்துள்ள உத்திகளும், உபாயங்களும் இதனையே எடுத்துக் காட்டுகின்றன.

**உத்திகளின் மோதலும், உபாயங்களின் போட்டியும.**

உனது திட்டம் வெற்றியடைய வேண்டுமானால் எதிராளியை முடக்கு, எதிராளியை முடக்க வேண்டுமெனில் அவனது எல்லைவரை முன்னேறி அவனை இயலுமான எல்லா முனைகளாலும் சுற்றிவளைப்புச் செய்.

முடிந்தால், அவனது எல்லைக்குள் நுழைந்து அவனது மூலதனத்தில் தாக்கத்தை செலுத்தக்கூடிய வகையில் நடவடிக்கைகளில் இறங்கு என்பது இராணுவ விஞ்ஞானத்துக்கே அதிக பொருத்தமாக இருப்பினும், சக்தமிக்க நாடுகளின் இன்றைய பொருளாதார போட்டிகளுக்கும் ஏற்றதாகவே உள்ளது.

அந்தவகையலேயே அமெரிக் காவினதும் சீனாவினதும் செயற்பாடுகள் இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகிறது. சீனாவின் 'முத்துமாலை உபாயம் இந்தியாவை முடக்க முயற்சிக்கிறது. இந்த கருத்துக்கு வலுச் சேர்ப்பது போலவே, பங்களாதேசின் சிட்டாகொங்கிலும், பாகிஸ்தானின் கவாடரிலும் மற்றும் இலங்கையின் ஹம்பாந்தோட்டையிலும் சீனா தனது தேவைக்கு ஏற்ற முறையில் துறைமுகங்களை கட்டமைத்து வருகின்றது. இந்த மூன்று துறைமுகங்களும் ஆசியாவின் எண்ணெய்வள கடற்பாதையில் முன்னணி மிக்கவை. ஆதலால் சீனாவின் பொருளாதாரத்தின் உயிர் நாடியாக தற்போது திகழ்வதோடு, காலப்போக்கில் இராணுவரீதியாகவும் கைகொடுக்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தென்படுகின்றது. இந்நிலையில் அமெரிக்கா எடுத்துள்ள நகர்வுகள் கவனத்திற்கொள்ளப்படுதல் பொருத்தமாகும். இந்த நகர்வென்பது, ஆசியாவை நோக்கி அமெரிக்கா பாதுகாப்பு உபாய மார்க்கத்தை தீட்டிய பின்னரே தீவிரமடைந்துள்ளமை அவதானிக்கத்தக்கது.

இத்தகைய தருணத்தில் 1971ஆம் ஆண்டு பங்களாதேசில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான விடயங்கள் தூசுதட்டப்படுகின்றன. நாற்பது அண்டகளுக்கு முன்னர் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் விடயப்பொருள்களாக மாறுவது, தனித்து அமெரிக்காவின் நலன் சார்ந்த நடவடிக்கைமட்டுமல்ல, மாறாக எத்தனை தசாப்பதங்கள் கடந்தாலும் போர்க்குற்றங்கள் மறுக்கப்படவோ, மறைக்கப்படவோ முடியாதவை என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

அடுத்து *பலோகிஷ்தான்* மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோரிக்கையை பாகிஷ்தான் அங்கீகரீக்க வேண்டும் எனும் தீர்மானம் 2012 பெப்ரவரி மாத ஆரம்பத்தில் அமெரிக்கா கொங்கிரசில் முன்மொழியப்பட்டது. பாகிஷ்தான் *பலோகிஷ்தானை* தனது ஒரு மாகாணமாகவே கருதிவருகிறது. அதற்கிணங்க அங்கு பாகிஷ்தானின் ஆட்சியே இடம்பெற்றுவருகிறது. ஆயினும் பலோகிஷ்தான் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டு தாம் ஒரு தனித்தேசமாக மிளிர வேண்டும் என்ற விருப்பத்தோடு, 1958ஆம் ஆண்டிலிருந்து ஒருபோராட்டத்தையும் நடத்தி வருகிறார்கள். பலோகிஷ்தானுக்கு வடக்கே ஆப்கானிஸ்தானும், மேற்கே ஈரானும் அமைந்துள்ளன. அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலில் முக்கியமான இரு நாடுகள் பலோகிஷ்தானை எல்லையாகக் கொண்டு அமைந்திருப்பது மட்டுமல்ல, சீனா கட்டமைத்து வரும் ஆழ் கடல் துறைமுகம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பலோகிஷ்தானின் கவாடர் பிராந்தியத்திலேயே அமைந்துள்ளது. மேலும், பலோகிஷ்தான் எண்ணெய் வளங்களும், கனியவளங்களும் நிரம்பிய பகுதியாகும். சீனாவின் முத்து மாலை உபாயம், இந்தியாவை சுற்றி வளைத்துள்ள மூன்றாவதும் முக்கியமானதுமான துறைமுகம், இலங்கையின் அம்பாந்தோட்டை துறைமகமாகும. இலங்கைத் தீவில் துரிதகதியில் அதிகரித்துவரும் சீனாவின் மேலாண்மையை இந்தியாவுக்கும், மேற்குலகுக்கும் கரிசனை கௌர்ளளத்தக்க வகையில் தூண்டும் பிரதான காரணி ஹம்பாந்தோட்டை துறைமுகமாகும்.

இவ்வாறான சூழலிலேயே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்று அமெரிக்காவால் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த தீர்மானம் எழுப்பியுள்ள பலவித விவாதங்களுக்கு அப்பால், பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டபோது காட்டாத அக்கறையை தற்போது அனைத்துலகத்தின் முக்கிய பகுதியான மேற்குலகு காட்டியுள்ளது என்பது மெய்நிலை.

சிங்கள மக்களின் விருப்பு வெறுப்புகளை தாண்டி, இலங்கைத்தீவின் விவகாரம் அனைத்துலக அரங்கிற்கு மேற்குலகத்தால் இழுத்துவரப்பட்டுள்ளது. இது, அறுவடையில் தமிழர்களுக்கு எத்தகைய இலாபத்தை வழங்கும் என்பதற்கு அப்பால் ஆரம்பவிதை தமிழ்த் தரப்புகளுக்கும் ஒருவித வாய்ப்பினை வழங்கியுள்ளது.

**முடிவுரைக்கான முகவுரை**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் கடும் அழுத்தத்தை இலங்கைக்கு வழங்காவிட்டாலும், கனதியான ஒரு சேதியை சொல்லிநிற்கிறது. அது படிப்படியாகவே, இலங்கை ஆட்சயாளர்கள் மீதான அழுத்தங்கள் அதிகரிக்கும் என்பதாகும். அதற்குள் மேற்குலகின் நிகழச்சி நிரலுக்கு சிறிலங்கா ஆட்சியாளர்கள் வளைந்து கொடுப்பார்களேயானால் இன்று தமிழ் தரப்புக்கு வாய்ப்பாக தென்படும் சூழல் எதிர்காலத்தில் பொறியாக மாறமாட்டாது என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை. ஆயினும், சீனாவின் வலைக்குள் வீழ்ந்துள்ள இலங்கையால் அதிலிருந்துவிடுபட்டு மேற்குலகின் நிகழ்ச்சிநிரலுக்குள் வருவது குறுங்காலத்திலோ அல்லது மத்திம காலத்திலோ அவ்வளவு இலகுவான விடயமல்ல.

அதுவரை போக்குற்றம் மற்றும் மானுட குலத்திற்கெதிரான குற்றங்கள் இலங்கையை அச்சுறுத்துவதற்கான கருவிகளாக மேற்குலகத்தால் பயன்படுத்தப்படுவதற்கான ´சாத்தியப்பாடுகள் அதிகமாகக் கணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று நாடுகளினதும் விடயங்க்ளில் அமெரிக்கா கொண்டுள்ள அக்கறையானது, ஆசியப்பிராந்தியத்தின்மீது அமெரிக்கா குவித்துள்ள கரிசனையை வெளிப் படுத்துகின்றது.

அதேவேளை அமெரிக்காவுக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலான பாதுகாப்பு விவரங்களை முதன்மைப்படுத்திய கூட்டுறவு நடவடிக்கைகள் அதிகரிப்பதோடு, பிலிப்பைன்சுடனும், தாய்லாந்துடனும் அமெரிக்கா மேற்கொள்ளும் கடல்சார் நடவடிக்கைகளும், ஒப்பந்தங்களும் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் தீவிரமடைந்துவரும் பொருளதாரப் போட்டியை துல்லியமாக வெளிப் படுத்தி நிற்கின்றது. அதேவேளை முன்னாள் எதிரி நாடாக விளங்கிய வியட்நாமுடன் அமெரிக்கா வளர்த்து வரும் உறவும் சீனாவுக்கான ஒரு எச்சரிக்கையே.

ஆசியாவில் ஆழக்காலூன்றும் அமெரிக்கா, சீனாவுக்குமட்டுமல்ல, தன்னோடு ஒத்துழையாத அரசாங்கங்களுக்கும் கனதியான ஒரு செய்தியை சொல்கிறது ஏனெனில், அமெரிக்காவின் தேசிய நலன் என்பது ஆசியாவுடனான இறுக்கமான தொடர்பிலேயே தங்கியுள்ளது. அமெரிக்காவின் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஒவில்லியம். எஸ். கோகன் அண்மையில் குறிப்பிட்டதுபோல, ஆசியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பொருளாதார, அரசியல், பாதுகாப்பு மற்றும் மக்களுக்கும் மக்களுக்குமான உறவென்பது அமெளரிக்காவின் பொருளாதார வளர்ச்சிக்கும் பாதுகாப்புக்கும் அடிப்படையானது.

எனவே, ஆசியா எவ்வளவு அமெரிக்காவுக்கு அவசியமோ, அதற்கு இணையான வகையில் ஆசியாவிலுள்ள நாடுகளின் விவகாரங்களும் அமெரிக்காவின் அக்கறைக்குரியதே.

# கலாபூஷணம் விருது வழங்கலுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(பூந்தோட்டம்)

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் கலாபூஷண விருது வழங்கலுக்கான விண்ணப்பங்கள் அனைத்து மாவட்டங்களிலுமிருந்து கோரப்பட்டுள்ளதாக கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக சகல மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்களுக்கும் சுற்றறிக்கையொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அச்சுற்றிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நடிகர்கள், எழுத்தாளர்கள், ஓவியக் கலைஞர்கள், சிற்பக் கலைஞர்கள் (மரச் சிற்பம்), நெய்தல், பின்னல், வேலைகள் செய்வோர், மற்றும் நாட்டியக் கலைஞர்கள், பொம்மலாட்டம், மத்தளம் உள்ளிட்ட மேளக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள், கவிஞர்கள், பாடகர்கள், பாடகிகள், திரைப்படக்கலைஞர்கள், மாயாஜாலக் கலைஞர்கள் ஆகியோருக்கும் மேலதிகமாக பாரம்பரிய கலைஞர்களுக்கும் முக்கியத்துவம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.மேற்படி விருதிற்காக விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் நிரந்தரமாக வசிப்பதுடன் கலைத் துறையில் உன்னத சேவையாற்றி 2012.12.15 அன்று 60 வயதினை பூர்த்தி அடைபவராகவும் இருத்தல் வேண்டும்.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் கலாபூஷண விருது வழங்கலுக்கான விண்ணப்பப்படிவங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் கலைஞர்கள் தத்தமது பிரிவு கலாசார உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொண்டு உரிய விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-266)

# செட்டிக்குளம் மத்தியஸ்தர் சபையில் 27முறைப்பாடுகள்

(பூந்தோட்டம்)

செட்டிக்குளம் மத்தியஸ்தர் சபையில் கடந்த இரு மாதங்களுக்குள் 27 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என மத்தியஸ்தர் சபைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட மேற்குறித்த மத்தியஸ்தர் சபையில் செட்டிக்குளம் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட மக்களின் பிரச்சினைகளே முறைப்பாடு செய்யப்படுகின்றது.

இவ்வாறு பதிவாகியுள்ள முறைப்பாடுகளில் 25 முறைப்பாடுகள் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இதில் பெரும்பான்மையான குடும்பப் பிரச்சினை, காணிப்பிரச்சினை முறைப்பாடுகளே இணக்கப்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன் வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி பணத்தை வாங்கி ஏமாற்றிய சம்பவம் தொடர்பான முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இம்முறைப்பாட்டுடன் தொடர்புடையவர்கள் வெளிமாவட்டத்தை சேர்ந்தவர்கள் என்பதால் இணக்கப்பாட்டுக்கு கொண்டு வர முடியாதுள்ளது என மத்தியஸ்தர் சபை அறிவித்துள்ளது. (அ-3-266)

# பொன்சேகாவின் சிறைவாசம் நேற்றுடன் முடிவுக்கு வந்தது

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு இரண்டு இராணுவநீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட 30 மாத சிறைத்தண்டனை நேற்றுடன் முடிவுக்கு வந்தது.

சரத் பொன்சேகா மீது மேலும் இரண்டு வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அவர் உடனடியாக விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் அவரைப் பிணையில் விடுவிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி செயலகத்தில் இருந்து இதற்கு எதிர்ப்புகள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

எனினும் அவர் மீது மேலும் இரண்டு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதால் பிணையில் விடுவிக்கப்பட வாய்ப்புகள் இல்லை என்று ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (அ-2)


## தொடர் சொற்பொழிவு

கந்தர்மடம் - பழம் வீதி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாதேவி சமேத ஞான வைரவப் பெருமாள் ஆலய நந்தன வருட அலங்கார உற்சவத்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை 108 சங்காபிஷேக நிகழ்வுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் அலங்கார உற்சவகாலங்களில் தினமும் மாலை 6 மணி முதல் 7 மணி வரை தெய்வீகப்பேருரையாளர் மதுரகவி காரை எம்:பி. அருளானந்தன் வழங்கவுள்ளார். (அ-2)




கோப்பாய் பொலிஸாரும் கோண்டாவில் வாழ் இளைஞர்களும் இணைந்து நடத்திய சித்திரைப்புத்தாண்டு விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கோப்பாய் பொலிஸாரும் பொதுமக்களுடன் இணைந்து பாரிய விளையாட்டில் ஈடுபடும் காட்சி....

# 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

## திரு.அமிர்தநாதன் தாஸிஸ் அருட்செல்வம்

(அருள்)

பிறப்பு 10 . 04 . 1978

இறப்பு 27 . 04 . 2009

தொடர முடியாத தொலை தூரத்தில்- நீ
சென்றிட்டாலும் -தினம்
தொட்டுக் கொள்ளும் உன்
புன்னகை புனைந்த அடையாளங்கள்
நெஞ்சினில் நினைத்து காலம் உள்ளவரை
உன் நினைவுகளுடன் கல்லறையில்
கையேந்தி தினம் கரைகின்றோம்

ஓ..இரக்கமும் அன்பும் நிறைந்த
அன்புத் தந்தையே இறைவா!
வன்னிப் போரினிலே
சிறு வயதினிலே தனது இவ்வுலக
வாழ்வை முடித்து உமதண்டை
வந்திருக்கும் அமிர்தநாதர்- தாஸிஸ்
(அருள்) அவர் தன் வாழ்க்கையில்
அறிந்தும் அறியாமலும் செய்த பாவங்களை
மன்னித்து அவரை உமது நித்திய
பேரின்ப இராட்சியத்தில் சேர்த்தருளும்
ஆமேன்...

27.04.2012 இன்று வெள்ளிக்கிழமை 11 மணிக்கு புனித யூதா கோயிலில் திருப்பலி பூசையும் அதன் பிற்பாடு அன்னாரின் இல்லத்தில் மதியபோசனமும் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடையார்கட்டு தெற்கு,
உடையார்கட்டு.

(சி-6444)


தகவல் :-
குடும்பத்தினர்.



# சிறுவர் அரங்கம்

83

## நடனமாடும் சங்கை மான்கள்



நான் யாரென்று உங்களுக்கு தெரியுமா? என் பெயர் என்னவென்று தெரியுமா? எனக்குப் பல பெயர்கள் உண்டு! மணிப்பூர் கலைமான் என்று என்னை அழைப்பார்கள்! சங்கை என்றும் அழைப்பதுண்டு! அன்றொரு நாள் என்னை பார்த்துவிட்டு ஒருவன் அதோ போகிறது பார் சங்கை! விரைவாக அழிந்து வரும்

## அம்புலி மாமா கதைகள்

இனங்களில் அதுவும் ஒன்று! என்று குறிப்பிட்டான்.

நானும் என் உயிர் நண்பனும் இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் ஒன்றாகப் பிறந்து வளர்ந்தோம். மணிப்பூரில் லோக்டக் என்னும் பெரிய ஏரி உள்ளது. உலகிலேயே மிதக்கும் பூங்கா அது ஒன்றுதான்! அது தான் எங்கள் இருப்பிடம்!

ஏரியின் ஒரு பகுதியில் நேஷ்னல் பார்க் என்ற எங்கள் இருப்பிடமான மிதக்கும் பூங்கா உள்ளது. ஏரியின் தெற்குப் பகுதியில் பல தீவுகள் உள்ளன. அவற்றுக்கு பும்டி என்று பெயர். இந்த தீவுகளை தொலைவில் இருந்து பார்த்தால் ஏரித் தண்ணீரில் மிதப்பன போல காணப்படும். இங்கு பல விதமான மரம், செடி, கொடிகள் அடர்ந்து காணப்படும்.

இந்த தீவுகளில் நாங்கள் நடந்து செல்வதைத் தொலைவிலிருந்து நோக்கினால் நாங்கள் நாட்டியமாடுவது போல் தோன்றும். அதனால் எங்களுக்கு நடனமாடும் மான்கள் என்ற பெயரும் உண்டு.

ஒரு நாள் நானும் என் நண்பனும் எங்கள் இருப்பிடத்தில் சில நாட்களாக ஏற்படத் தொடங்கியுள்ள மாறுதல்களைப் பற்றி கவலையுடன் பேசிக் கொண்டே நடந்து சென்றோம்.

சில ஆண்டுகளுக்கு முன் அங்கு ஓர் அணை எழுப்பப்பட்டு மிகப் பெரிய தண்ணீர் தொட்டியாக கட்டப்பட்டது. அந்த தொட்டியில் தண்ணீர் அதிக ஆழத்திற்கு தேக்கி வைக்கப்பட்டது. முதல் எங்கள் இருப்பிடங்கள் ஏரி நீரில் மூழ்கத் தொடங்கின இப்படியே சென்றால் ஒருநாள் ஏரித் தீவுகள் முழுவதுமாக மூழ்கி விடும்.

எங்கள் எதிர்காலத்தைப் பற்றி நாங்கள் கவலையுடன் பேசிக் கொண்டிருந்த போது திடீரென சில வேட்டை நாய்களின் குரைக்கும் ஒலி கேட்டது. உடனே என் நண்பன் ஓடலாம் வா! வேட்டை நாய்கள் நம்மைத் தான் துரத்துகின்றன! என்று எச்சரிக்கை விடுக்க நாங்கள் இருவரும் மிக விரைவாக ஓடினோம்.நான் முன்னே ஓட என் நண்பன் என்னைத் தொடர்ந்து வந்தான். ஓடிய வேகத்தில் நான் தடுக்கி விழுந்து என் தலையில் அடிபட்டதால் மயங்கி விழுந்தேன். பின்னர் நான் கண் விழித்த போது என்னைச் சுற்றிலும் பலர் நின்று கொண்டு இருந்தனர்.




என் தலை அடிபட்ட இடம் பயங்கரமாக வலித்தது. என் நண்பனைக் காணவில்லை. என்னைச் சுற்றியிருந்த மனிதர்கள் சங்கை மான்களை வேட்டையாடுவதைப் பற்றி பேசிக் கொண்டு இருந்ததும் எனக்குப் பகீரென்றது. அந்தப் படுபாவி மனிதர்கள் என் நண்பனைக் கொன்று விட்டனர் என்றும் அடுத்து என்னைக் கொல்லப் போகின்றனர் என்றும் நினைக்கையில் பயத்தினால் என் கண்கள் இருண்டு நாக்கு உலர்ந்தது. திடீரென அப்போது என் நண்பனின் குரல் கேட்டது.

உடனே எழுந்து நின்ற நான் என்னைச் சுற்றியிருந்தவர்களை விலக்கி விட்டு என் நண்பனை நோக்கி ஓடினேன். அவனை ஆசையுடன் கட்டித் தழுவிக் கொண்டே நான் மயக்கமான பின்னர் என்ன நடந்தது என்று கேட்டேன்.

அதை ஏன் கேட்கிறாய்? இன்னும் சற்று தாமதமாயிருந்தால் அந்த வேட்டை நாய்கள் நம்மைக் கடித்துக் குதறியிருக்கும்! நல்ல வேளை இவர்கள் தான் நம்மைக் காப்பாற்றி விட்டனர்! என்று அங்கு கூடியிருந்தவர்களைக் காட்டியது. ஆகா! அவர்களை வேட்டைக்காரர்கள் என்று நினைத்திருந்தேனே! அவர்களா எங்களைக் காப்பாற்றினார்கள்? அவர்களுக்கு நன்றி தெரிவித்தேன். அந்த மனிதர்கள் சங்கை மானை நேசிப்பவர்கள் என்றும் மான்களைப் பாதுகாப்பதென உறுதி பூண்டவர்கள் என்றும் அறிந்து வியந்தேன். மனிதர்களில் இத்தனை நல்லவர்கள் கூட உண்டா? அப்புறம் தான் தெரிந்தது மணிப்பூர் மக்கள் சங்கை மான்களை மிகவும் உயர்வாக மதிப்பவர்கள் என்று! எங்களுக்கு எந்தவித ஆபத்தும் உண்டாகாமல் தடுப்பதை தங்கள் கடமை யாக கருதுபவர்கள்! அது மட்டுமல்ல எங்கள் இருப்பிடமான பும்டித் தீவுகளையும் லோக்டக் ஏரியையும் சுற்றுச் சூழலையும் பாதுகாப்பதில் தீவிரமாக உள்ளனர் என்று அறிந்ததும் எனக்கு உற்சாகமே பிறந்து விட்டது.

நாங்கள் நடனமாடிக் கொண்டே செல்வதை நீங்கள் காண வேண்டுமானால் கெய்பு லாம்ஜோ நேஷ்னல் பூங்காவிற்கு வாருங்கள்! எங்களோடு சேர்ந்து நீங்களும் ஆடலாம்.

# மக்களின் சேவகனாக விளங்கிய கோணேஸ்வரன்



ஆசிரியத்துவத்துடன் நிர்வாக துறையிலும் சிறந்து விளங்கியவர் கோணேஸ்வரன் அவர்கள். சிறந்த கல்வியியலாளராகவும் நிர்வாக சேவையாளராகவும் வாழ்ந்த கோணேஸ்வரன் அவர்கள் குறுகிய காலமே இம் மண்ணில் வாழ்ந்தாலும் அவரது சேவைகள் காலத்தால் அழியாது என்றென்றும் மண்ணில் நிலைத்திருக்கும். ஆளுமையாளன் எம்மை விட்டு மறைந்து ஓராண்டைக் கடக்கின்ற வேளையில் அவரது சேவைகள் நினைவு கூறப்படவேண்டியது அவசியமாகும். இவரது செயற்பாடுகள் வரலாற்று சக்கரத்தில் பதிவு களாக்கப்பட வேண்டிய தேவை எம்மிடையே காணப்படுகின்றது.

பல்துறை ஆளுமையாளர்களையும் விற்பன்னர்களையும் கொண்டு விளங்கும் யாழ்ப்பாண மண்ணில் தலைசிறந்து விளங்கும் வலி. வடக்கில் கீரிமலைகிராமத்தில்புகழ் பூத்த கல்விமான்கள் பலர் தோன்றி சமூகத்திற்கு தொண்டாற்றி மக்கள் மனதில் என்றும் நிலைத்துள்ளார். இத்தகைய பூமியில் பிறந்த கல்வியியலாளராகவும் நிர்வாக ஆளுமையாளராகவும் திகழ்ந்தவர் நாகராஜா கோணேஸ்வரன்.

இலங்கைநிர்வாகசேவைப் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தார். இதன் காரணமாக திணைக்களப் பணிப்பாளராக, பிரதேச செயலராக தன் கல்விச் சிறப்பாலும் ஆளுமைச் சிறப்பாலும் பல்வேறு பதவிகளில் தனது ஆற்றல்களை வெளிப்படுத்தியுள்ளார். மக்களுக்காக சேவை செய்யும் மனங்கொண்ட சேவகனாகத் தன்னைப் பொதுச் சேவைக்கென்றே அர்ப்பணித்துப் பணிபுரிந்தார்.

## மறைந்தார் மாண்பு

கல்வியின் மீது வைத்த கரிசனையின் காரணமாக எல்லோரும் கடினம் எனக் கருதும் கணித பாடத்தில் மாணவர்கள் சித்தியடைய வேண்டுமென்று அளவெட்டியில் கோணேஸ் மற்ஸ் அக்கடமி என்னும் கல்வி நிறுவனத்தை நிறுவினார்.

ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி தன்னை நாடி வந்தவர்க்கு பணத்தை நோக்காக கொள்ளாது கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்த இவரது பணி உயர்வானது.

2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வன்னிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா மாவட்டத்தின் பல் வேறு பகுதிகளில் தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்களுக்குப் பல்வேறு உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் முன்னின்று உழைத்து மக்களின் துயர் துடைத்தவர். தனது பணிக்காலத்தில் தன்னலம் பாராது பொது நலன் சார்ந்து மக்களின் வாழ்விற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். நீண்ட நாள் வாழ்தலிலும் குறுகிய காலத்தில் வாழ்ந்து அவர் ஆற்றிய சேவைகள் என்றும் நிலைத்திருக்கும் என்பது திண்ணம். அவர் மக்களுக்கும் நாட்டுக்கும் செய்த சேவையினால் அழியாப் புகழுக்கு உரித்துடையவராக விளங்குகின்றார்.

**ஜே. நிரோஸ் ஆனந்**
(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்)
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

# அந்தக்கால உடன்படிக்கைகளை இலங்கை அரசு மறந்து விட்டதா?

## கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கேள்வி

(கொழும்பு)

**தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அமெரிக்கா, இந்தியா மற்றும் ஏனைய நாடுகளுக்குச் சென்றாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு காண்பதற்கு எம்மிடம் தான் வர வேண்டும் என்று அரசாங்க அமைச்சர்கள் இப்போது கூறத் தொடங்கியுள்ளனர்.**

அன்று தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் 1957 மற்றும் 1965 ஆம் ஆண்டுகளில் இருந்த இலங்கை அரசாங்கங்களுடன் செய்து கொண்ட பண்டா- செல்வா உடன்படிக்கை மற்றும் டட்லி- செல்வா உடன்படிக்கை ஆகியவற்றுக்கு என்ன நடந்தன என்பதை இவர்கள் மறந்து விட்டார்களா? அவ் உடன்படிக்கைகளை கிழித்தெறிந்து விட்டு தமிழ் மக்களின் மீது வன்முறையைக் கட்டவிழத்து விட்டது யார் என்பதை மறந்து விட்டார்களா? என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் கேள்வியெழுப்பியுள்ளார்.

திருகோணமலை நகர மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தந்தை செல்வநாயகத்தின் 35 ஆவது சிரார்த்த தினக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் .மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் தந்தை செல்வநாயகத்தின் பாதையில் தான் நாம் இன்று பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

தந்தை செல்வாவுடன் அன்று செய்து கொண்ட உடன்படிக்கைகளையும் ஒப்பந்தங்களையும் இலங்கை அரசாங்கங்கள் சரியாக நடைமுறைப் படுத்தியிருந்தால் இன்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டனை சந்தித்து இலங்கை தமிழ் மக்களின் பிரச்சினைக்குரிய தீர்வுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டிருக்காது.

இலங்கை அரசாங்கம் இனியும் எங்களை ஏமாற்ற முடியாது. தமிழ் மக்களுக்கு நியாயமானதும் நிலைத்து நிற்கக் கூடியதுமான தீர்வை இலங்கை அரசு முன் வைக்குமானால் நாம் அதனை நிராகரிக்க மாட்டோம் என்றார்.

(அ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் இவ்வாண்டுக்கான பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம்,இல 65,மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

(அ-9)

# இரண்டு கோடிக்கும் அதிகமான தொலைபேசி இணைப்புக்கள்

இலங்கையில் இரண்டு கோடிக்கும் அதிகமான தொலைபேசி இணைப்புக்கள் பெற்றுக் கொள் ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

2011 ஆம் ஆண்டின் நிறைவில் இலங்கையின் மொத்த தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை இரண்டு கோடியே பத்தொன்பது இலட்சம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2010 ஆம் ஆண்டில் செல்லிடப் பேசி பாவனையாளர்களின் எண்ணிக்கை 17.3 மில்லியனாகக் காணப்பட்டதாகவும் 2011 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 18.3 மில்லியனாக உயர்வடைந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் செல்லிடப்பேசி பயன்பாடு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

# மரண அறிவித்தல்

## அமரர் தெய்வானை முத்துக்குமாரு




மந்துவில் மேற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தெய்வானை முத்துக்குமாரு அவர்கள் 2012.04.26 ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார். அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமாரு அவர்களின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை அதிபர்), மகேந்திரா (கற்பகப்பொறுப்பாளர்), சந்திரேஸ்வரி ஆகியோரின் பாசமிக்க தாயாரும் தவஞானசுந்தரம், கலாதேவி (ஆசிரியை), சிறிரஞ்சினி ஆகியோரின் பிரியம்மிக்க மாமியாரும் புவிதாஞ்சலி, சங்கீதரன், ஹேமாஞ்சனி, போதநிலாஞ்சலி, நிகேதனன், ஒளியழகன், மாலதி (முகாமைத்துவ உதவியாளர்), காயத்திரி, கடோற்கஜன், புவர்ணலா, கிரிசாந்தன், போதஜனிக்கா, தரணிகா ஆகியோரின் நேசமிக்க பேர்த்தியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 2012.04.27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப.11.00 மணிக்கு இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்
மு.பாலசுப்பிரமணியம்

(8244)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
01 . 10 . 1972



உதிர்வு
10 . 04 . 2011

,திதி: -ஸப்தமி 28.04.2012

## நாகராஜா கோணேஸ்வரன்

(BSC,SLAS,JP WHOLE ISLAND AND MSW)

முன்னாள் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு
முன்னாள் பணிப்பாளர்-தொழிற்பயிற்சி திணைக்களம்
சமூக சேவைகள் அமைச்சு- கொழும்பு
முன்னாள் உதவிப் பணிப்பாளர்- இந்து சமய விவகாரத்திணைக்களம் (கொழும்பு)


நிஜம் ஒன்று நிழலாகி ஆண்டு ஒன்று ஆனதோ!
ஆறவில்லை எங்கள் மனது உங்கள் அழகான முகமும்,
அமைதியான அன்பான பேச்சும்,
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் நிலைத்து நிற்கும்

மீளாத்துயருடனே
மனைவி,பிள்ளைகள், மாமா,மாமி,
மச்சான்மார்கள், மச்சாள்

டாக்டர் சுப்ரமணியம், வீதி,
சுன்னாகம்.

(8238)

# சிரியாவில் கொடுங்கோல் ஆட்சி; சர்வதேச அழுத்தம் தொடரும்



## ஹிலாரி கடும் எச்சரிக்கை

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் சிரியா அரசுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வோஷிங்டன் வந்துள்ள அவுஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் பாப் கர் உடன் கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார். அவர் மேலும் கூறியது,

ஐ.நா. பார்வையாளர்களுக்கு ஒத்துழைப்பு தரும் பொதுமக்கள் சிரியாவின் அதிகாரிகளால் தாக்கப்படுகின்றனர். இந்த விதமான நடவடிக்கைகள் அமைதித்திட்டத்தை சீர்குலைத்து விடும்.ஹமா நகரில் சிரியாவின் மனித உரிமை அமைப்பைச் சேர்ந்த 9 பேர் கொல்லப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன.

ஐ.நா. பார்வையாளர்களுடன் சந்திப்பு நடத்த அடுத்த நாளே இது போன்ற வன்முறைகள் அரங்கேறியுள்ளன. இது மிகவும் கண் டிக்கத்தக்கது.

நிலைமையை ஐ.நா. பார்வையாளர்களிடம் எடுத்துரைக்க சிரியாவை சேர்ந்த ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. கோபி அனானின் திட்டங்கள் வெற்றி பெற வேண்டும் எனீ நாங்கள் விரும்புகின்றோம். ஐ.நா. பார்வையாளர்களை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளவில்லையெனில் நாம் வெற்றி காண முடியாது. போர் நிறுத்தம் அமுலில் இருந்தும் ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு வன்முறைகள் உள்ளதாக கோபி அனான் கூறியுள்ளார். ஐ.நா. சார்பில் 300 பார்வையாளர்கள் அனுப்பப்படுவர்.

இப்போது 11 பேர் சிரியாவில் உள்ளனர். போர் நிறுத்தம் என்ற போர்வையில் போராட்டக்காரர்கள் மீது வன்முறையை சிரிய ஜனாதிபதி ஆசாத் கட்டவிழ்த்துவிடுகிறார்.

அமைதித்திட்டத்தின் சகல அம்சங்களையும் சிரிய ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும். ஐ.நா. பார்வையாளர்களுக்கு அவர் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும்.

தனது சொந்த மக்களை இப்படி வதை செய்யும் வரை ஜனாதிபதி ஆசாத் மீதான சர்வதேச அழுத்தம் தொடரத்தான் செய்யும். (அ-2)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் கிலானிக்கு குற்றவாளியென தீர்ப்பு

## பிரதமர் பதவியில் சிக்கல்



நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பாகிஸ்தான் பிரதமர் கிலானிக்கு 30 விநாடிகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் உயர் நீதிமன்றில் நேற்றைய தினம் ஆஜரான பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி குற்றவாளி என அந்நாட்டு உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதிமன்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்த தவறிய உயர்நீதிமன்றம் குற்றம் சாட்டியுள்ளது. இருப்பினும் கிலானிக்கு சிறைத்தண்டனை ஏதுமில்லை என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

30 விநாடிகள் அடையாளத் தண்டனையாக நீதிமன்றில் இருக்க வேண்டும் என்ற தண்டனை மட்டும் விதிக்கப்பட்டுள்ளது.பிரதமர்கிலானி குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டதால் அவர் பதவியில் நீடிக்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தலைமையில் நேற்றையதினம் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு பின்னர் கிலானி கூறுகையில்,

என் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் இன்று உயர்நீதிமன்றில் ஆஜராக உள்ளேன். எப்போதுமே நீதித்துறைக்கு உரிய மரியாதை அளித்து வருகின்றேன் என்று கூறியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அல்கொய்தாவுக்கு எதிரான போரில் அமெ.வும் யேமனும் ஒத்துழைக்க முடிவு

அல்கொய்தாவுக்கு எதிரான போரில் மிகச்சிறந்த ஒத்துழைப்பைப் பேண அமெரிக்காவும் யேமனும் உறுதி கொண்டுள்ளன. யேமன் தலைநகரில் அமெரிக்க புலனாய்வு அமைப்பான எஃப். பிஐ இயக்குநர் ரோபர்ட் முல்லர் இப்போது முகாமிட்டுள்ளார்.

அவர் செவ்வாய்க்கிழமை யேமன் ஜனாதிபதி அபெத் ராபோ மன்சூர் ஹாதியை சந்தித்து அல்கொய்தாவுக்கு எதிரான போர் குறித்து 45 நிமிடங்கள் விவாதித்தார். அவருக்கு அரசியல் ரீதியான ஒத்துழைப்பு கொடுப்பதாக அமெரிக்கா சார்பில் முல்லர் உறுதியளித்தார்.

பேச்சுவார்த்தையின் போது அல்கொய்தாவை முறியடிக்க அமெரிக்க உதவி எந்த அளவுக்கு முக்கியமானது என்பதை ஹாதி சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் யேமனில் கடலோரக் காவல் படையை வலுப்படுத்தல் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதில் எத்தகைய ஒத்துழைப்பை மேற்கொள்வது என்பது குறித்து யேமனின் உள்துறை அமைச்சர் அப்துல்காதர் முகமது குவாதானிடம் முல்லர் விவாதித்துள்ளார்.

எனினும் பெயர் தெரிவிக்க விரும்பாத அதிகாரிகள் கூறியதாவது,

அல்கொய்தாவுக்கு எதிரான போரில் விமானம் மூலமான தாக்குதலுக்கு அமெரிக்கா ஆர்வம் காட்டியது. தேவைப்பட்டால் விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க அமெரிக்கா தயாராக உள்ளது என்று பேச்சுவார்த்தையின் போது கூறப்பட்டது. யேமனை சுற்றியுள்ள செங்கடலில் இப்போது அமெரிக்காவின் 3 போர்க் கப்பல்களும் ரஷ்யா மற்றும் பிரான்சுக்கு சொந்தமான ஒரு போர்க் கப்பலும் ரோந்து சுற்றி வரு கின் றன.

மேலை நாடுகளின் சரக்குக்கப்பல்களை அல்கொய்தா பயங்கரவாதிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்ற இந்த போர்க் கப்பல்கள் ரோந்து சுற்றி வருகின்றன என்றனர் அதிகாரிகள். (அ-2)

# முஷாரப்பை ஒப்படைக்க முடியாது; பிரித்தானிய அரசு திட்டவட்டம்



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ தேர்தல் பிரசாரத்தின் போது சுட்டுக்கொல்லப்பட்டார். சரியான பாதுகாப்பு வழங்கப்படாததுதான் அவர் கொலைக்கு காரணம் எனக்கூறி அப்போதைய ஜனாதிபதியான முஷாரப் மீது வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் முஷாரப் உச்ச நீதிமன்றில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக் கப்பட்டார்.முஷாரப் மீது இரண்டாவது முறையாக எப்.ஐ.ஆர் பதிவு செய்யப்பட்டது. அதனால் 2 ஆவது நோட்டீஸ் அவரது வீட்டிலேயே ஒட்டப்பட்டது.

இந்த வழக்கு தொடர்பாக அவர் தேடப்பட்டு வருவதால் அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு சர்வதேச பொலிஸ் மூலமாக இங்கிலாந்து அரசுக்கு பாகிஸ்தான் அரசு கடிதம் அனுப்பி இருந்தது. ஆனால் இந்த கோரிக்கையை இங்கிலாந்து அரசு நிராகரித்துள்ளது. மரண தண்டனை அமுலில் உள்ள நாடுகளிடம் எந்த தனி நபரையும் ஒப்படைக்க மாட்டோம் என்று இங்கிலாந்து திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. (அ-2)

# அதிசய உலகம்...

## 18 வருடகலண்டரை துல்லியமாக கூறி அசத்தும் அதிசய சிறுவன்



கண்முன்னால் கிடக்கும் கலண்டரில் திகதி, நாள் பார்ப்பதில் கூட குழப்பம் ஏற்படும். சில விநாடி யோசனைக்கு பின்புதான் சரியான முடிவுக்கு வரமுடிகிறது. ஆனால் 2030 ஆம் ஆண்டில் ஒரு மாதத்தையும் திகதியையும் சொன்னால் கிழமையை துல்லியமாக சொல்கின்றான் 10 வயது சிறுவன். அதெப்படி..? என்று யோசிக்கிறீர்களா? அவனுடைய அற்புத ஆற்றலை பார்த்து எல்லோருமே அதிசயித்து போகிறார்கள்.

ஸ்ரீராம் பாலாஜி இவன் தான் அந்த அதிசய சிறுவன். அடையாறு ஐ.ஐ.டி. வளாகத்தில் உள்ள கேந்திரிய வித்தியாலயா பள்ளியில் 5 ஆம் வகுப்பு படித்து வருகின்றான். படிப்பில் படுசுட்டி என்று சொல்ல முடியாதவர். வகுப்பில் அமைதியானவன். கடுமையான உழைப்பாளி . இதுதான் அவனைப் பற்றி ஆசிரியை லதா கூறும் சுருக்கமான தகவல்.

இத்தகைய ஆற்றலைப் பற்றி ஆசிரியர் லதா கூறுகையில், வகுப்பில் ஒருநாள் வியாழக்கிழமை என்ன திகதி என்று பார் என்றேன். ஆனால் அவன் கலண்டரை பார்க்காமலேயே திகதியை சொன்னான். இந்த வருடத்தில் எத்தனை வியாழக்கிழமை என்றேன். அதற்கும் சளைக்காமல் பதில் சொன்னான். உடனே அவனது பெற்றோரிடம் தொடர்பு கொண்டு விசாரித்த போது எப்போதும் செல்போனில் கலண்டர் பார்ப்பான் அவ்வளவுதான் என்றார்கள்.

## 23000V மின்சாரம் பாயும் கம்பியை திருத்தும் மனிதன்



மிகக் கூடிய அழுத்தமுள்ள மின்சாரம் பாயும் இணைப்புக்களில் ஏற்பட்ட பிழைகளை திருத்திக்கொண்டிருக்கும் மனிதன்.

## பியானோ இசைத்து வியப்பில் ஆழ்த்திய அபூர்வ நாய்



தற்போது காணப்படும் மனிதர்கள் வளர்க்கும் செல்லப்பிராணிகளை தாம் செய்யும் அனைத்து செயல்களிலும் செயற்பட பல்வேறு பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வாறு காணப்படும் செல்லப்பிராணிகளில் ஒன்றான நாய் இசையமைப்பது இணையத்தளங்களில் பிரபல்யமாகி வருகின்றது. அதன்படி தற்போது பிறிதொரு நாய்க்குட்டி அற்புதமாக பியானோ இசைக்கின்றது. அவ்வாறு நாயின் பியானோ வாசிப்பதை படத்தில் பாருங்கள்.

> பஞ்சமும் நோய்களும் உன்னடியார்க்கோ
> பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ!
>
> – பாரதியார்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பளை மண்ணில் உயிரிழந்த எம் பாலகச் செல்வங்களே!

பளை மண்ணில் மர்மப் பொருள் வெடித்ததில் பரிதாபகரமாக உயிரிழந்துபோன இரண்டு பாலகச் செல்வங்களுக்கு...உங்கள் இழப்பால் உதிரம் கொட்டிய இலட்சக்கணக்கான தமிழ் நெஞ்சங்களில் யானும் ஒருவன்.

என்செய்வோம்! தாளமுடியாத துன்பம். அதன் ஆற்றுகையாக ஒரு அபலைத் தமிழனாக நின்று இம்மடலை எழுதுகின்றேன்.

எனதருமைச் செல்வங்களே! நான்கு வயதிலும் இரண்டு வயதிலும் உங்களை பறிகொடுத்த பாவப் பூமி இது.

நீங்கள் குழந்தைகள். எதைக் கண்டாலும் அதை எடுத்து விளையாடிப் பார்க்கும் மனநிலை உங்களிடம் இருப்பதில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் நீங்கள் தலைவிதிப் பயனாய் இலங்கையில் அதிலும் தமிழினத்தில் பிறந்து விட்டீர்கள்.

என்ன செய்வது! எங்கள் மண்ணில் மர்ம மனிதர்களும் மர்மப் பொருட்களுக்கும் குறைவேயில்லையய்யா!

சுட்டால், வெட்டினால், கடத்தினால் எல்லாமே இனந்தெரியாத மர்மமனிதர்களின் வேலை.

அதேபோல் எது வெடித்தாலும் அது மர்மப் பொருள் என்றாகிவிட்டது.

ஓ! உலகமே! நான்கு வயதும் இரண்டு வயதும் நிறைந்த இந்தக் குழந்தைகளுக்கு இத்தண்டனை எதற்கானது?

சின்னஞ்சிறுசுகள் தங்களை மறந்து அண்ணன் தம்பியாக விளையாடியதற்கு வழங்கிய உயர் சன்மானமா இது?

ஓ! தமிழ்க் குழந்தைகள் அல்லவா! அண்ணனும் தம்பியும் ஒற்றுமையாக விளையாடினால் அது எதிர்காலத்தில் இந்த நாட்டிற்கு வில்லங்கம் என்று மர்மப் பொருளுக்கும் தெரியும் போலும்.

கடவுளே! வெடிபொருள் அபாயமற்ற பிரதேசம் என்ற சான்றிதழும், அதை நம்பிய மீள்குடியமர்வும். எப்படித்தான் மர்மப் பொருள்கள் விளைகின்றன?

அன்புச் செல்வங்களே உங்கள் இழப்பு தாளமுடியாத துன்பத்திற்குரியது.

இருந்தும் நீங்கள் சிங்களக் குழந்தைகளாக இருந்திருந்தால், இந்த அரசு உங்கள் மரணம் கண்டு இழப்பீட்டுத் தொகைகளை இலட்சக்கணக்கில் அறிவித்திருக்கும். உடன் செலவும் அரசிற்குரியதென்று கூறியிருக்கும்.

கூடவே பிரதம மந்திரி உட்பட அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பௌத்த பிக்குகள் என்ற ஒரு பெரும் கூட்டமே உங்கள் வீடு தேடி வந்து அஞ்சலித்திருக்கும்.

இது தேர்தல் காலம் என்றால் எங்கள் கும்பிடு கூட்டமும் இறுதிச் சடங்கில் முன்வரிசையில் குந்தியிருக்கும்.

என்ன செய்வது! பாழ்பட்ட விதி உங்களை தமிழ்க் குழந்தைகளாக்கியது.

அதனால் உங்கள் இழப்பிற்கு எதுவுமில்லை.

தேவையாயின் மர்மப் பொருள் தொடர்பில் கவனம் தேவை என்றொரு அறிக்கை இன்னும் பல நாட்களின் பின் பத்திரிகைகளில் வெளிவரலாம் அவ்வளவுதான்.

என்னினமே! இந்த இழப்புக்கள் எங்கள் இனத்தின் மன வைரத்தை அறுத்தெடுக்கும் அரிவாள்கள்.

ஆதலால் எங்களில் நாங்கள் கவனமாய் இருப்போம்.

நொந்து நூலாகிப் போன எங்கள் இனத்தால் இந்தப் பேரிழப்புக்களைத் தாங்கிக்கொள்ளவே முடியாது.

# மாநகரசபை பொதுக்கூட்ட ஒத்திவைப்புக்கள் தொடர்கின்றன

## உறுப்பினர்கள் விசனம்

முன்னறிவித்தலின்றி மாதாந்தப் பொதுக் கூட்டத்தை முதல்வர் ஒத்திவைத்தமைக்கு யாழ்.மாநகரசபை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

யாழ். மாநகரசபையின் ஒத்திவைக்கப்பட்ட மூன்றாம் மாதப் பொதுக்கூட்டமும் இந்த மாதப் பொதுக்கூட்டமும் நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்பிரகாரம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் மன்றக் கீதத்துடன் கூட்டம் ஆரம்பமானது.

மன்றக்கீதம் முடிபடைந்ததும் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசாவினால் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று (நேற்று) நடைபெறவிருந்த இரண்டு மாதப் பொதுக்கூட்டத்தையும் ஒத்திவைக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தினை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக பின்பு அறிவிக்கப்படும் எனவும் முதல்வர் தெரிவித்தார்.

முதல்வரின் அறிவிப்பை அடுத்து ஆளும் கட்சி உறுப்பினர்களில் சிலர் கூட்டம் நடைபெறும் மண்டபத்தை விட்டு வெளியேறினர்.

இன்னும் சில ஆளுங் கட்சி உறுப்பினர்கள் மண்டபத்தில் கூட்டத்தை ஒத்திவைப்பதற்கான காரணத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இதில் முஸ்லிம் உறுப்பினர்களே அதிகம்.

இதேவேளை யாழ். மாநகரசபையின் எதிர்க் கட்சி உறுப்பினர்களினால் யாழ்.மாநகர சபை ஆணையாளரிடம் கூட்டத்தை ஒத்திவைத்ததற்கான காரணம் கேட்கப்பட்டதோடு அவர்கள் பல கேள்விகளையும் எழுப்பியிருந்தனர்.

இதற்கு மௌனமாகவிருந்த ஆணையாளர் மு.செ.சரவணபவ, உறுப்பினர்களின் தொடர் வற்புறுத்தலினால் தனக்கே காரணம் தெரியாது என்றார்.

மேலும் மாநகர சபைச் சட்டத்தை மதிக்காது முதல்வர் தான்தோன்றித்தனமாக செயற்படுகின்றார் என யாழ். மாநகர சபை எதிர்க் கட்சி உறுப்பினர்களான க.விந்தன், அ.பரஞ்சோதி ஆகியோர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு கூட்டத்தை ஆரம்பிக்க முன்பு கடிதம் மூலமாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது என அறிவித்திருக்க வேண்டும். அல்லது கூட்டத்தை ஒத்திவைப்பதற்கு உறுப்பினர்களின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். கூட்டத்தை நடத்தமுடியாத நிலையில்தான் கூட்டத்தை ஒத்திவைக்க முடியும்.

கூட்டத்தை ஒத்திவைப்பதற்கான காரணம் கூறப்படவில்லை. அதிகாரம் முதல்வருக்கு உண்டு என்றாலும் காரணத்தைக் கூறவேண்டும்; அதுதான் சட்டம்.

ஜனநாயகத்திற்கு விரோதமாக உறுப்பினர்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காது முதல்வர் செயற்படுகின்றார் எனத் தெரிவித்தனர்.

அத்தோடு உறுப்பினர் விந்தன் தனிப்பட்ட ரீதியில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், மே தினக் கூட்டத்திற்கு ஆதரவு திரட்ட முதல்வர் யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் தற்காலிக கூலித் தொழிலாளர்களாக பணிபுரிபவர்களை அழைத்துக் கூட்டம் நடத்தவுள்ளார். அதற்காகத்தான் முதல்வர் கூட்டத்தை ஒத்திவைத்துள்ளார் என்றார். இவ்வாறு நேற்றைய கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதோடு ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் விமர்சனங்களுக்கும் முதல்வர் உள்ளாகியிருந்தார். (அ-6)

## நீயா? நானா? போட்டிக்குள் பந்தாடப்படும் மேதினம்

புரட்சியின் பின்னர் தொழிலாளர்களுக்காகவே பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச மே தினம் அல்லது சர்வதேச தொழிலாளர் தினம் இலங்கையில் அரசியல்வாதிகளின் பதவி அதிகார சூழ்ச்சிக்குள் சிக்கி சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் பிரதான எதிர்க் கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசியக் கட்சியில் இதனை அவதானிக்க முடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என அக்கட்சியின் மத்திய செயற்குழு கூடி முடிபெடுத்து அதற்கான ஏற்பாடுகள் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்று வருகின்றன.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மே தின நிகழ்வோடு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் நினைவு நிகழ்வும் கொழும்பில் இடம்பெறும் என அறிவித்து அதற்கான ஏற்பாடுகள் பிரமாண்டமாக இடம்பெற்று வருகின்றன. தொழிலாளர்களின் மே தினம் இன்றைய அரசியல்வாதிகளின் நீயா? நானா? என்ற போட்டியில் பந்தாடப்பட்டு வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான மே தினக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் எனவும் அதில் அனைத்துக் கட்சி முக்கியஸ்தர்களும் பங்கேற்பது கட்டாயம் எனவும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கடந்த 25 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எனினும் பிரதான மே தினக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் கொழும்பு பிரேமதாச நினைவு தினத்தில் கலந்து கொள்ள சஜித் பிரேமதாசவும் மற்றுமொரு ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினரும் அனுமதி கோரியதாகவும் அதற்கு கட்சி அனுமதி அளித்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார். திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு கூறி ஒரு பொழுது செல்வதற்கு முன்னர் திஸ்ஸ கூறியது பச்சைப் பொய் எனவும், தான் அவ்வாறு கட்சியில் அனுமதி எதுவும் கோரவில்லை எனவும் ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் அறிவித்தார்.

ஐ.தே.கவின் அனைத்து உறுப்பினர்களையும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்துள்ள தலைவர் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாசவின் கோரிக்கையை ஏற்று கொழும்பு நிகழ்வில் கலந்து கொள்ள அவருக்கு அனுமதி அளித்துள்ளார்.

இவரே மறுபுறம் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்படாவிட்டால் அது அவர்களுக்கு செய்யும் இன துரோகச் செயல் என கூறி வருகின்றார். எது எப்படி இருப்பினும் சஜித் பிரேமதாசவின் பார்வையில் சர்வதேச தொழிலாளர் தினம் இன்று ரணசிங்க பிரேமதாச நினைவு தினமாக மாறிவிட்டுள்ளது என்பதே உண்மை. (அ-2)



## வெள்ளி நற்சிந்தனை

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

69

மனிதன் தோற்றம் பிறப்பெனவும் முடிபு இறப்பெனவும் கொள்வதே உலக இயல்பு. ஆனால் இறையருள் பெற்றுப்பக்தி வழிநிற்பவர் கூறும் விளக்கம் வேறுபட்டது. எல்லா உயிர்களின் பிறப்பையுண்டாக்கும் காரணன் இறைவனே. எல்லா உயிர் உலகங்களுக்கெல்லாம் ஒடுக்கத்தைச் செய்பவனும் அவனே. இறைவனே நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம் ஆகிய ஐம்பூதங்களுமானவன். இவை முறையே ஒன்றினுள் ஒன்று ஒடுங்கும். **அலைகின்ற நீர், நிலம், காற்று, அனல் அம்பரமாகி நின்றீர்** என அப்பர் பாடியுள்ளார். **நிலனே நீர், வளி, தீ, நெடுவானமாகி நின்ற புலனே** எனச் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். ஒன்றிலிருந்து தோன்றுதலில்லாத இறைவன் பேராற்றலை ஐம்பூதங்களும் விளக்கி நிற்கின்றன. இதை விட இன்னொரு சிறப்பு நிலையும் இறைவனுக்கு உள்ளது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்புலன்களாலும் தாக்கப்படாமல் அவற்றுடன் கலந்திருக்கும் ஆற்றல் பெற்றறவன் அவன்.

ஐம்பூதங்களை நாம் அறிந்திருக்கிறோம். அதுவே இறைவன் தோற்றம் என்பதை நாம் உணர்வதில்லை. ஆனால் நமது முன்னோர் ஐம்பூதங்களையும் இறைவன் பேராற்றலின் தோற்றமாகக் கண்டு வழிபட்டுவந்தனர்.

இது இயற்கைவழிபாடு எனக் குறிப்பிடப்பட்டது. இயற்கையை வழிபடுவது இறைவனையே வழிபடுவதாகும். இறைவனின் திருக்கோலத்தை இயற்கைத் தோற்றத்திலே காணும் மனப்பக்குவம் இப்போது எல்லோரிடமும் இல்லை. மணிவாசகர் தனது பாடல்களிலே பெரும்பாலும் இயற்கையின் உருவிலே இறைவனைக் காண்பதற்கு வழிகாட்டியுள்ளார்.

இறைவனுக்கும் உலகத்து உயிர்களுக்குமுள்ள தொடர்பையும் சிறப்பாக விளக்கிக் காட்டியுள்ளார். இறைவன் எங்கும் இருப்பதையும் சுட்டியுள்ளார்.

கோவில்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னர் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என்பவற்றையே இறைவன் உறையும் இடங்களாகக் கருதி வழிபாடு நடைபெற்றுள்ளது. சங்கத் தமிழ்ப்பாடல்களிலே பல எடுத்துக் காட்டுக்கள் உண்டு.

இறைவன் உயிர்களுக்கு ஒடுக்கம் தரும் நிலையைத் தத்துவநிலையில் கேவலநிலையிற் கிடந்த ஆன்மாக்களுக்குத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்தல் என விளக்கப்படும். இறைவன் பற்றிய சித்தாந்தம் கற்றோரால் வகுக்கப்பட்டபோது இத்தகைய விளக்கங்கள் தோன்றியுள்ளன. ஆனால் சாதாரணமக்களின் அறிவு நிலையில் இறைவன் உருவம் தேவைப்பட்டது. அதனால் கோவில்கள் அமைப்புப்பெற்றன. அங்கே இறை வன் உருவத் திருமேனிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு மக்களால் வழிபடப்பட் டன. எல்லோரும் சென்று வழிபடும் ஆலயம் மனத்தை ஒடுக்கி இறை சிந்தனையோடு மட்டும் உலவும் இடமாகப் புனிதமான இடமாகக் கருதப்பட்டது.


**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இறைவன் திருவடிகளைக் கண்ணாரக்கண்டு போற்றி வழிபடும் மரபு தோன்றியது. பக்திப்பாமாலை புனைந்து வழிபடக்கோயில் கேட்பதை இறைவன் கொடுக்கும் புனிதஸ்தலமாயிற்று. மணிவாசகர் பாடல் இதனையே புலப்படுத்துகிறது. வழிபாட்டால் எதையும் பெறலாம். அதற்கு வழிபடும் இறைவன் பற்றிய அருள்நிலைகளை நன்கு அறிய வேண்டும்.

போற்றியெப் புவனம் நீர் தீக்
காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்றம்
ஆகி நீ தோற்றமில்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாயீ
றின்மையானாய்
போற்றியெம் புலன்கள் நின்னைப்
புணர்கிலாப் புணர்க்கையானே

# இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு



நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் தலைமையில் சமீபத்தில் இலங்கை சென்று வந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கை அரசுடன் நடத்திய பேச்சுவார்த்தை குறித்து மத்திய அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார்.

தமிழர்களுக்கு அதிகாரப்பகிர்வு அளிப்பது குறித்து இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் ஜனாதிபதி ராஜபக்ஷ அதனை ஏற்றுக்கொண்டதாகவும் இந்திய நாடாளுமன் றக்குழு தெரிவித்ததாக ராமதாஸ் கூறியுள்ளார். எனினும் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பது குறித்து இலங்கை ஜனாதிபதி எவ்வித உறுதியையும் அளிக்கவில்லை என்று இலங்கை நாளிதழ்கள் செய்தி வெளியிட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர்களின் துயரங்களை தீர்ப்பது குறித்து இந்திய நாடாளுமன்ற குழு இலங்கை அரசுடன் எதுவும் பேசவில்லை என்றும் தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பது சாத்தியமில்லை என்று இலங்கை அரசு தெரிவித்திருப்பது அதிர்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டு வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை சென்ற போதும் இதேபோன்று நிகழ்ந்ததாக கூறியுள்ள ராமதாஸ் இந்தியத் தலைவர்கள் இலங்கை செல்லும் போது ஒரு வாக்குறுதி அளிப்பதும் அவர்கள் தாயகம் திரும்புவதற்குள் அதை மறுப்பதுமான போக்கை இலங்கை அரசு மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டியுள்ளார்.

எனவே, தமிழர்களுக்காக தனி ஈழத்தை இலங்கையில் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளை ஐ.நா.சபை மூலம் இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும் டாக்டர் ராமதாஸ் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-2)

# இலங்கையில் சொந்தங்கள் மடிந்தபின் இந்தியத் தூதுக்குழுவின் விஜயம் பயனற்றது

## தா.பாண்டியன் தெரிவிப்பு

(ஆண்டிப்பட்டி)



போர்க்குற்றவாளியான இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு தண்டனை பெற்றுத் தரும் வரை ஓயமாட்டோம் என்று ஆண்டிப்பட்டியில் நடந்த பொதுக் கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் தா. பாண்டியன் கூறியுள்ளார்.

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோரிக்கை விளக்க பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய அவர், கலைஞர் இப்போது சொல்கிறார் தனித்தமிழ் ஈழம் வேண்டும் என்று 10 வருடம் கழித்து சொல்லக் கூடாது. இலங்கையில் எங்கள் இரத்தம் மடியக் கூடாது என்று பல ஆண்டுகளாக குரல் கொடுத்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. இராணுவத்தையும் அனுப்பி தளபாடங்களையும் அனுப்பி எங்கள் சொந்தங்களை கொன்று குவித்த பின் இன்று தூதுக்குழு அனுப்ப வேண்டிய அவசியம் என்ன? முள்வேலியில் முடங்கி கிடக்கும் தமிழ்த் தமிழர்கள் முதலில் வெளியேற்றி குடியேற்றி குடியமர்ந்து அதற்குப்பின் வருகின்றோம் என்றல்லவா? இந்த காங்கிரஸ் சொல்லியிருக்க வேண்டும்.

கேபினட் அந்தஸ்தில் ஆட்சியில் பங்கு பெற்றிருக்கும் தி.மு.கவிற்கு இது தெரியவில்லை. இன்று வீடுகட்டி கொடுக்கிறார்களாம். ஏற்கனவே இருந்த தமிழர்களின் வீடுகள் எங்கே? போர்க்குற்றவாளி ராஜபக்ஷவிற்கு தண்டனை பெற்றுத் தரும் வரை ஓயமாட்டோம். (அ-2)

# அவசரமாக தரையிறங்கிய வங்கதேச போர் விமானம்



வங்கதேசத்திற்கு சொந்த மான போர் விமானம் ஒன்று மேற்கு வங்க மாநிலத்திற்குள் அவசர அவச ரமாக தரையிறக்கப்பட்டதையடுத்த இது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

பி.டி.16 என்ற வங்கதேசத்திற்கு சொந்தமான இராணுவ பயிற்சி விமானம் ஒன்று இந்திய எல்லை யில் பறந்து கொண்டிருந்த போது திடீரென மேற்குவங்க மாநிலம் முர்ஷி தாபாத் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறங்கியது.


இரு இருக்கைகள் கொண்ட அந்த போர் விமானம் ஏன் இந்தியாவிற்குள் தரையிறங்கியது என்பது குறித்து விமானி ரஷீத் என்பவரிடம் அம்மாநில பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்விசாரணையில் எரிபொருள் பற்றாக்குறையால் விமானத்தை தரையிறக்கியதாக அவர் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

பின்னர் விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதாகவும் அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் அளித்ததால் அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருவதாகவும் வங்கதேச தூதரகத்திற்கு இத்தகவல் தெரிவிக்கிப்பட்டு விட்டதாகவும் தகவல் வெளிவந்துள்ளது. (அ-2)

# உலக விவகாரங்களில் இந்தியா பங்கேற்று முன்மாதிரியான நாடாக திகழ வேண்டும்

## பான் கீ மூன் அறிவுரை



எனது பயணத்தின் நோக்கம் இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவதாகும். ஐ.நாவுக்கு இந்தியா ஒரு மதிப்புமிக்க வலுவான கூட்டாளியாகும். எனது பயணத்தின்போது இந்த உறவை மேலும் வலுப்படுத்துவேன் என இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐ.நா. பொதுச்செயலாளர் பான்-கீ மூன் தெரிவித்துள்ளார். மூன்று நாட்கள் அதிகாரபூர்வமாக பயணம் மேற்கொண்டுள்ள அவர் மேற்கண்டவாறு உறுதியளித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா உலக விவகாரங்களில் முக்கிய பங்காற்றி முன்மாதிரியாகத் திகழ வேண்டும். அரபு நாடுகள்,வடக்கு ஆபிரிக்கா போன்ற ஜனநாயகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிற நாடுகளுக்கு இந்தியா உதவ வேண்டும். அந்த நாடுகளுடன் தனது ஜனநாயக அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அவற்றுக்கு முன்மாதிரியாகத்திகழ வேண்டும். ஐ.நாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பு குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் பான்-கீ மூன் கூறியுள்ளார்.


அணிசேரா நாடுகள் அமைப்பை உருவாக்குவதில் இந்தியாவுக்கு பங்குண்டு.ஜி 77 நாடுகள் அமைப் பில் இந்தியாவும் உள்ளது. வளர்ந்துவரும் பெரும் பொருளாதார நாடாகவும் விளங்குகிறது. ஐ.நா. பாதுகாப்பு குழு பெரும் பங்காற்றியிருக்கிறது. உலகின் பல பகுதிகளில் உள்ள ஐ.நாவின் அமைதி காக்கும் படையில் இந்தியா பங்கேற்றியிருக்கிறது. தங்கள் கடமையின் போது இந்திய வீரர்கள் தங்கள் இன்னுயிரை இழந்திருக்கின்றனர். நாங்கள் இந்தியாவுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறோம் என்றார்.

பான் கீ மூன்,மன்மோகன் சிங், வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். எம். கிருஷ்ணா மற்றும் பல முக்கிய தலைவர்களை சந்திக்கவுள்ளார் மேலும் மும்பையில் முகேஷ் அம்பானி நடத்தவிருக்கும் நிகழ்ச்சியிலும் பங்கேற்பார். (அ-2)




# இந்தியாவுக்கு போட்டியாக பாகிஸ்தான் அணு ஆயுத ஏவுகணை சோதனை

(சென்னை)



இந்தியாவுக்கு போட்டியாக பாகிஸ்தானும் நேற்றைய தினம் அணு ஆயுத ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது. இந்தியா ஆறு நாட்களுக்கு முன்பு அக்னி -5 ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்தியது. இந்த ஏவுகணை ஒரு தொன் எடை கொண்ட அணு ஆயுதங்களை சுமந்து சென்று 5 ஆயிரம் கி.மீ. தொலைவு இலக்கை தாக்கி அழிக்கும் திறன் படைத்தது.

இந்த ஏவுகணை சோதனை பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளுக்கு கிலியை ஏற்படுத்தி இருக்கிறது. இந்தியாவுக்கு போட்டியாக நாங்களும் ஏவுகணை சோதனை நடத்துவோம் என்று பாகிஸ்தான் மூன்று நாட்களுக்கு முன்பு ஏட்டிக்கு போட்டியாக அறிவித்தது.

அதன்படி பாகிஸ்தான் நேற்று ஏவுகணை சோதனை நடத்தியது. ஹாட்ப்-4 என்று பெயரிடப்பட்டுள்ள புதிய ஏவுகணையின் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டதாக பாகிஸ்தான் அரசு அறிவித்தது.

அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட இந்த ஏவுகணை 750 கி.மீ. தொலைவு இலக்கை தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள எந்த இலக்குகளையும் குறி வைத்து தாக்குதல் நடத்த முடியும். ஏவுகணை சோதனையை வெற்றிகரமாக நடத்திய விஞ்ஞானிகளுக்கு ஜனாதிபதி சர்தாரி, பிரதமர் கிலானி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். (அ-2)



தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்தில் 104 கோடியே 2 இலட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ள பதினாறு புதிய துணை மின் நிலையங்களையும் நான்கு தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களையும் காணொளிக் காட்சி மூலமாக திறந்து வைத்ததைப் படத்தில் காணலாம்.

# முதல் வெற்றியை பெற்றது டெக்கான் அணி



ஐ.பி.எல் போட்டித் தொடரின் 35 லீக் ஆட்டம் சுபா்ரா சஹாரா ஸ்ரேடியம் புனேயில் நேற்றிரவு நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் சங்கக்கார தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதின.

புள்ளிப்பட்டியலில் 9-வது இடத்தில் இருக்கும் டெக்கான் அணி, ஆறாம் இடத்தில் உள்ள புனே அணியுடன் மோதியது. டெக்கான் அணி 6 ஆட்டங்களில் விளையாடி 5 ஆட்டங்களில் தோல்வியை தழுவியுள்ளது. ஒரு ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

டெக்கான் அணியில் மூன்று மாற்றங்கள் செய்யப்பட்டிருந்தன. கடந்த போட்டியில் விளையாடிய டேல் ஸ்ரெய்ன், வீர் பிரதாப் சிங், ஆனந்த் ராஜன் ஆகியோர் நீக்கப்பட்டு ரஸ்டி தெரோன், மன்பிரித் கோனி, ஆஸிஷ் ரெட்டி ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர். புனே அணியில் கடந்த போட்டியில் விளையாடிய லூக் ரைட், முரளி கார்த்திக் ஆகியோர் நீக்கப்பட்டு மார்லன் சாமுவேல்ஸ், புவனேஸ் குமார் ஆகியோர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெக்கான் சார்ஜர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது.

அதன்படி டெக்கன் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக பார்த்திவ் பட்டேலும், ஷிகர் தவானும் களமிறங்கினர். ஷிகர் தவான் 16 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ரன்-அவுட் ஆனார்.

இவரையடுத்து பார்த்திவ் பட்டேலுடன் கமரூன் வைட் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக ஆடிய பார்த்திவ் பட்டேல் 24 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.


அணித் தலைவர் சங்கக்கார 12 ஓட்டங்களில் வெளியேறினார். கமரூன் வைட் அதிரடியாக ஆடி 46 பந்துகளில் 6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 78 ஓட்டங்களைக் குவித்தார்.

டெக்கான் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைக் குவித்தது.

178 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் புனே வாரியர்ஸ் அணி களமிறங்கியது.

புனே வாரியர்ஸ் அணி ஆரம்பத்தில் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தாலும் பின்னர் டெக்கான் அணியின் சிறந்த பந்து வீச்சினால் அந்த அணியின் ஓட்டக் குவிப்பு கட்டுப்படுத்தப்பட்டது.

இறுதியில் புனே வாரியர்ஸ் இந்திய அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களையே எடுத்தது.



அந்த அணியின சார்பில் ரொபின் உத்தப்பா அதிக பட்சமாக 29 ஓட்டங்களை எடுத்தார்.

டெக்கான் சார்ஜர்ஸ் அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இப் போட்டியில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக டெக்கான் அணியின் கமரூன் வைட் தெரிவானார்.

**இன்றைய ஐ.பி.எல். போட்டி:**
இரவு 8 மணிக்கு டில்லியில் நடைபெறும் போட்டியில் டில்லி டேர்டேவில்ஸ் அணி எதிர் மும்பை இந்தியன்ஸ் அணி மோதுகிறது.

நேற்றைய போட்டியைக்காண வந்த யுவராஜ் சிங் சிறிது நேரம் துடுப்பெடுத்தாடி ரசிகர்களை மகிழ்ச்சிப்படுத்தினார்.



# சச்சின் கையெழுத்திட்ட துடுப்பு விலைமதிக்கமுடியாத சொத்து

## -இங்கிலாந்து பிரதமர் கமரூன்



சச்சின் டெண்டுல்கர் கையெழுத்திட்டு தனது மகளுக்காக அளித்த கிரிக்கெட் துடுப்பை விலைமதிக்க முடியாத ஒரு சொத்தாக கருதுவதாக இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் பெருமையாக கூறியுள்ளார்.

லண்டனில் இந்தியாவின் பழமைவாத நண்பர்கள் என்ற அமைப்பின் தொடக்க விழாவில் கலந்துகொண்ட அவர் கூறியதாவது, 2010 ஆம் ஆண்டு இந்தியாவிற்கு தான் மேற்கொண்ட சுற்றுப்பயணத்தின் போது இந்தியாவின் மிக பெரிய துடுப்பாட்டவீரர் சச்சின் டெண்டுல்கர் ஒரு கிரிக்கெட் துடுப்பில் அவரது கையெழுத்தையிட்டு தனது மகளுக்காக தந்தார் என்றும் அதை விலைமதிக்க முடியாத ஒரு சொத்தாக தான் கருதுவதாகவும் டேவிட் கெமரூன் கூறியுள்ளார். இதனையடுத்து இந்த துடுப்பினைக் கொண்டு தன்னுடைய மனைவி கிரிக்கெட் விளையாடினார். அப்பொழுது இந்த துடுப்பை நான் மிகவும் மதிக்கிறேன். அது என்னுடைய மிகபபெரிய சொத்து என்று கூறுவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். எனவே இனி இதில் விளையாட வேண்டாம் என்று கூறியுள்ளார் என்பது மிகப் பெருமைக்குரிய ஒரு செய்தியாகவே கருதப்படுகிறது.

# தனபாலன் ஞாபகார்த்த துடுப்பாட்ட போட்டி

தனபாலன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண துடுப்பாட்டப் சுற்றுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இப் போட்டியில் மொத்தமாக பன்னிரண்டு அணிகள் மோதவுள்ளன.

ஐந்து பேர் அடங்கலாக 6 பேர் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி சென்றல், சென்.ஜோன்ஸ், பற்றிக்ஸ் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு வெற்றிக் கேடயம் வழங்கப்படும்.

# அகவை 2-ல் பங்குச்சந்தை யாழ்.கிளை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ்ப்பாணக் கிளையானது 2-வது ஆண்டுப் பூர்த்தியை கொண்டா டுகிறது.

யாழ்.மக்களுக்கு, புதிய முதலீட்டு வாய்ப்பு -புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை எனும் மகுட வாசகத்துடன் சேவையாற்ற திறக்கப்பட்ட பரிவர்த்தனையின் யாழ்.கிளை இன்று தனது 2-வது ஆண்டு நிறைவைப் பூர்த்தி செய்துள்ளது.

யாழ்.கிளையில் 6 பங்குத் தரகர் நிறுவனங்களினாலும் 1400 இற்கும் மேற்பட்ட பிணைகள் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அகவை இரண்டினை முன்னிட்டு பங்கு முதலீடுகள் தொடர்பான பொதுக் கருத்தரங்கு இன்று மாலை 3.30 - 4.30 வரை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை யாழ்.கிளையின் கேட்போர் கூடத்தில் இடம் பெறும் என யாழ்.கிளை முகாமையாளர் மு.திலீபன் தெரிவித்துள்ளார்.

# பாதுகாப்பு...

வேண்டியதன் பொறுப்பு பொலிஸார் வசம் செல்கின்றது. எனவே இவ்வாறான பொறுப்புக்களை கையேற்க காவற்துறையினர் எத்தகைய தயார் நிலையில் உள்ளனர் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இதனிடையே, காவற்துறையினர் பொறுப்புடன் 'சேவையாற்றாதபட்சத்தில் நாடு எதிர்பார்த்திருக்கும் காவற்துறை சேவையை வழங்க முடியாது என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய தெரிவித்துள்ளார். (எ-11)

# தமிழீழம் குறித்து...

இந்நிலையில், தர்மபுரியில் ம.தி.மு.க நிர்வாகி ஒருவரின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே வைகோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் தமிழ் மக்களை அழிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட படை நடவடிக்கைகளுக்கான அனைத்து உதவிகளையும் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான மத்திய அரசு செய்திருந்தது.

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தி.மு.க உள்ளிட்ட கட்சிகளும் அதற்கு துணை நின்றன.

இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்கள் கொடுத்து உதவியபோதும் சரி, இனப் படுகொலைகள் நடந்தபோதும் சரி அவற்றைத் தடுத்து நிறுத்த குரல் கொடுக்காமல் கருணாநிதி மௌனமாக இருந்தார். அப்போதெல்லாம் மௌனமாக இருந்துவிட்டு தற்போது தமிழீழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று கருணாநிதி தெரிவிக்கின்றார். ஆனால் தமிழீழம் குறித்துப் பேசுவதற்கு அவருக்கு எவ்வித தகுதியும் இல்லை.

அதேவேளை, ஈழத் தமிழர்களுக்கு தமிழீழத்தை உருவாக்கி விட்டுத் தான் உயிர் துறப்பேன் என கருணாநிதி சென்னையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கூறியுள்ளார்.

1980ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்டடெசோ இயக்கத்தை மீண்டும் ஆரம்பித்து தமிழீழத்தை உருவாக்குவதே தனது எஞ்சிய வாழ்நாளின் இலட்சியம் எனக் குறிப்பிட்டுள்ள கருணாநிதி, தமிழீழத்தை உருவாக்கிவிட்டுத் தான் இவ்வுலகை விட்டுச் செல்வேன் எனவும் தனது உரையில் தெரிவித்துள்ளார். (எ-11)

# மரண அறிவித்தல்

## திருமதி கதிராசிப்பிள்ளை சிற்றம்பலம்

விழிசிட்டி தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், இணுவில் தெற்கு, சுன்னாகத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிராசிப்பிள்ளை சிற்றம்பலம் அவர்கள் நேற்று வியாழக்கிழமை (26.04.2012) அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான சுப்பிரமணியம்-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், அமரர்களான கனகராயர்-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கனகராயர் சிற்றம்பலத்தின் அன்பு மனைவியும், முருகையாவின் (ஓய்வுபெற்ற இலிகிதர், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்) பாசமிகு தாயாரும், திருமதி செ.முருகையாவின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி செல்லமுத்து, திருமதி தங்கம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியை -யா/மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சதீஸ்பாலமுருகன்(பொறியியலாளர் -அமெரிக்கா),பாலநிதி (இணையத்தள வடிவமைப்பாளர் -நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், கோகிலாதேவி (ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்-வலிகாமம் கல்வி வலயம்), ஜனார்த்தனன்(உத்தியோகத்தர்-பிராந்திய தொலைத்தொடர்பு அலுவலகம், யாழ்ப்பாணம்), கௌசிதகி(ஆசிரியை -யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி) ஆகியோரின் ஆசையம்மாவும் ,பிரவீணன் (விரிவுரையாளர்-சிட்னி பல்கலைக்கழகம்,அவுஸ்திரேலியா), கிசோரன், கிருசாணு, கச்சபி, ஜஷாகன், நயனி,திவானி, குகன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.04.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவிலில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விழிசிட்டி கொப்பிலாவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் தெற்கு,**
**சுன்னாகம்.**

(8249)

**தகவல்:**
**சி.முருகையா (மகன்)**

# கோதுமை மாவின்...

உடனடியாக அமுலுக்குவரும் வகையில் கோதுமை மாவின் விலை ரூபாய் 8.50ஆல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தற்போதைய புதிய விலை ரூ.79.50 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே எரிபொருள் விலையேற்றம் மற்றும் போக்குவரத்துச் செலவினம் என்ற காரணங்களைக் காட்டி அரசாங்கம் கோதுமை மா உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகளை அதிகரித்திருந்தது.

இந்த நிலையில் எதிர்க்கட்சிகளும் இது தொடர்பில் கடந்த புத்தாண்டு தினத்திற்கு முன்பிலிருந்தே அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என அறிவித்து வந்தன.

அதனை உறுதி செய்யும் வகையில் அரசாங்கம் நேற்று கோதுமை மாவின் விலையை அதிகரித்துள்ளது.

ஏற்கெனவே பணக்காரர்களின் உணவாகிவிட்ட பாண் 60 ரூபாய்க்கு மேலான விலைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேகத்தில் பொருட்களின் விலைகள் அதிகரிக்குமாயின் விரைவில் பாணின் விலை 100 ரூபாய் என்ற மட்டத்தில் விலை நிர்ணயம் செய்யப்படும் என்பது பொருளியல் வல்லுநர்களின் கருத்தாக இருக்கிறது.

இதனிடையே பெரிய வெங்காய உற்பத்திக்கான விதைகளையும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் நிறுத்தியுள்ளதாக விவசாய துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பானது ஏழை மக்களுக்கு பாரிய பாதிப்பினை ஏற்படுத்தும் என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். (எ-11)

# முன்னாள் எம்.பி...

முன்னாள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

நேற்று தந்தை செல்வாவின் நினைவுப் பேருரை நிகழ்வு ஆரம்பமாவதற்கு முன்பாக சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலுக்கு வந்த சிவாஜிலிங்கம் பந்தலுக்குள் அமர்ந்திருந்த இராசதுரையை நோக்கியவாறு கறுப்புத் துணியை காட்டியதோடு அவரை நோக்கி கறுப்புத் துணியை எறிந்ததோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஆதரித்தவனே தமிழ் மக்களின் துரோகி, யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறு, யாழ்ப்பாணத்தில் துரோகிகளுக்கு இடமில்லை என கோஷமிட்டார்.

இதனால் நேற்றைய கூட்டத்தில் சிறிது நேரம் அமளி ஏற்பட்டது.

இதேவேளை, தந்தை செல்வாவின் நினைவு நாளில் உரையாற்றியவர்கள் சிவாஜிலிங்கத்தை கண்டித்ததோடு இராசதுரை துரோகியல்ல சிவாஜிலிங்கம் தான் துரோகி எனவும் கூறிக் கொண்டனர். (எ-6)

# ஒரு கிலோ...

அடிப்படையிலேயே குறித்த நபர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் கஞ்சா எவ்வாறு எந்த வழியாக கிடைத்தது என்றும் இக்கடத் தல்களுக்கு பின்னணியாக செயற்படுகின்றவர்கள் யார் என்றும் யாரிடம் கொடுப்பதற்காககஞ்சா வைத்திருந்தார் எனவும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக இளவாலை பொலிஸார் தெரிவிக்கின்றனர். (எ-4)

# டெண்டுல்கர்...

250 உறுப்பினர்களைக் கொண்ட இந்தியாவின் மாநிலங்களவையில் 12 உறுப்பினர்கள் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்றனர்.

இது கலை, இலக்கியம், விஞ்ஞானம், சமூகசேவை போன்றவற்றில் மிகச் சிறந்து விளங்குபவர்களுக்காக வழங்கப்படுவது ஆகும்.

இந்த அடிப்படையில் தெரிவு செய்யப்படும் முதலாவது விளையாட்டு வீரர் ஆவதற்கான வாய்ப்பு சச்சின் டெண்டுல்கருக்கு கிட்டியுள்ளது.

மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான நியமனத்தைசச்சின்டெண்டுல்கர்ஏற்றுள்ளதை அடுத்து அவரது நியமனம் பற்றிய விபரத்தை பிரதமர் அலுவலகம் உள்விவகார அமைச்சிற்கு தற்போது அனுப்பி வைத்துள்ளது.

அங்கிருந்து சச்சின் டெண்டுல்கரின் நியமனம் பற்றிய விபரம் ஜனாதிபதி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படும். இந்தியாவின் ஜனாதிபதி-நியமனம் பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தலை வெளியிடுவார். (எ-11)


## SPOKEN ENGLISH WITH DIPLOMA CERTIFICATE

ஆங்கிலம், பிரெஞ்சு புதிய பிரிவு

ஆரம்பம் 28.4.2012 சனிக்கிழமை

அரச, தனியார் அலுவலர், ஆசிரியர், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர், பட்டதாரிகள், இளைஞர், யுவதிகள், வெளிநாடு செல்வோர் பயிற்சியில் சேரலாம்

(C-6467)

ஆங்கிலம் | பிரெஞ்ச்

பிரிவு 1 - காலை 9 - 10 | காலை 11 - 12

பிரிவு 2 : மாலை 4 - 5 | வெறும் 25% கட்டணம்

கட்டணம் : ரூபா 3000/- காலம் 1 – 3 மாதம்

முதல் வகுப்பு இலவசம்

MyWay 182, STANLEY RD, JAFFNA 077 33 63 456



## வெற்றிடங்கள்

கொழும்பை தலைமையகமாகக் கொண்ட கணனி நிறுவனத்தினது பின்வரும் கிளைகளுக்கு குறிப்பிட்ட பதவிகளுக்கு வேலையாட்கள் தேவை

| இடங்கள் | பதவி வெற்றிடங்கள் |
|---|---|
| ● யாழ்ப்பாணம் | ● கணக்கு உதவியாளர் ஆண்/ பெண் (கணனி (அறிவு முக்கியம்) |
| ● வவுனியா | |
| ● திருகோணமலை | |
| ● கிளிநொச்சி | ● தொழில்நுட்பவியலாளர் |
| ● நெல்லியடி | ● சந்தைப்படுத்தும் பிரதிநிதி |

அனைத்துப்பதவிகளுக்கும் 01 - 02 வருட அனுபவம் எதிர்பார்க்கப்படுகின்றது. தகுதியானவர்கள் தங்களது சுயவிபரங்கள டங்கிய விண்ணப்பத்தினைக் கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும்.

MICRO PC SYSTEMS

No:115C,W.A.Silva Mawatha,
Wellawatha.
T.P-021 222 5893
E.mail:-mail@micropcsystems.com



## கடை வாடகைக்கு

யாழ் நகருக்கு மிக அண்மையில் K.K.S வீதியில் சகல வசதிகளுடனும் கூடிய 100 அடி விஸ்தீரணமுள்ள கடை உடன் வாடகைக்கு உண்டு.

உடன் தொடர்பு கொள்ள:-
0776354574
0776223630

குளிரூட்டப்பட்ட கார் (அலியன்) வான் என்பன உங்கள் தேவைகளுக்கேற்றாற் போல் குறைந்த செலவில் வாடகைக்கு விடப்படும்.

TP:- 0776354574
0776223630

(8247)



## பராமரிப்பாளர் தேவை

இங்கிலாந்தில் சிறுநீரக சத்திர சிகிச்சை செய்ய இருக்கும் வயோதிப தாயாரை 6 மாத காலம் பராமரிப்பதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (உண்மையாக வேலை செய்ய விருப்பமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்)

ரவி - 0728032280

(8243)



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 2-5-2012 | Batch II: 5-5-2012 | Batch III : 7-5-2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar (Quick Learning Course) — 1 ½ Months

Diploma In English — 2 ½ Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்

A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards — 2½ Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287 |
|---|---|---|

Hot Lines: 0777-585913, 0777-222422, 071-4299935, 0777-730074



## Agent தேவை

Elephant House Ice Cream நடமாடும் சேவை (Mobile Agent) கைமாற்றிக் கொடுக்கப்படும்.

தொடர்பு:-
56, மணிக்கூட்டு வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
077 9910154
021 4918407

(8245)



## A/L வரலாறு 2014 Batch

ஆரம்பம் : 28.04.2012

ஆசிரியர் M. பத்மன்
B.A(Hons) History, M.A History

கற்பிக்கும் இடங்கள்
உயர்கலைக் கல்லூரி குளப்பிட்டி
D.M.I யாழ்ப்பாணம்
BITSMANS மானிப்பாய்

* ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்

(C-6449)



## D.C.S. மானிப்பாய்

மகளிர் கல்லூரி அருகாமை

A/L 2014
கலை, வர்த்தகப் பிரிவுகள்

| | |
|---|---|
| கணக்கீடு R. வின்சன் | தமிழ் A.K. கீர்த்திராஜன் |
| பொருளியல் M.C, சுதாகரன் | இ/நாகரிகம் S. சந்திரன் |
| வணிகக்கல்வி S. பிரதீபன் | புவியியல் S. கிருஸ்னா |
| அரசறிவியல் T. திருமுருகன் | நாடக/ அரங்கு S.R. றமேஸ் |
| வரலாறு S.S. தாஸ் | அளவையியல் P. கமல் |

ஆரம்பம் - 28.04.2012 சனி காலை 8 மணி
2013 - துரித மீட்டல் வகுப்புக்கள்
2012 - அலகுரீதியான Paper Class
ஆரம்பம் - 29.04.2012 ஞாயிறு 3.00 pm

(8242)



## நேற்று வரை.... 16 குடும்பங்கள் ஆஸ்திரேலியா பயணமாகின

எமது முன்மாதிரியான விசா ஆலோசனைநிறுவனத்தில் ஆலோசனை பெற்று 16 குடும்பங்களைச் சேர்ந்த 63 பேர் இதுவரையில் ஆஸ்திரேலியா பயணமாகியுள்ளனர்.

அவர்களுக்குக் குறைந்த கட்டணத் தங்குமிட வசதி, பகுதிநேரத் தொழில் வாய்ப்பிற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்னும் என்ன தாமதம்

5 வருட ஆஸ்திரேலியா குடும்ப விசா ஆலோசனைகளுக்கு இன்றே நாடுங்கள்.



THISAIKADDI (PVT) LTD.
504, Hampton Street,
Malborne, Australia.
Land phone - 0061390437100

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்டெட் (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
தலைமைக் காரியாலயம்
இல. 37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 221 9016
கிளைகள்: 115A, இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. 021 2285544
இல. 22A, பிராங்பெட் பிளேஸ் பம்பலப்பிட்டி. 0112508443, 0756438553

(C-6448)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.04.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.